

# விலங்குகள் சொல்லும் விந்தைக் கதைகள்

(வன விலங்குகள் வாரவிழா நினைவாக வெளியிட்ட நூல்)

பாபநாசம் குறள்பித்தன்

# விலங்குகள் சொல்லும் விந்தைக் கதைகள்

எங்களின் ஒற்றுமை உங்களிடம்
என்று வந்து சேர்ந்திடுமோ?

*-விலங்குகள்*

பாபநாசம்

## குறள்பித்தன்

## ஸ்ரீ கமலம் பதிப்பகம்

*புத்தகம் வெளியீடுவோர் மற்றும் விற்பனையாளர்கள்*
*8, சிதம்பரசாமி கோயில் முதல் தெரு,*
*மைலாப்பூர், சென்னை - 600 004.*
*தொலைபேசி: 466 25 99*

# நூல் விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூலின் பெயர் | **விலங்குகள் சொல்லும் விந்தைக் கதைகள்** |
| ஆசிரியர் | **பாபநாசம் குறள்பித்தன்** |
| மொழி | தமிழ் |
| பொருள் | மனிதநேய நீதிக்கதைகள் |
| பதிப்பு | முதல் |
| வெளியீடு | அக்டோபர் – 2000 |
| உரிமை | ஸ்ரீ கமலம் பதிப்பகம் |
| நூலின் அளவு | 15 x 9.5 செ.மீ |
| தாள் | 11.6 kg. creamwove |
| நூல் கட்டு | தாள் அட்டை |
| அச்சுப்புள்ளி | 12 புள்ளி |
| பக்கங்கள் | 208 |
| விலை | **ரூ. 50–00** |
| அச்சிட்டோர் | மணி ஆப்செட்,<br>சென்னை–600 005. |
| அச்சுக்கோப்பு | ப்ரைம் பிரிண்டர்ஸ்,<br>சென்னை – 600 005<br>✆ : 844 03 96 |
| ஓவியம் | இரவி |
| வெளியிட்டோர் : | ஸ்ரீ கமலம் பதிப்பகம்,<br>8, சிதம்பரசாமி கோயில் முதல் தெரு,<br>மைலாப்பூர், சென்னை – 600 004. |



# வாழ்த்துரை

இனிய வணக்கம்!

கவிஞரும், எழுத்தாளருமான பாபநாசம் குறள்பித்தனை 'தாய்' வார இதழில் துணையாசிரியராக இருந்த காலத்திலிருந்தே நானறிவேன்.

இவர் **'குட்டீஸ்'**களுக்கு கதைச் சொல்வதில் தற்போது முன்னணியில் நிற்பவர்.

இதுவரை குழந்தைகளுக்காக இவர் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

அதுவும் விலங்குகளையும், பறவைகளையும் ஈடு படுத்தி நூற்றுக்கணக்கான சிறுவர் கதைகளை எழுதி சாதனையே செய்திருக்கிறார்.

இவர் **தினமலர் - சிறுவர்மலர்** இதழில் எழுதிய சிறு கதைகளில் முப்பது கதைகளைத் தொகுத்து இந்த நூலில் தந்திருக்கிறார்.

ஒவ்வொரு கதையும் குழந்தைகளுக்கு மட்டுமின்றி பெரியோருக்கும் நீதியைச் சொல்வதாக இருப்பது, இத் தொகுப்பின் சிறப்பு.

பாபநாசம் குறள்பித்தன் இதுபோன்ற கதைகளை றைய எழுதி மேன்மேலும் உயர வேண்டும் என்று வாழ்த்தி ழ்கிறேன்!

அன்புடன்

**அந்துமணி**

# என்னுரை....

இனிய வணக்கம்.

மனிதர்களை எனக்குப் பிடிக்கும். அதே நேரம் விலங்குகளையும், பறவைகளையும் மிகவும் பிடிக்கும்.

காரணம், அவைகளை நாம் தீங்கு செய்யாதபோது தீங்கு செய்யாது. அவைகளிடம் ஒழுக்கமும், நேர்மையும், அன்பும், பாசமும், ஒற்றுமையும் ஓங்கி இருக்கின்றன. ஆனால், மனிதர்களிடம்?...

நான் இந்த நூலில் உள்ள கதைகளில் விலங்குகளையும், பறவைகளையும் வைத்து சிறுவர்களுக்காக சில நீதிகளை சொல்ல முனைந்திருக்கிறேன்.

தினமலர்-சிறுவர் மலரில் அவ்வப்போது நான் எழுதிய 'குட்டீஸ்' களுக்கான சிறுகதைகளே இத் தொகுப்பு நூல்

தினமலர்-வாரமலர்- சிறுவர் மலர்களின் கதாநாயகனாக திகழும் **திருமிகு. அந்துமணி** அவர்கள் எனக்கு உதவிவரும் செயல்களுக்காக என் நன்றியறிதலையும்,வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த நூலினையும் அவருக்கே **காணிக்கை** யாக்கிமகிழ்கிறேன்.

மேலும், சிறுவர் மலரில் என்னை எழுத ஊக்கப் படுத்திவரும் உதவியாசிரியை **திருமதி.ஜெனிபர்** அவர்களுக்கும் இந்த நூலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ள **ஸ்ரீகமலம் பதிப்பக** உரிமையாளர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த வணக்கத்தையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

நட்புடன்
பித்தன்
2000 /01 /10

16/52, பக்தவத்சலம் காலனி முதல் தெரு,
வடபழனி.
சென்னை - 600 026.
போன் 471 47 46 - 484 31 35 PP

# பதிப்புரை

இன்றைய அவசர உலகில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை படிப்பது என்பது மிகவும் குறைவு. ஆனால் தினசரிகளில் 'தினமலர்' வாரமலர் - சிறுவர் மலர் வெகு சிறப்பு. அதில் வரும் 'குட்டீஸ்' கதைகளோ, குழந்தைகள் முதல் பெரியவர் வரை ஒரு ஈர்ப்பு. எனவேதான் 'குட்டீஸ்' கதைகளை ஒரு நூலாக வெளியிட விரும்பி அதன் ஆசிரியர் **திரு.குறள்பித்தனை** அணுகியபோது மகிழ்வோடு இசைந்ததுடன் தினமலர் - வாரமலர் - சிறுவர்மலர் பொறுப்பாசிரியர் **திருமிகு. அந்துமணி** அவர்களிடம் அனுமதி வாங்கிக் கொடுத்ததுடன் வாழ்த்துரையும் வாங்கித்தந்தார். **திருமிகு. அந்துமணி** அவர்களுக்கும், அழகுற கணினி அச்சிக் கோர்த்திட்ட **பிரைம் பிரிண்டர்ஸ்** ஊழியர்களுக்கும் அழகுற ஓவியம் வரைந்திட்ட **இரவி** மற்றும் சிறப்புடன் அச்சிட்ட **மணி ஆப்செட்** அனைவருக்கும் நன்றி. இந்நூலில் வரும் முப்பது கதைகளில், ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு வழியில் மனிதர்களுக்கு **மனிதநேயம், அன்பு, பாசம்** இவைகளை உணர்த்துவதால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடிக்கும். எனவே வாசக நேயர்கள் வாங்கிப்படித்து ஆதரிப்பிர், பயன்பெறுவீர்.

**பதிப்பகத்தார்**

# பொருளடக்கம்


| வ.எண். | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | கரடி தந்த பரிசு! | 7 |
| 2. | சிங்கத்தின் அமைச்சரவை! | 19 |
| 3. | கண்டுபிடிப்பு திலகம்! | 26 |
| 4. | வேலுவும், வேட்டை நாயும்! | 33 |
| 5. | விலங்குகள் கொண்டாடிய 2000! | 46 |
| 6. | கொழு கொழு ஆடு! | 53 |
| 7. | கோழிக்குழம்பு! | 58 |
| 8. | புலி எங்கே சார்? | 67 |
| 9. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! | 75 |
| 10. | பாட்டி காக்கா! | 79 |
| 11. | போலீஸ் ஸ்டேசனுக்கு போன யானை! | 84 |
| 12. | தெரு நாய் விமானத்தில் பறந்தது! | 88 |
| 13. | நரியை ஏமாற்றிய கரி! | 90 |
| 14. | பழநாடு! | 98 |
| 15. | காட்டிலே நியூ இயர்! | 106 |
| 16. | முயல்குட்டியின் கிறிஸ்துமஸ் டிரஸ்! | 111 |
| 17. | சிட்டுக்குருவி...சிட்டுக்குருவி...! | 118 |
| 18. | பூனைத்தம்பி! | 125 |
| 19. | மனம் திருந்திய ஓநாய்! | 131 |
| 20. | கிளி மிஸ்! | 140 |
| 21. | குவிஷ் டைம்! | 150 |
| 22. | குருவியும் குரங்கும்! | 154 |
| 23. | ஏர் உழும் நாய்கள்! | 162 |
| 24. | உதவி! | 166 |
| 25. | தங்க முட்டை! | 171 |
| 26. | செஸ்போர்ட்! | 175 |
| 27. | ரங்கா! | 181 |
| 28. | கண்ணன் வீட்டு காகம்! | 191 |
| 29. | போலீஸ் ஸ்டேசனுக்கு போன குரங்குகள்! | 198 |
| 30. | மனைவியை கொன்ற நரி! | 202 |

# 1. கரடி தந்த பரிசு!



தேவியூர் என்ற ஊரில் சுப்பு என்பவர் வாழ்ந்து வந்தார். இவரது மனைவியின் பெயர் அமுதகனி. இந்த தம்பதியர் களுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந் தனர். அதில் ஒரு குழந்தை மட்டும் உடல் ஊனமுற்றி ருந்தது. சொந்த வீடும், விளைச்சல் நிலமும் இருந்ததால் எந்தவித கஷ்டமும் இல்லாது அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

மூன்று குழந்தைகளில் கடைசிக் குழந்தையான தயாளன் மீது பெற்றோருக்கு அதிக பாசம் காரணம், அவனால் சரியாக நடக்க முடியாது என்பது தான்.

மூன்று குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். முருகனும் வடிவேலும் வயல் வேலை களை கவனித்துக் கொண்டனர். தயாளன் மட்டும்

வீட்டிலுள்ள சின்னச்சின்ன வேலைகளை கவனித்து வந்தான்.

வயது வந்ததும் முருகனுக்கும் வடிவேலுக்கும் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர். திருமணம் செய்து கொண்டதுமே தம்பி தயாளன் மீது இருந்த பாசம் அண்ணன்கள் இருவருக்கும் குறைந்து போனது.

தாய்க்கும், தந்தைக்கும் வயதாகிப் போனதால், வயல் வேலைகளில் அவர்களால் ஈடுபட முடிய வில்லை. அதனால், அவர்கள் வீட்டிலேயே இருந்தனர்.

ஒரு நாள் முருகன் சொன்னான். “அம்மா, உங்க ளுக்கும் அப்பாவிற்கும் நானும், வடிவேலுவும் சோறு போடுகிறோம். வளர்ந்தும் இன்னும் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு இருக்கும் தயாளனுக்கு இனி எங்களால் சோறு போட முடியாது. அவனை எங் காவது போய் பிழைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்.” என்றனர்.

அதைக் கேட்டு தாயும், தந்தையும், கண்கலங்கினர். வேதனையோடு தாய் பேசினாள், “முருகா! அவனும், உங்களைப் போல் எங்களுக்குப் பிள்ளைதானே. அவனைப் பிரிந்து எப்படி எங்களால் வாழமுடியும்? அவன் நடக்க முடியாதவன் எங்கே போவான்!”

“அப்படி என்றால் நீங்களும் அவனோடு எங் காவது போய் விடுங்கள்.” என்றான் வடிவேலு.

அதைக்கேட்டு வயதான இருவரும் எதுவும் சொல்ல முடியாத நிலையில் மவுனமாக இருந்தனர்.

அப்போது அங்கே மாட்டுக்கு கயிறு பின்னிக் கொண்டிருந்த தயாளன் சொன்னான். "அம்மா நீங் களும், அப்பாவும் அண்ணன்களோடு இருங்கள். நான் ஒருவன் தானே, எங் காவது போய் பிழைத்துக் கொள் கிறேன். எனக்காக அண்ணன்கள் சிரமப்பட வேண் டாம். நான் நாளை காலையில் என் பிழைப்பைத்தேடி போய் விடுகிறேன்." என்றான்.

தயாளன் சொன்னதைக் கேட்டதும், பெற்றோர் மேலும் கண் கலங்கினர்.

காலையில் தாய் கட்டிக் கொடுத்த கட்டுச் சோற்றை எடுத்துக் கொண்டு தயாளன் வீட்டைவிட்டு வெளியேறி விட்டான்.

ஒரு கால் ஊனமான தயாளன் மிகுந்த சிரமத் தோடு வெளியூரை நோக்கி நடந்து கொண்டு இருந்தான்.

மதிய நேரம் நெருங்கியதால் தயாளனுக்கு பசி வந்தது. எங்காவது தண்ணீர் இருந்தால் அங்கே சாப்பி டலாம் என்று எண்ணியபடியே வேர்வை வழிய சென்று கொண்டு இருந்தான்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு சின்ன அருவி ஓடு வதைக் கண்டான். தாய் கொடுத்த கட்டுச்சோற்றை ஒரு மரத்தடியில், வைத்து விட்டு அருவியில் சென்று கை, கால்களையும், முகத்தையும் களைப்பு நீங்க கழுவிக் கொண்டு வந்து உணவை உண்டான்.

தயாளன் சாப்பிட்டு முடித்ததும் சோர்வில் அப்படியே சிறிது நேரம் அமர்ந்திருந்தான். அப்போது அவன் அமர்ந் திருந்த பக்கத்திற்கு அருகே ஏதோ சத்தம் வரவே திடுக்கிட்டுப் போனான்.

அவன் தனியே இருந்ததால் அவனுக்குள் பயம் வந்தது. மேலும், அங்கிருந்து அடிக்கடி முனகல் சத்தம் கேட்டது. அந்த சத்தமும் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. இது மனிதர்கள் சத்தமும் இல்லை என்பதை உணர்ந்ததால் மேலும் பயப்பட தொடங்கினான் தயாளன்.

உடலால் தயாளன் ஊனமுற்றவனாக இருந் தாலும் உள்ளத்தால் துணிவு கொண்டவன் என்பதால், என்ன சத்தம் அது என்பதை அறிய ஆவல் கொண் டான். அதனால், எழுந்து மெல்ல சத்தம் வந்த திசையை நோக்கி சென்றான்.

அங்கே பள்ளத்தில் ஒரு கரடியும், ஒரு பாம்பும், ஒரு பருந்தும் இருந்தன. அம்மூன்றும் மிகவும் சோர் வாக இருந்தன.

தயாளனைக் கண்டதும், "மனித நண்பனே! நாங்கள் மூவரும் நேற்று அடித்தப் பெரும் புயலில் இந்தப் பள்ளத்தில் தள்ளப்பட்டு விட்டோம். அதனால் நேற்று முதல் நாங்கள் பட்டினியாகக் கிடக்கிறோம். எங்களால் இங்கிருந்து மேலேயும் வர முடியவில்லை. எப்படியாவது நீ எங்களை காப்பாற்று." என்று கரடி சோகத்தோடு வேண்டிக் கொண்டது.

அப்படியே பாம்பும், பருந்தும், "ஆம் நண்பனே எப்படியாவது எங்களைக் காப்பாற்று நாங்கள் உனக்கு என்றும் நன்றியோடு இருப்போம்." என்று கேட்டுக் கொண்டன.

தயாளனின் பயம் போனது. உதவும் மனது வந்தது. எப்படி இந்தப் பள்ளத்தில் இருந்து இவை களைக் காப்பாற்றுவது என்று சிந்தித்தான். அவன் சிந்தனையோடு நிற்பதைக் கண்ட கரடி ஏக்கத்தோடு கேட்டது." என்ன நண்பனே! மனிதர்களைப் போல நாங்களும் செயல் முடிந்ததும் நன்றி மறந்துவிடுவோம் என்று எண்ணுகிறாயா?" என்றது.

"நான் மனிதர்களிடம் வைத்திருக்கும் நம்பிக் கையை விட உங்கள் மீது அதிக நம்பிக்கைக் கொண் டவன். நிச்சய மாக உதவுகிறேன் நண்பர்களே! அதற் காகத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்." என்று தயாளன் சொன்னதைக் கேட்டதும் மூன்றும் மகிழ்ச் சியால் துள்ளின.

"நண்பர்களே! நீங்கள் மூவரும் பள்ளத்தில் உள்ள அதோ அந்த மூலையில் ஒதுங்கிக் கொள்ளுங் கள் என்று தயாளன் சொன்னதும், மூன்றும் அப்படியே ஒதுங்கிக் கொண்டன.

உடனே தயாளன் அவன் பக்கத்தில் இருந்த ஒரு பெரிய பாறையை பள்ளத்தை நோக்கி உருட்டி விட அது போய் தொப்பென்று விழுந்தது. அதைத் தொடர்ந்து மேலும் மேலும் சில பாறைகளை உருட்டி விட்டான். அவைகள் எல்லாம் மாடிப்படிகளைப் போல உருவாகி விட்டது.

அப்போது தயாளன் சொன்னான். "கரடி நண்பனே! நீங்கள் இப்போது பாறைகளின் மீது காலை வைத்து அப் படியே மேலே ஏறி வாருங்கள்," என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் கரடி ஒரு கையில் பாம்பையும், மறு கையில் பருந்தையும் தூக்கிக் கொண்டு மெல்ல மேலே ஏறியது.

கரடி மேலே ஏறி வந்ததும் தயாளன் அதை மகிழ்ச்சி யோடு தாவி அணைத்துக் கொண்டான்.

கரடி தன் கையில் இருந்த பாம்பையும், பருந் தையும் கீழே விட்டது.

"ரொம்ப நன்றி நண்பனே!" என்று மூன்றும் கூறின.

"இதில் நன்றி சொல்ல என்ன இருக்கு நண்பர் களே? நீங்கள் துன்பத்தில் மாட்டிக் கொண்டீர்கள். என்னால் முடிந்த சிறிய உதவியைச் செய்தேன் அவ்வள வுதான்." என்றான் தயாளன்.

"நண்பனே! தனியாக இந்தக் காட்டிற்குள் நீ ஏன் வந்தாய்?" என்று கரடி கேட்டது.

தயாளன், தன் தாய், தந்தையைப் பற்றியும், அண்ணன் கள் சொன்னதையும் கூறினான்.

"அப்படியா? என்னதான் அறிவியல் வளர்ந் தாலும், நாகரிகம் வளர்ந்தாலும் இந்த மனிதர்களின் மனது மட்டும் ஏன்தான் இன்னும் மாறாமல் இருக்கிற தோ தெரியவில்லை. நீ கூறியதைக் கேட்டதும் எனக்கு மனது மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்றது கரடி!

"ஆம் நண்பரே! எங்களுக்கும் மனது கஷ்டமாகவே இருக்கிறது. எங்களால் ஏதேனும் உதவி செய்ய முடிந்தால் செய்கிறோம். நீ கவலைப்படாது உன் பயணத்தைத் தொடங்கு...." என்று பாம்பும், பருந்தும் கூறின.

"ஆம், நண்பனே! உன் நல்ல மனதிற்கு எந்த குறையும் வராது. நீ தன்னம்பிக்கையுடன் உன் பயணத்தைத் தொடங்கு. எங்கள் வாழ்த்துக்கள்" என்றது கரடி.

அதைக் கேட்ட தயாளன். "மிக்க நன்றி நண்பர்களே" என்று சொல்லி தயாளன் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

மாலை நேரம்-

தயாளனுக்கு மிகவும் சோர்வாக இருந்தது. இருட்டு வதற்குள் எப்படி இந்தக் காட்டைக் கடந்து அடுத்த ஊருக் குப் போய் சேரப்போகிறோம்? என்று எண்ணிய படியே நடந்தவனின் கண்ணில் ஒரு பாழடைந்த மண்டபம் தெரிந்தது.

மண்டபத்தை அடைந்தவன், இந்த இரவை இங்கேயே பாதுகாப்பாக கழித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய் தான். அதே நேரம் பசி வயிற்றைப் பிசைந்தது. கொண்டு வந்த சோறும் மதியமே சரியாகப் போனதால் பட்டினியுடன் மண்டபத்தின் ஒரு மூலையில் படுத்துக் கொண்டான்.

காலையில் காட்டில் இருந்த பறவைகள் எழுப்பிய ஒலிகளைக் கேட்டு தயாளன் எழுந்து கொண்டான்.

தன்தாய், தந்தையை நினைத்துக் கொண்டு பயணத்தை மீண்டும் தொடங்கினான்.

அப்போது "நண்பனே! நண்பனே! நில்" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான். அங்கே...

வேக வேகமாக கரடி ஓடி வந்து கொண்டிருந்தது. கரடியைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டான்.

அங்கே வந்த கரடி, தான் கொண்டு வந்த ஒரு பையை அவன் கைகளில் கொடுத்தது.

"நண்பனே! பல நாட்களுக்கு முன்பு நான்கு திருடர்கள் இந்த பையை எடுத்துக் கொண்டு காட்டு வழியே வந்தார்கள். அப்போது என்னைப் பார்த்து பயந்து அவர்கள் ஓடும்போது போட்டு விட்டார்கள். அதை எடுத்து நான் ஆலமரத்து பொந்தில் மறைத்து வைத்திருந்தேன். நேற்று எனக்கு இது நினைவில் இல்லை. அங்கு போனதும் தான் நினைவு வந்தது.

"இரவு நீ இந்தக் காட்டைக் கட்டாயமாக கடந்திருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அதனால், எப்படியும் உன்னை சந்தித்து விடலாம் என்பதால் தான் ஓடோடி வந்தேன்" என்று சொன்னது கரடி.

கரடி கொடுத்த பையைத் திறந்து தயாளன் பார்த்தான். தங்கக் காசுகளும், தங்க நகைகளும் ஏராளமாக இருந்தன. அதைக் கண்டு மகிழ்ச்சியோடு தயாளன் சொன்னான். "நண்பனே! எல்லாம் தங்கம்" என்றான்.

*"அப்படியா? மகிழ்ச்சி என் உயிரைக் காப்பாற்றிய உனக்கு என் சிறிய பரிசு, இதை நீ எடுத்துக் கொண்டு போய் நலமாக வாழ்க," என்றது கரடி.*

*"மிக்க நன்றி நண்பரே!" என்றான்.*

*"சரி, ஏதாவது சாப்பிட்டாயா?" என்று கரடி கேட்டது.*

*"இல்லை நண்பரே! பசிதான். மரங்களில் பழங்கள் இருக்கின்றன. என்னால் ஏறி பறிக்க முடியாதே!" என்றான் பரிதாபமாக.*

*"வருத்தப்படாதே! இதோ வருகிறேன்..." என்று சொல்லி பக்கத்தில் இருந்த மாமரத்தில் ஏறி சில பழங்களைப் பறித்து வந்து தயாளனிடம் கரடி கொடுத்தது.*

*அதை தயாளன் வாங்கி வயிறு நிரம்பச் சாப் பிட்டான். பின், "மிக்க நன்றி நண்பரே!" என்று சொன்னான்.*

*"சரி நண்பரே! நீ புறப்படு. என் குழந்தைகள் எனக்காக காத்திருப்பார்கள்." என்று சொல்லி கரடி புறப்பட்டது.*

*இதை எல்லாம் வானத்தில் பறந்தபடியே பருந்து பார்த்து மகிழ்ந்தது.*

*தங்கக் காசுகளையும், நகைகளையும் சுமந்து கொண்டு மகிழ்ச்சியோடு மீண்டும் தன் பயணத்தைத் தொடர்ந்தான் தயாளன்.*

அதே நேரம், அவன் எதிரே நான்கு திருடர்கள் வரு வதும் தெரிந்தது. ஒரு நிமிடம் பருந்திற்கு 'பக்' கென்றிருந்தது. அதன் இதயம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது.

பரபரப்போடு தன் விழிகளை நான்கு திசை களிலும் சுழற்றியது. அதன் கண்ணில் ஒரு குளத்தின் ஓரம் பாம்பு ஊர்ந்து செல்வது தெரிந்தது.

'சர்'ரென்று அங்கே பறந்து போனது. பருந்து வரும் ஓசை கேட்டு பாம்பு அண்ணாந்து பார்த்தது.

"என்ன நண்பரே! ஏன் பதட்டம்?" என்று பாம்பு கேட்டது.

"பேசுவதற்கு நேரமில்லை. போகும் போது பேசிக் கொள்ளலாம்," என்றபடியே பாம்பை தன் இரு கால் களாலும் தூக்கிக் கொண்டு வானில் பறந்தது.

"நண்பனே! இப்போதாவது காரணத்தைச் சொல்ல லாமா?" என்றது பாம்பு.

பருந்து பறந்தபடியே சொன்னது.

கரடி, தயாளனுக்கு பரிசு கொடுத்ததையும், அதை எடுத்துக் கொண்டு தயாளன் போவதையும், இப்போது அவன் எதிரே நான்கு திருடர்கள் அரிவாள், கத்தியோடு வருவதையும்-

அதைக் கேட்டதும், "அப்படியா?" என்று பாம்பு வியப்போடு கேட்டது.

"ஆமாம் நண்பரே. நமது நண்பனை அந்தத் திருடர்கள் எதிரே சந்தித்தால் அடித்துப் போட்டு விட்டு பரிசுப் பொருளை எடுத்துப் போய் விடுவார்கள். அதற்குள் நாம் அங்கே போய் நண்பரைக் காப்பாற்ற வேண்டும்."

"அப்படியே செய்வோம். வேகமாக போ, நண்பரே!" என்று சொன்னது பாம்பு.

"அதோ பார் நண்பரே! அந்த நான்கு திருடர் களும் வருகிறார்கள். நமது நண்பரும் எதிரே சென்று கொண்டிருக்கிறார். நான் திருடர்களுக்கு நேராக பறக்கும் போது உன்னை கீழே விட்டு விடுகிறேன். நீ அவர்கள் தலையில் விழுந்ததும் அவர்களை நீ கவனித்துக் கொள்," என்றது பருந்து.

அது போலவே பருந்து செய்தது. கிழே வந்து அவர்கள் மேலே விழுந்த பாம்பு, ஒருவனை ஒரு போடு போட்டு விட்டது. அவன் அலறி துடித்து செத்தான். மற்றவர்கள் ஓடத் தொடங்கினார்கள்.

மூவரையும் துரத்தி துரத்தி கொத்திக் கொன்றது. நால்வருமே பாதையில் செத்துக் கிடந்தார்கள்.

அந்த வழியே நடந்து வந்து கொண்டிருந்த தயாளன் செத்துக் கிடப்பவர்களைக் கண்டு திகைத்து நின்றான். அப்போது....

"நண்பனே!" என்று அழைத்துக் கொண்டு தயாளன் முன்னே வந்து நின்றது பாம்பு.

அதே நேரம் பருந்தும் அங்கே வந்து சேர்ந்தது.

“இதெல்லாம் என்ன நண்பர்களே!” என்று தயாளன் கேட்டான்.

கரடி வந்து பரிசு கொடுத்தது. பின் திருடர்கள் வந்தது, அதைக் கண்டு பருந்தும், பாம்பும் இணைந்து செயல்பட்டது. அதனால் அவர்கள் இறந்தது வரை தயாளனிடம் பருந்து சொல்லி முடித்தது.

அவைகளை எல்லாம் வியப்போடு கேட்ட தயாளன். “மிகுந்த நன்றி நண்பர்களே, நன்றி!” என்றான்.

“நமக்குள் எதற்கு நண்பரே... நன்றி! இனி, நீர் நலமாக பரிசுப் பொருளோடு ஊர் போய் சேர்க நண்பரே,” என்று பருந்தும், பாம்பும் வாழ்த்தி அனுப்பின.

“நல்லது நண்பர்களே,” என்ற தயாளன் விடை பெற்றான்.

தயாளன் நினைத்தான். ‘இனி நாம் ஏன் பொருள், தேடி வெளியூர் செல்ல வேண்டும்? நம்மிடம் தான் பரிசுப்பணம் இருக்கிறதே இதை எடுத்துக் கொண்டு ஊர் போய், ஒரு நல்ல வீட்டைக் கட்டி அதில் நம் தாய், தந்தையையும் அழைத்து வந்து வைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழலாமே, என்று எண்ணினான்.

அதன்படியே பரிசுப் பொருளாக கிடைத்த தங்க நகைகளையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு ஊரை நோக்கி நடந்தான்.

*குழந்தைகளே! ஒருவருக்கு சிறிய உதவியை நீங்கள் செய் தாலும் அந்த உதவி உங்களுக்கு பெரிய அளவில் உதவும் என்பதை தயாளனைப் பார்த்தே தெரிந்து கொண்டு இருப்பீர்கள் தானே?*

* * *

## 2. சிங்கத்தின் அமைச்சரவை!

*சிங்கம், தன் மனைவி, மக்களுடன் தன் மாளி கையில் மகிழ்ச்சியோடு இருந்தது. குட்டி சிங்கங்கள் மனித பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டு இருந்தன. பெண் சிங்கமோ நேற்று வாங்கி வந்த புது ஆடைகளையும், நகை களையும் அணிந்து கொண்டு புதுப்பொலிவோடு ஆண் சிங்கத்தை ஒட்டி அமர்ந்து இருந்தது.*

*ஆண் சிங்கமோ அடுத்து எங்கே வீடு வாங் கலாம், நிலம் வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டு இருந்தது. இந்த நேரத்தில்தான் புலி அங்கே வேகமாக ஓடிவந்தது.*

*"அரசே! நம் மக்கள் எல்லாம் ஒன்று திரண்டு கோஷம் எழுப்பத் தொடங்கி விட்டார்கள்!" என்று கூறியது புலி.*

*"முட்டாள் மக்கள் என்னவென்று கோஷம் போடு கின்றனர்?" என்று கேட்டது சிங்கம்.*



“தேர்தலில் சொன்ன வாக்குறுதிகளை உடனே நிறை வேற்று. இல்லையேல் பதவியை விட்டு கீழே இறங்கு,” என்று கோஷம் எழுப்பி மாமன்றத்தின் முன்னே கூடியிருக்கின்றனர்.

“காவலர்கள் எல்லாம் கயிறா திரித்துக் கொண்டு இருக்கின்றனர்?”

“அவர்கள் கண்ணீர் புகை வரை போய் விட்டார் கள். இருந்தும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. நீங்கள் உடனே அங்கு வராவிட்டால் அவர் கள் இங்கேயே வந்து விடுவார்களாம். நீங்கள் புறப் பட்டு வரவில்லை என்றால், நிலைமை கட்டுமீறி போய் விடும்,....” என்றது அமைச்சர் புலி.

"அப்படியா? இந்த முட்டாள் மக்களை சிந்திக் கவே விடக்கூடாது. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஏதாவது துப்புக் கிடைத்ததா?" என்று கேட்டது சிங்கம்.

"வேறு யார்? தங்களை எதிர்த்து தேர்தலில் நின்ற யானையும், நரியும்தான்," என்றது புலி.

"அப்படியா? நீர் முன்னே செல்க. நான் பின்னே வருகிறேன்." என்று சிங்கம் சொன்னதும், புலி பாய்ந்து வெளியே ஓடியது.

மாமன்றத்தின் முன்னே காட்டில் உள்ள விலங்கு களும், பறவைகளும் கோபத்தோடு கூடியிருந்தன. சிங்கம் படகு போன்ற பெரிய காரில் இருந்து பாதுகாப் போடு இறங்கியது. கூட்டத் தைப் பார்த்து கைய சைத்தது.

"மக்கள் பணத்தில் மாளிகைக் கட்டிய அரசர் ஒழிக!" என்று நரி குரல் கொடுத்தது. அதைத் தொடர்ந்து மற்றவைகளும் குரல் எழுப்பின.

"தேர்தல் வாக்குறுதி என்ன ஆயிற்று?" என்று யானை கேள்வி எழுப்பியது.

"அது காற்றோடு போனது....." என்று மற்றவை பதில் கூறின. அதற்குள் போலீஸ் படைவந்து கூட்டத்தை அமைதிப் படுத்தின.

கோபமும், சிரிப்பும் கலந்த நிலையில் மாமன்றத் தின் மத்தியில் வந்து அமர்ந்தது சிங்கம்.

*“என் இனிய மக்களே! உங்களுக்கு என் பணிவான வணக்கங்கள். என்னைப் பற்றி தவறாக ஏதேதோ பேசினீர்கள். என்னைப் போல் பொதுத் தொண்டில் இருப்பவர்களுக்கு இப்படி சோதனைகள் வருவது இயல்புதான். அதற்க்காக நான் வருத்தப்படவில்லை. நான் உங்களுக்குக் குறை வைத்து இருந்தால், அதை நீங்கள் கேட்பது உங்கள் உரிமை. அது தான் ஜன நாயகம். நான் உங்களுக்கு என்ன குறை வைத்தேன்,” என்று கூட்டத்தைப் பார்த்து சிங்கம் கேட்டது.*

*“ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல?” என்றது நரி.*

*“ஆமாம் ஆமாம்!” என்றது யானை.*

*“எங்கள் பகுதியில் குடிக்க தண்ணீர் இல்லை.” என்றது வாத்து.*

*“எங்கள் ஏரியாவில் மின் விளக்கே இல்லை” என்றது ஆந்தை.*

*“உங்கள் மாளிகையைச் சுற்றி வழவழப்பான ரோடு போட்டுக் கொண்டீர்கள். எங்கள் தெரு வெல்லாம் குண்டும் குழியுமாக கிடக்கிறது.” என்றது மான்.*

*“மழை பெய்தால் எங்கள் தெருவில் படகே விடலாம். மழை நீர் வழிய சரியான கால்வாய் இல்லை,” என்றது கரடி.*

*“எங்கள் வீட்டில் படித்து முடித்த இளைஞர் களுக்கு வேலை இல்லை,” என்றது குதிரை.*

“ஆற்று நீர் பாசனம் இல்லாததால் எங்கள் விவசாயமே அழிந்து கொண்டு இருக்கிறது. கேட்கும் போதெல்லாம் இதோ இதோ தண்ணி கொண்டு வருகிறோம். அதோ தண்ணி கொண்டு வருகிறேன் என்று கதை சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்,” என்று ஆவேசமாக மாடு பேசியது.

“என் இனிய மக்களே! சகோதரர்களே! உங்கள் கோபம் தீர பேசிவிட்டீர்களா? இந்த நாட்டின் நலனுக்காகவே என்னை நான் அர்ப்பணித்துள்ளவன். இதை என் வரலாற்றை உற்றுப் பார்த்தவர்களுக்கு நன்கு தெரியும்.

“உங்களின் மேலான வாக்குகளால் இந்தப் பதவியில் நான் அமர்ந்திருக்கிறேன். நீங்கள் சொன்ன கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றவே ஆலோசனை நடத்திக் கொண்டு இருக்கிறேன்.”

“பதவிக்கு வந்த நாள் முதலாக ஆலோசனை தானே செய்து கொண்டு இருக்கிறீர்கள். ஆரோக்கியமான செயல் கள் என்ன செய்து இருக்கிறீர்கள்?” என்று துள்ளிக் குதித்து கேட்டது நரி.

“சகோதரனே! ஆட்சிக் கட்டிலுக்கு நான் வந்து ஆறு மாதம் தான் ஆகிறது. முன்பு ஆட்சி செய்தவர்கள் இந்த நாட்டிலே செய்த அலங்கோலங்களை சரிசெய்து முடிக்கவே இன்னும் நாள் ஆகும்போல் இருக்கிறது. நான் என்ன செய்ய?” என்றது சிங்கம்.

“இந்தக் கதை சொல்லும் வேலையை வேறு

எங்காவது வைத்துக் கொள்ளுங்கள். எங்களிடம் வேண்டாம். இந்த நாட்டு மக்களை வறுமை வாட்டு கிறது என்பது உங்களுக்குப் புரியுமா?" என்று கேட்டது யானை.

"சகோதரரே! வறுமை இந்த நாட்டிலே வளரக் கூடாது. வாழக்கூடாது, வலம் வரக் கூடாது என்பதால் தான் நேற்று நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இந்த நாட்டில் உள்ள ஏழை, எளியவர்களுக்காக இலவச உணவு வழங்க ஏற்பாடு ஒன் றினை அமல்படுத்தியுள் ளேன்." என்றது பெருமையாக சிங்கம்.

"இலவச சாப்பாடு போட்டு நீங்கள் எங்களை மேலும் பிச்சைக்காரர்களாக்க வேண்டாம். நாட்டுப் பொருளாதாரத் தை உயர்த்துங்கள். வேலை வாய்ப் பைப் பெருக்குங்கள். நாங்கள் எங்கள் உழைப்பில் உண்பதையே விரும்புகி றோம்."என்றது நரி.

"ஆமாம் ஆமாம். எங்களுக்கு உங்க்ள் இலவச உணவு வேண்டாம். வேலைதான் வேண்டும்." என்று கூடியிருந்த கூட்டம் கத்தத் தொடங்கியது.

"சகோதரர்களே! அமைதியாக இருங்கள். உங்கள் விருப்பப்படியே அடுத்தக் கூட்டத் தொடரில் ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றது குழப்பத்தோடு சிங்கம்.

"நல்ல ஒரு முடிவை நீங்கள் எடுக்கவில்லை என்றால் உங்கள் ஆட்சியை கலைக்க வேண்டிய போராட்டத்தில் நாங்கள் ஈடுபடுவோம். இன்னும் ஒரு

மாதம் தவணை தருகிறோம். இப்போது நாங்கள் அமைதியாகப் போகிறோம். வாருங்கள் நண்பர்களே! போகலாம்!" என்று எல்லாரையும் அழைத்தது யானை.

அதன்படியே எல்லா விலங்குகளும், பறவைகளும் அமைதியாக கலைந்து போயின.

மாமன்றத்தில் சிங்கமும், புலியும், மற்ற அமைச்சர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றிருந்தன.

குட்டீஸ்களா! அந்த நாட்டில் வளமை விளைந்ததா? ஆட்சி மாறியதா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போமா?

***



# 3. கண்டுபிடிப்பு திலகம்!



மாங்கனிக் காட்டில் வாழ்கின்ற பறவைகளிடமும் விலங்குகளிடமும் ஒற்றுமையோ ஒற்றுமை, அப்படி ஒரு ஒற்றுமை.

அங்கே சண்டையில்லை, சச்சரவு இல்லை, என்றுமே அங்கே மகிழ்ச்சிதான்.

அப்படியிருந்த இடத்தில் இன்று ஒரே கலவரம்.

கலைமானும், பிணைமானும் அழுது, அழுது புலம்பின, 'என்செல்வம் எங்கு போனானோ? யார் களவாடிச் சென்றார்களோ? எங்க ஒரே வாரிசை

*காணவில்லையே! இப்போது எங்கு கண்டு தேடு வோம்?" என்று கலைமான் கண்ணீர் விட்டது.*

*அதைக் கேட்டதும் "தம்பியே! உங்கள் மகன் காணவில்லை என்பதை ராஜாவிற்குத் தெரிவித்து விட்டீர்களா?" என்று குதிரை கேட்டது.*

*"இல்லையே!" என்றது கலைமான்.*

*"உடனே சென்று தெரிவியுங்கள். ராஜா உடனே ஆட்களை விட்டு தேடிக் கண்டு பிடித்து விடுவார்" என்றது குதிரை.*

*"சகோதரா! இதோ, இப்போதே புறப்படு கிறோம்" என்று இரண்டும் புறப்பட்டுச் சென்றன.*

*மான்கள் கூறியதைக் கேட்ட சிங்க ராஜா, மந்திரி சிறுத்தையாரை அழைத்து விசயத்தைச் சொல்ல சிறுத் தையார், புலியார், நரியார், ஓநாய், யானையார், ஆடார், மாடார், மயிலார், ஆந்தையார், காக்கையார் என்று எல்லாரையும் அழைத்து விஷயத்தைச் சொன்னது. உடனே நாலா புறமும் சென்று தேடி வாருங்கள் என்று நான்கு திசை களிலும் ஆட்களை அனுப்பி வைத்தது.*

*மான்கள் இரண்டும் நெல்லி மரத்தடியில் கவலையோடு படுத்து இருந்தன. எப்போது மகன் வருவான் என்ற ஏக்கத்தோடு தாய்மான் ஒவ்வொரு திசையாக பார்த்தது.*

*மதியம் வரை எல்லோரும் தேடியும் மானின் மகன் கிடைக்கவில்லை. எல்லா பறவைகளும், விலங்குகளும்*

சோர்வோடு சிறுத்தையின் முன்னே வந்து கூடின.

"இப்போது என்ன செய்யலாம்?" என்று சிறுத்தை யிடம் கேட்டது புலி.

"கிடைக்கவில்லை என்பதை சிங்கராஜாவிடம் சொன்னால் அவ்வளவுதான். நம்மை காடு கடத்தி விடுவார்...." என்று பயந்தது சிறுத்தையார்.

"மாண்புமிகு மந்திரியாரே! அப்படியானால் எங்கள் மகன் கிடைக்க மாட்டனா?" என்று மான்கள் அழுதன.

"சகோதரரே கவலைப்படாதீர்கள். இன்னும் பொழுது இருக்கிறது. எப்படியும் தங்கள் மகனை கண்டு பிடித்து விடலாம். அமைதியாக இருங்கள்." என்றார் சிறுத்தையார்.

அப்போது புறா ஒன்று வேகமாக வந்து சிறுத்தை யாரின் காதில் ஏதோ சொன்னதும் சிறுத்தையார், "நண்பர் களே அரசர் அவசரமாக அழைத்து இருக் கிறார். அறிந்து வருகிறேன். யாவரும் இங்கேயே இருங் கள்." என்று பாய்ச்ச லோடு விரைந்து சென்றது.

"அரசே வணக்கம்" - சிறுத்தையார்.

"என்ன ஆயிற்று குழந்தை?" சிங்கராஜா.

"இன்னும் கிடைக்கவில்லை...." பயந்த படியே சிறுத் தையார் சொன்னார்.

"இப்படிச் சொல்ல வெட்கமாக இல்லை? நமது

படை வீரர்கள் எல்லாம் பாண்டியா ஆடிக்கொண்டு இருக்கிறார்கள்? மதிகெட்ட மந்திரியாரே, ஓடு எல் லோரையும் அழைத்துவா இங்கே...." என்று ராஜா கோபத்தோடு கர்ஜித்தார்.

சிறுத்தையார் பின்னங்கால் பிடறியில் பட அங்கிருந்து ஓடினார்.

சிறிது நேரத்தில் காட்டில் உள்ள அனைத்து பறவை களும், விலங்குகளும் பயந்தபடியே சிங்கராஜா வின் முன்னே வந்து நின்றன.

"நமது நாட்டில் ஒரு குடிமகன் காணாது போயி ருக்கிறான். அவனைக் கண்டு பிடிக்காமல் இன்னும் நீங்கள் எல்லாம் என்ன செய்து கொண்டு இருக்கி றீர்கள்?" உருமியது சிங்கராஜா.

"அரசே! ஆறுகளையும், ஏரிகளையும், குளங் களையும் ஒன்று விடாமல் கலக்கிப் பார்த்து விட்டேன். தென்பட வில்லை..." என்றார் யானையார்.

"கிழக்கு நாடு, மேற்கு நாடு எல்லாமும் நான் தேடிப் பார்த்து விட்டேன். அரசே!" என்றார் குதிரையார்.

"பார்த்து என்ன, பையன் இன்னும் கிடைக்கவில் லையே! மான் சகோதரனே! உங்கள் மகனுக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா?" என்று சிங்கராஜா கேட்டார்.

"ஆம் அரசே! நேற்று அருவிக்கரையோரம் மனிதர்கள் சிலர் வந்து சினிமா எடுத்திருக்கிறார்கள்.

அதை இவன் பார்த்திருக்கிறான். இன்று காலையில் என்னையும் அவர்களோடு சினிமாவில் நடிக்க சேர்த்து விடு என்று அடம் பிடித்தான்.'' என்றது கலைமான்.

"வெட்டிப் பயல்கள் வேலை அது. நீ நன்கு படித்து நம் காட்டின் முன்னேற்றத்திற்காக பாடு படு என்றேன். அவன் கேட்கவில்லை. இரண்டு அடி போட்டேன். அவ்வளவுதான். நாங்கள் வெளியில் சென்று விட்டு திரும்பியபோது அவன் இல்லை. நாங்களும், அந்த சினிமாக்கார கூட்டத்திலேயும் பார்த்திட்டோம். அங்கும் இல்லை. எங்கள் ஒரே மகன் என்ன ஆனானோ தெரியவில்லை!! என்று மானார் கண்ணீர் விட்டார்.

"அழாதே சகோதரா.'' என்று கூறி விட்டு, தண்டத் தளபதிகளே... மதிகெட்ட மந்திரிகளே... மடத்தனம் கொண்ட படை வீரர்களே... இன்று மாலைக்குள் அவர்கள் மகனை நீங்கள் எங்கு போவீர்களோ, எப்படித் தேடுவீர்களோ எனக்குத் தெரியாது, கண்டு பிடித்துக் கொண்டு வரவேண்டும். இல்லை என்றால் உங்கள் அனைவரையும் ஒரே குழியில் போட்டு மூடி விடுவேன்.'' என்று சிங்கராஜா கோபத்தோடு பேசியது.

அதைக் கேட்ட மந்திரிகளும், தளபதிகளும், "கொண்டு வந்து விடுகிறோம் அரசே!'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே உடும்பார் வேக வேகமாக ஓடி வந்து, "அரசே வணக்கம். தங்களிடம் தனித்து ஒரு செய்தி சொல்ல வேண்டும்!! என்றது.

"அப்படியா தம்பி, வா அருகில்'' என்று சிங்க ராஜா அழைத்ததும், உடும்பார் அவரிடம் விரைந்து

சென்று காதோடு ஏதோ சொன்னதும், ராஜா மகிழ்ச்சி யோடு, "அப்படியா! சரி, நீயும் கரடியாரும் சென்று வாருங்கள்," என்று அனுப்பி வைத்தது.

கரடியாரும், உடும்பாரும் புறப்பட்டுப் போனார்கள்.

கூட்டத்தினருக்கு ஒன்றுமே புரியாததால் யாவரும் விழித்துக் கொண்டு இருந்தனர்.

அதே நேரம் சிங்கராஜா பேசினார், "உங்களால் முடியாத காரியத்தை, தம்பி உடும்பார் முடித்து வந்தி ருக்கிறார். அதற்காக நீங்கள் எல்லாரும் வெட்கப்படுங் கள்." என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கரடியார் மான் குட்டியை தோளில் போட்டுத் தூக்கிக் கொண்டு வந்து சிங்கராஜாவின் முன் இறக்கிவிட்டார்.

மான் குட்டி, கூடியிருந்தக் கூட்டத்தைக் கண்டு மிரட்சி யோடு பார்த்தது.

அதைக் கண்டு பெற்றோர்கள் கண்கலங்கினர்.

"ஏய் மான் குட்டிப் பயலே! காலையில் இருந்து அந்தப் புதருக்குள் ஏன் ஒளிந்து கொண்டு இருந்தாய்?" என்று சிங்கராஜா கேட்டார்.

"நான் எங்கே ஒளிந்து கொண்டு இருந்தேன்? சினி மாவில் நடிக்க சேர்த்து விடாத என் பெற்றோர் மீது கோபம் கொண்டு வீட்டை விட்டு ஓடநினைத்தேன்.

"அதன்படி நான் போய்க் கொண்டு இருந்த போது, புதர் என்று தெரியாததால் தவறி விழுந்து விட்டேன். அங் கிருந்து வெளியேறவும் முடியவில்லை.

பசிவேறு கொடுமைப்படுத்தியது. செத்து விடுவோமோ என்று பயம் கூட வந்து விட்டது. அப்போதுதான் பெற்றோர் மீது கோபம் கொண்டு புறப்பட்டது எவ்வளவு தவறு என்று உணர்ந்தேன். என்னை மன்னித்து விடுங்கள் அரசே! இனி நான் தவறு செய்ய மாட்டேன்." என்று மான் குட்டிக் கூறியது.

"மகிழ்ச்சி குட்டி! தாய், தந்தை சொல்லை யார் தட்டாமல் கேட்கிறார்களோ அவர்களுக்கு என்றுமே துன்பம் வராது.... சரி, நீ உன் பெற்றோரிடம் செல்!" என்று சிங்க ராஜா சொன்னதும், மான் குட்டி துள்ளிக் குதித்து பெற்றோரிடம் சென்றது.

பிள்ளையை பெற்றோர் அனைத்துக் கொண்டனர்.

"சபையோரே! இந்த நல்ல வேளையில், தம்பி உடும் பாருக்கு என் சார்பிலும், உங்கள் சார்பிலும், 'கண்டுபிடிப்பு திலகம்" என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்கிறேன்." என்று சிங்க ராஜா சொன்னதும் கூடியிருந்த கூட்டத்தில் இருந்து மகிழ்ச் சியோடு வாழ்த்தொலி பொங்கி எழுந்தது.

❋ ❋ ❋

# 4. வேலுவும், வேட்டை நாயும்!



வேட்டைக்காரன் வேலு என்றால் அந்த சுற்று வட்ட கிராமங்களில் மட்டுமல்ல, அடுத்துள்ள நகரத்தி லும் அவன் பெயர் தெரியும். காரணம், பக்கத்தில் உள்ள காட்டிற்குச் சென்று வேட்டையாடி வருவதில் வல்லவன்.

அவன் வேட்டையாடுவது சிங்கம், புலி, யானை களை அல்ல. காடை, கவுதாரி, காட்டுக் கோழி, முயல். இப்படி மனிதர்களில் சிலர் விரும்பி உண்ணுகின்றவை களைத்தான். இவைகளை வேட்டையாட வேலு, கை துப்பாக்கியையோ, வலைகளையோ, வில் அம்புகளை

யோ பயன்படுத்துவது கிடையாது.

அவனிடம் ஒரு வேட்டை நாய் இருந்தது. அது வீர மிக்கது, விவேகமுள்ளது. அந்த நாய்க்கு, காட்டுக் கோழிகளை எப்படி பிடிக்க வேண்டும். முயலை, காடை, கவுதாரியை எப்படி பிடிக்க வேண்டும் என்று பழக்கி வைத்திருந்தான். அதன்படியே, அவன் கை நீட்டும் பக்கம் எல்லாம் பாய்ந்து பதுங்கிச் சென்று அவைகளைப் பிடித்து வந்து அவனிடம் கொடுத்து விடும்.

அவனும், அவைகளை ஊர்கள், நகரங்களுக்கு எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்று விடுவான். வேலு, வேறு எந்த வேலைக்கும் செல்லமாட்டான். இப்படி நாயை வைத்து, அதன் உழைப்பில் வேட்டை ஆடி நன்றாக சம்பாதித்து தான் மட்டும் பிரியாணி, குடி என்று ஏகமாக செலவு செய்தான்.

என்றாவது ஒருநாள் நாய் பிடித்துக் கொடுக்கும் கோழி, முயல்களை தன் மனைவியிடம் கொடுத்து சமைக்கச் சொல்லி, நன்றாக குடித்துவிட்டு வந்து, தனக்கு மட்டும் நல்ல சதைக் கறியாகப் போடச் சொல்லி சாப்பிடுவான் வேலு.

தான் தின்று முடித்த எலும்புகளை நாய்க்குப் போடு வான். அதுவும் வாலை ஆட்டிக் கொண்டே மகிழ்ச்சியோடு தின்று விட்டு, வாயிற்படியில் படுத்துக் கொள்ளும்.

அன்றும் வழக்கம் போல் வேலு வேட்டைக்குக் கிளம்பினான். அப்போது–

நேற்று மாலை, பக்கத்து நகரத்தில் உள்ள பெரிய மனிதர் ஒருவர், "வேலு நாளைக்கு என் நண்பர்கள் வெளியூரில் இருந்துவர்றாங்க. அதனால, நாலு காடையும், நாலு முயலும் கண்டிப்பாவேணும். இந்தா நூறு ரூபாய் இதை முன் பணமா வச்சிக்க," என்று சொல்லிக் கொடுத்ததும் அந்தப் பணத்தில் நேற்றே பாதி பணத்திற்கு மேல் தண்ணி அடிச்சதும் நினைவுக்கு வந்தது.

அந்த நன்றி உள்ள நாய் எப்போதும் போல் வாலை ஆட்டிக் கொண்டே அவன் முன்னே போனது.

காடு நெருங்கியதும், வேலுவின் விழிகள் நாலா புறமும் சுழன்றன. அப்போதுதான் காடை ஒன்று புதரில் இருந்து மறுபுதரை நோக்கிப் போவதைப் பார்த்துவிட்டான்.

உடனே நாயை அருகில் அழைத்து அதன் முதுகை தடவிக் கொடுத்தபடியே "டே கருப்பா, அந்தக் காரைப் புதருலே ஒரு காடை நுழையுது. உன் கை வரிசையைக் காட்டு," என்று அதன் முதுகில் செல்லமாகத் தட்டினான்.

அடுத்த நிமிடமே கருப்பன் பதுங்கி பதுங்கி காரைப் புதரின் பக்கம் போனது. உள்ளே புகுந்தது. வெளியே வரும் போது அதன் வாயில் காடை ஒன்று கத்தியபடியே இருந்தது.

“வாடா கருப்பா வா.” என்று நாயை அருகில் அழைத்து அதன் வாயில் இருந்த காடையை வாங்கிதான் வைத்திருந்த கைப்பையில் அதன் கால்களைக் கட்டிப் போட்டுக் கொண்டு, நடந்தான்.

வெள்ளையும், கறுப்பும் கலந்த ஒரு முயல் ஒன்று ‘யாரோ வருகிறார்கள்’ என்பதை உணர்ந்து புல் மேய்ந்து கொண்டிருந்த அது இரண்டு துள்ளலில் ஒரு புதருக்கு அடியில் இருந்த குழி ஒன்றில் பதுங்கிக் கொண்டது.

வேட்டையில் கை தேர்ந்த வேலுவிற்கு அது ஓடியது தெரியாதா என்ன? முயலைப் பார்த்த மகிழ்ச் சியில், “கருப்பா... கருப்பா.... செமையான வேட்டை நமக்கு. இதோ பார்..... நம்மை அந்த முயல் பார்த்து விட்டது. அதனால், அது குழிக்குள் பதுங்கி இருந் தாலும் இருக்கும். மெல்லப்போ. புதரில் இல்லை என்றால், குழிக்குள் பதுங்கி இருக்கும். அப்படியே அதன் காதைப் பிடித்துத் தூக்கி வந்துவிடு,” என்று நாய்க்கு உற்சாக மூட்டினான்.

‘கருப்பன்’ வாலை ஆட்டியபடியே ஓடியது புதரை நோக்கி, அங்குமிங்கும் தேடியபின் ஒரு வழியாக முயல் ஒரு குழிக்குள் பதுங்கி இருப்பதைப் பார்த்து விட்டது கருப்பன் நாய்.

மெல்ல உடலைக் குறுக்கி முயலை நோக்கி நாய் சென்றது.

அப்போது “அண்ணே!” என்றது முயல்.

“உனக்கு உயிர் போகும் போது என்னடா தம்பி

பாசம் என் மீது?" என்று கேட்டது நாய்.

"அண்ணே! உண்மையில் பாசத்தோடு தான் பேசு கிறேன். முடிந்தால் நான் இறப்பதற்கு முன் கேட்கின்ற கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள். அந்த பதிலைக் கேட்ட படியே, மனிதர்களுக்கு இரையாகிப் போய் விடுகிறேன்." என்றது முயல்.

"என்ன தம்பி, நாட்டுல அரசியல்வாதிப் பசங்கப் பேசுறது போல பேசுற?" என்றது நாய்.

"அண்ணே! தப்பா சிந்திக்காதீங்க. தான் வாழ கோடி கோடியா சம்பாதிப்பானுங்க. தன் தலை வனையே கொன்று விட்டு வாழத்தோப்புப் பக்கம் பணத்தோடு ஒதுங்கிடுவானுங்க. நான் அதைச் சொல்லல. நாம வாழறதுக்குச் சொல்றேன்."

"அப்படியா?" வியப்போடு கேட்டது நாய்.

"ஆமாம். அண்ணே! நீ முள்ளு புதரு. கரடு முரடான பாதை. எல்லாம் தாண்டி என்னைப் போல பலரை நீங்க பிடிக்கிறீங்க. பிடிக்கிறதை எல்லாம் அந்த மனிதன்கிட்டே கொடுத்துடுறீங்க. அவன், உங்களுக்கு என்ன தருவான்?"

"தினமும் எங்க முதலாளி சாப்பிடும் போது சோறு போடுவாரு. காடை, கவுதாரி சமைக்கும் போது, சதை எல்லாம் தின்னுட்டு எலும்பு போடுவாரு. அதை நான் தின்பேன்.

"வேலைக்கு போக மாட்டாரு. நான் தினமும் வேட் டையாடி கொடுக்கிறதை எல்லாம் வித்து குடிப் பாரு. ஜாலியா இருப்பாரு. எப்போதாவது குடியிலே

குஷியா இருக்கும் போது எனக்கு 'பொறை' வாங்கி ரெண்டு போடுவாரு. மீதியைப் பொண்டாட்டிக் கிட்டே கொடுத்து சமைக்கச் சொல்லி, நல்லா சாப்பிடுவாரு.... அவ்வளவுதான்," என்றது நாய்.

"அண்ணே! அந்த மனிதன் உழைக்கலே. நல்லா சாப்புடுறான். ஜாலியா இருக்கான். ஆனா, நீ உழைக்கிற, சரியா சாப்புடுல. ரொம்ப மனிதனுங்க நாட்டுல பிறர் உழைப்புல தான் வாழ்றானுங்க. நான் சொல்றதைக் கொஞ்சம் சிந்திச்சுப் பாரு. உழைக்கிற நீயே, பிடிக் கிறதை தின்னா எப்படி இருக் கும்? நீ வளர்ந்து இருக் கியே தவிர, அறிவு இல்ல. அவருகிட்டே நீ ஏன் இருக் கணும்? வந்துவிட வேண்டியதுதானே," என்றது முயல்.

"என் மேலே அவரு ரொம்ப பாசம் வச்சி இருக்கார்."

"நேத்து வாய்க்கால் பக்கம் என் நண்பரைப் பார்க்கப் போய் இருந்தேன். கொஞ்சம் லேட்டா யிடுச்சு. அதுக்குள்ள, அவருதெருவெல்லாம் தேடிட்டு, அப்புறம் நான் அங்கே இருக்கிறது தெரிஞ்சு, அழைக்க வந்துட்டார்னா பாரு...."

"அப்புறம் உன்னை அழைச்சுக்கிட்டு எங்க போனாரு?" கேட்டது முயல்.

"இங்கேதான் அழைச்சுகிட்டுவந்தாருவேட்டையாட"

"இதோ பாரு உன் மீது பாசம் அவருக்கு இருக் குன்னா அவரு என்ன செய்திருக்கணும் தெரியுமா?

அடே பயலே. உன்னை எங்கெல்லாம் தேடுறது? இப்படி சாப்பிடாமம ஊர் சுத்துறியே வா. சாப்பிடு, ரெஸ்ட் எடுன்னு சொல்லி இருந்தா அது பாசம். இது வேஷம். அவன் சம்பாதிக்கணும், நல்லா சாப்பிடணும், குடிக் கணும், அதுக்குப் பணம் வேணும். அந்தப் பணத்தை சம்பாதிக்க நீ காடு மேடு ஓடி உழைக்கணும்."

"அப்படியெல்லாம் சொல்லாதே நான் வேட்டை யாடலன்னாலும் சோறு போடுவார். நல்லா வச்சிருப்பார்."

"அப்படியா நம்பிகிட்டு இருக்க? இதோ பாரு ரெண்டு நாளைக்கு வேட்டையாடாமம நீ இரு. இப்ப இருப்பது போல அப்பவும் இருந்துட்டா உண்மையி லேயே நீ சொன்னதை நான் ஏத்துக்கிறேன். அப்படி நான் சொன்னது போல இருந்தா நீ அவனை விட்டு தனியே வந்து சுதந்திரமா உனக்கு வேண்டிய அளவு சாப்பிடலாம். செய்வீயா?" என்று முயல் கேட்டது.

'முயல் சொல்வதில் உண்மை இருக்கிறதோ இல் லையோ, நாம் முதலாளியை சோதித்துத்தான் பார்த்து விடலாமே,' என்று எண்ணியது நாய்.

"ஏன் சின்னப் பயலே. இப்படி பேசி என்கிட்டே இருந்து தப்பிக்கலாமுன்னு நினைக்கிறீயா?"

"உண்மை தெரியாம உலகத்துல நீங்க வாழ்ற தையும், மனிதங்க உயர்வுக்காக நம்ம இனத்தையே காட்டிக் கொடுக்கிறதையும், பிடிச்சுக் கொடுக்கி றதையும் சொல்றேன். கொஞ்சம் சிந்திச்சு பாருங்க. நான் எங்கேயும் ஓடிட மாட்டேன். உண்மையை நீங்க

அறிஞ்சுகிட்டு வந்தா போதும். நான் இங்கேயே உங்களை வரவேற்க காத்திருப்பேன்.'' என்றது முயல்.

முயலைப் பிடிக்காமல் விட்டுவிட்டு, தன் முதலாளியின் பாசத்தையும், நட்பையும் சோதிக்க முனைந்தது நாய்.

புதரில் இருந்து வெளிப்பட்ட நாய், தனியே வருவதைக் கண்ட வேலு, "டே கருப்பா. எங்கேடா அந்த முயலு? குழி எல்லாம் நல்லா தேடிப் பார்த்தியா?'' என்று ஆதங்கத்தோடு கேட்டான்.

எப்போதுமே வேலுவின் முன்னே செல்லும் கருப்பன், இன்று அவனுக்குப் பின்னே ஆழ்ந்த சிந்தனையுடன் நடந்தது. அதைக் கண்ட வேலு, "ஏய் தென்டச் சோத்து நாயே! என்ன, அன்ன நடை நடந்துகிட்டு பின்னாடி வர? நாயே முன்னே ஓடு....'' என்று அதட்டியபடியே நாலாபுறமும் விழிகளை ஓட்டினான்.

ஓர் இடத்தில் இருந்து நான்கு கவுதாரிகள் ஓடுவதைப் பார்த்த வேலு "ஏய் கருப்பா, அதோ பார்... எருக்கன் செடிகளுக்குப் பக்கத்துல நாலு கவுதாரி போகுது.. ஓடு....ஓடு....'' என்று நாயை உசுப்பி விட்டான். அதுவும் தாமதம் செய்யாமல் ஓடியது.

ஓடிய நாய், ஒரு புதர் பக்கம் போய் மறைந்து நின்று கொண்டது.

'சரி, போகலாம்' என்ற எண்ணத்தில் புதர் மறைவில் இருந்து வெளிப்பட்டு மெல்ல திரும்பி வந்தது நாய். கவுதாரி யைப் பிடித்து வராமல் திரும்பி

வந்த நாயைக் கண்டதும், வேலுக்கு மிகுதியாக கோபம் வந்தது.

பக்கத்தில் இருந்த மரத்தில் இருந்து ஒரு குச்சியை ஒடித்து, "தெண்டச் சோத்து நாயே... என்ன ஆச்சு உனக்கு? இப்ப கவுதாரியையும் விட்டுட்டியா?" என்று சொல்லிய படியே நாலு அடி போட்டான். வலிதாங்க முடியாமல் 'வாள் வாள்' என்று கத்தியது நாய்.

'நேத்து நூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்கிய வருக்கு அவர் கேட்டது போல கொண்டு போகணும். இருக்கிறதோ ஒண்ணுதான். ம்... பொழுது போகிறதுக் குள்ள எல்லாம் ரெடி பண்ணணும். ஏய் தெண்டச் சோத்து நாயே, வந்துத் தொலை, என்றபடியே நடந்தான்.

கால் வலியோடு நாய் அவன் பின்னே நடந்தது. அவர்கள் நடந்த பாதைக்கு முன்னே இரண்டு முயல் கள் படுவேகமாக குறுக்கிட்டு ஓடின.

"ஏய்....ஏய்...கருப்பா ஓடு....பிடி......" என்று கத்தினான்.

நாயும் அவன் எதிரே ஓடுவது போல் போக்குக் காட்டி ஓடிப்போய் ஒரு புதருக்கு மறைவில் நின்று கொண்டது. முயல்களைப் பிடிக்க அது எந்த முயற்சி யும் செய்யவில்லை.

சிறிது நேரத்தில் புதரில் இருந்து வெளிப்பட்டு களைப் போடு வருவதுபோல் வேலுவை நோக்கி நாய் வந்தது. இந்த முறையும் முயலைப் பிடிக்காமல் வந்ததைக் கண்ட வேலு விற்கு மூளை சூடாகி விட்டது.

காலில் இருந்த செருப்பைக் கழட்டி நாயை நாலு போடு போட்டான். "என்ன திமிர் இருந்தா கண்ணுக்கு எதிரே போன முயல்களைப் பிடிக்காமல் இப்படி வருவே?" என்று கத்தினான்.

அன்று பொழுது சாயும் வரை இப்படியே நாய், ஒன்றையும் பிடிக்காமல் இருந்தது. பொழுதுசாயவே வெறுப் போடு ஒரே ஒரு காடையை மட்டும் எடுத்துக் கொண்டு வேலு வீடு திரும்பினான்.

'நூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்கியவர் வந்தால் எப்படி யாவது சமாளிக்க வேண்டும்' என்று எண்ணிய படியே களைப்போடு விட்டினுள் நுழைந்த வேலு, தன் மனைவியை கூப்பிட்டு, காடையைக் கொடுத்து சமைக்கச் சொல்லிவிட்டு, சாராயம் குடிக்கக் கடைக்கு கிளம்பினான்.

நாய்க்கு பசி எடுத்தது. உடலில் வாங்கிய அடியால் வலி எடுத்தது. முயல் சொன்னது நாய்க்கு நினைவு வந்தது. பாசம் அல்ல எல்லாம் வேஷம்!

சிறிது நேரத்தில் வேலுவின் மனைவி காடையை சமைக்கத் தொடங்கினாள். காடை சமையலின் வாசனை நாய்க்கு மேலும் பசியைத் தூண்டியது. மெல்ல எழுந்து வாசல்படியில் வந்து அமர்ந்தது.

அதேநேரம் குடித்துவிட்டு வந்த வேலு, "ஏய் தெண்டச் சோறு.... சாப்பிட வேற வந்துட்டியா?" என்று மூலையில் கிடந்த விலக்கமாற்றை எடுத்து நாயை விலாசு, விலாசு என்று விலாசினான்.

அதற்குள் வேலுவின் மனைவி ஓடிவந்து, "ஏன் கருப் பனை இப்படி அடிக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"இந்த தென்டச் சோத்தை அடிக்கிறதோட விடு றேனே.... கொல்லனும்... அதை நான் செய்றேன். நீ சோத்தப் போட்டு எடுத்துட்டு இங்கே வா," என்ற படியே திண் ணையில் அமர்ந்து கொண்டான்.

அவன் மனைவி காடை கறியோடு சோற்றை எடுத்து வந்து அவன் முன்னே வைத்தாள்.

நாய், பசியோடு மரத்தடியில் படுத்துக் கொண்டே அதைப் பார்த்தபடியே இருந்தது.

"ஏய்.... அந்த நாய்க்கு இன்னைக்கு நான் தின்னு போடுற ஒரு எலும்பைக் கூட போடாதே. பட்டினி போட்டுக் கொல்லு..." என்றபடியே காடை கறியைச் சுவைத்து சாப்பிட் டான். நாய், பசியோடும், ஏக்கத் தோடும் பார்த்துக் கொண்டு இருந்தது.

சாப்பிட்டு முடித்த வேலு அப்படியே படுத்துக் கொண்டான்.

நாய் வலியாலும், முயல் சொன்ன செய்தியாலும் தூங்க முடியாமல் சிந்தனை செய்தபடியே இருந்தது.

விடியற்காலை எழுந்த வேலு வேட்டைக்குக் கிளம்பி நாயைப் பார்த்தான். எப்போதும் படுக்கும் இடத்தில் அதைக் காணவில்லை. உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தான். வரவில்லை.

'இந்த தென்டச் சோத்து நாய் எங்கே போய்

இருக்கும்?' என்று எண்ணியவனாய் தெருவெல்லாம் தேடினான். ஊரெல் லாம் அலைந்தான். எங்கும் காணவில்லை. சோர்வோடு வீடு திரும்பினான்.

நாய் வருவதை அறிந்து குழிக்குள் இருந்த முயல் வெளியில் வந்தது.

அதை வெட்கத்தோடு நாய் பார்த்தது. "தம்பி, நீ சொன்னதுதான் உண்மை. மனிதர்கள், அவர்களின் நன்மையைக் கருதிதான் நம்மை வளர்க்கிறார்கள். அவர்களின் பாசம் எல்லாம் வேஷம்தான்." என்று சொல்லி நேற்று நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் வேதனையோடு சொல்லி முடித்தது.

"இப்போது என்ன செய்யப் போறே?" என்று முயல் கேட்டது.

"இனி, அந்த தென்டச் சோத்து மனிதன் முகத்திலே விழிக்கமாட்டேன். உங்களோடேயே சுதந்திரமா இங்கே இருக்கப் போறேன்." என்று உறுதியுடனும், மகிழ்ச்சியுடனும் கூறியது நாய்.

"நல்லது! இப்போதாவது உண்மையை உணர்ந்து கொண்டாயே," என்றது முயல்.

வேலு பல நாட்கள் நாயின் உழைப்பு இல்லாமல் பட்டினிக் கிடந்தான். பின் நாம் உழைத்தால்தான் சாப்பிட முடியும் என்று எண்ணியவனாக வயல் வேலைகளுக்கு எல்லாம் போகத் தொடங்கினான். உழைப்பின் அருமையை இப்போது தான் நாயின்

மூலம் அறிந்து கொண்டான் வேலு.

குழந்தைகளே! உழைப்பு பெரும் செல்வம். அவரவர் தேவைக்கு அவரவர் உழைக்க வேண்டும். அதனால்தான் காந்தியடிகள் உழைக்காமல் உண்பவர்கள் திருடர்கள்' என்றார். நாம் யாராகப் போகிறோம்? நல்லவர்களாகத்தானே! மகிழ்ச்சி!

* * *



# 5. விலங்குகள் கொண்டாடிய 2000!

காடு முழுவதும் வண்ண வண்ண ஒளி விளக்குகள் மின்னி சிரித்தன. விழா மேடையில் சிங்கராஜா கம்பீரமாக அமர்ந்து இருந்தார். அமைச்சர்களான சிறுத்தை, புலியார், கரடியார் போன்றோர் ஒரு வரிசையிலும், புலவர் யானை யாரும், சான்றோர்களான ஓநாய், மான், மாடார் மறு வரிசையிலும் அமர்ந்து இருந்தனர்.

தேன்மொழி குயிலின் தேனிசையோடு சிறப்பு நிகழ்ச் சியான '2000'ம் தொடங்கியது. குயிலின் இறை வணக்கப் பாடலிற்குப் பிறகு மயில்களின் நடன அரங்கேற்றம் தொடங்கியது.

மேடையில் ஆடிய இரண்டு ஆண் மயில்களும் நளின மாக ஆடிக் கொண்டிருந்தன. அதைக் கண்டு விலங்குகளும், பறவைகளும் மகிழ்ச்சியோடு கைதட்டி ஆரவாரம் செய்தன. அதைக் கண்டு ஆடிக் கொண்டிருந்த மயில்களுக்கு போட்டி வந்துவிட்டன. இரண்டும் தங்கள் திறமையைக் காட்ட சுழன்று சுழன்று மின்னலாக ஆடத் தொடங்கின.

அப்போது அமைச்சர் சிறுத்தையார் "சபாஷ், சரியான போட்டி!" என்று கைதட்டினார்.

நடன அரங்கேற்றம் முடிந்ததும்... அமைச்சர் புலியார் எழுந்து சபையின் நடுவே வந்து, பேசத் தொடங்கினார்....

"அன்பான நண்பர்களே! தாய்மார்களே! சான்றோர்களே என்னை வளர்த்து ஆளாக்கிய என் இதய தெய்வமான சிங்கராஜா, அவர்களே! உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியும், வணக்கமும்...

"இன்னும் சிறிது நேரத்தில் 2000 ஆண்டிலே அடி எடுத்து வைக்கப் போகிறோம். அந்த நல்ல நாளில் உங்களோடு நமது அரசர் மனமகிழ்ந்து வாழ்த்துக் கூற வேண்டும். சில சிறப்புச் செய்திகளைச் சொல்ல வேண்டும் என்று விரும்பினார்.

"இன்னும் 'முப்பது நிமிடத்தில்' 2000ம் ஆண்டு பிறக்கப் போகிறது. அந்த ஆண்டை பூத்தூவியும், புகழ் பாடியும் வரவேற்க நாமிங்கே மகிழ்ச்சியோடு கூடி காத்திருக்கிறோம். இப்போது நமது சிங்கராஜா அவர்கள் நாட்டு மக்களுக்கு நல்வாழ்த்தினையும், 2000 ஆண்டில் நமது நாடும், நாட்டு மக்களும் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி பல திட்டங்களையும் அறிவிக்க இருக்கிறார் என்பதைக் கூறி உங்களிட மிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். இப்போது சிங்கராஜா பேசுவார்கள். நன்றி! வணக்கம்!"

சிங்கராஜா மைக்கின் முன்னே கம்பீரமாக நின்று.

பேசத் தொடங்கினார். '2000ம் ஆண்டை எதிர் நோக்கி, வாழ்த்துச் சொல்லி வரவேற்க, இங்கே அலைகடலென வந்துள்ள என் இனிய மக்களே..... சான்றோர்களே.... அறிவிற்சிறந்த ஆன்றோர்களே! உங்கள் அனைவருக்கும் இன்னும் 'இருபது நிமிடத்

தில்' மலரப் போகும் 2000ம் ஆண்டின் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"கடந்த ஆண்டுகளில் நாம் எப்படி இருந்தோம், என்னென்ன பணிகளை செய்தோம். செய்யத் தவறினோம் என்பதை எல்லாம் மறந்து விடுவோம். பிறக்கும் 2000ம் ஆண்டு முதல் நாம் புதிய சகாப்தத்தை சரித்திரமாக்குவோம். அதற்க்கான என் எண்ணங்களை உங்கள் முன் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.

"முதலாவதாக ஒன்றைச் சொல்கிறேன். நான் இங்கு பேச வந்தபோது சிட்டு எனக்கு ஒரு விலையுயர்ந்த பொன்னாடை போர்த்தியதை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள்.

"இப்படி பொன்னாடைகள், மாலைகள் அணியும் கலாச்சாரத்தையும் முதலில் 2000ம் ஆண்டிலிருந்தாவது விட்டு விடுங்கள். அந்தப் பொன்னாடை வாங்கிய பணத்திலே ஒரு ஏழை மாணவனுக்கு படிக்கப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்திருந்தால் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்திருப்பேன். இனியாவது நமது சகோதரர்கள் அப்படிச் செய்ய முயலுங்கள்.

"அடுத்து - நமது அரசு அலுவலகங்களில் சிலர் அன் பளிப்பு என்ற பெயரில் கையூட்டு வாங்குவதாகக் கேள்விப் பட்டேன். இந்த இழிதொழில் மனித ஜென் மங்களுக்கே உரியது. நம் நாட்டில் இந்த இழி தொழில்

எப்படி புகுந்தது என்று புரியவில்லை. வரும் 2000த்தி லாவது இந்த கொடுமை தொடராமல் இருக்க முயற்சி செய்யுங்கள். அப்படி யாராவது தொடர்வது தெரிந் தால் அப்போதே அதே இடத்தில் அவர்கள் விரல்கள் துண்டிக்கப்படும் என்பதை மன வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"அடுத்ததாக - விவசாயிகள் தான் இந்த நாட்டின் உயிர் நாடிகள். அவர்கள் வாழ்க்கை கீழ் நிலையில் இருக்கிறது. அதாவது, பள்ளத்தாக்கிலே அவர்கள் வாழ்வதால் மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களுக்கு அவர்கள் வாழ்க்கை சிதைந்து போகிறது. அதனால் அவர்களுக்கெல்லாம் மேட்டு நிலத்திலே, சிமெண்ட்டாலான கல்வீடுகளை அரசின் சார்பில் இலவசமாக கட்டித்தர அரசு ஏற்பாடு செய்துள்ளது.

"கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண் டாம் என்று ஆன்மீக பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால், ஆலையில்லா ஊரிலும், பள்ளியில்லா ஊரிலும் குடியிருக்க வேண் டாம் என்று சொல்லும் அளவிலே நம் நாட்டில் கல்விச்சாலைகளையும், தொழிற்சாலைகளையும் அமைக்க 500 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம் என்ற செய்தியையும் உங்களுக்கு சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"இல்லாமையும், கல்லாமையும், பொறாமையும், தீண்டாமையும், அறியாமை போன்ற 'ஆமை'களை

ஒழிப் பதில் நம் அரசு 2000ம் முதல் முன் நிற்கும்.

"மனிதப் பசங்க நாட்டிலே உலவும் போதைப் பொருள்களான கஞ்சா, அபின், ப்ரவுன்சுகர், மது பானம் போன்றவைகளை எந்த நிலையிலும், நம் நாட்டில் நுழையாதபடி பார்த்துக் கொள்ள எல்லாவித தடுப்புக் காவல்களும் போடப்படும். அப்படி யாராவது மீறி போதைப் பொருள்களைப் பயன்படுத் தியது தெரிந்தால் அவர்களுக்கு ஆயுள் தண்ட னையும், பெண்களை இழிவாக கருதி குற்றம் புரியும் ஆண்க ளுக்கு மரண தண்டனையும் வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மேலும், நாட்டில் உள்ள அனைவரும் தங்களின் பிறந்த நாளின் போதும், தங்களுக்கு குழந்தைகள் பிறக்கும் போதும், மணநாளின் போதும் ஆளுக்கொரு மரக்கன்று நடுதல் வேண்டும். அதை ஆட்சியர் அலுவலகத்தில் பதிவும் செய்ய வேண்டும். அதை அவர்கள் பாதுகாத்து வளர்க்கவும் வேண்டும்.

"கலப்பு மணம் செய்து கொள்கின்ற தம்பதி களுக்கு ஒரு ஏக்கர் நிலமும், விவசாயத்திற்கு வேண்டிய உபகரணங்களை கொடுக்கவும், சொந்தமாக அவர்க ளுக்கு ஒரு வீடும் அரசின் சார்பிலே வழங்கப்படும். படித்தவர்களாக இருந்தால் அரசுப் பணியில் முன்னுரிமை வழங்கப்படும்.

"பெண்களை வரதட்சணை கொடுமையில் ஆட் படுத்தும் ஆண்களுக்கு எட்டாண்டு கடும் சிறை

தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் வழங்கப்படும்.

"சாதி, மதம், மொழி இவற்றால் யாரேனும் நாட்டில் கலகம் செய்தால் அவர்களை மக்கள் நடமாடும் நாற்சந்தியில் நிற்க வைத்து கல்லால் அடித்துக் கொல்லப்படுவார்கள்.

"அறிவியல், கணிதம், மொழியியல் போன்றவற்றில் ஈடுபட்டு உலக அரங்கிலே புகழ்பெறுகின்ற நம் நாட்டு அறிஞர்களுக்கு ஒரு கோடி ரூபாயும், அவர்களின் ஆய்வுக்கு வேண்டிய அனைத்தும் செய்து தருவதோடு, அவர்களின் குடும்பத்திற்கு வேண்டிய அனைத்து சலுகைகளையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்பதையும் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"யார் ஒருவர், ஐந்து வயதானதும் குழந்தைகளை பள்ளியில் சேர்க்காமல் குழந்தை தொழிலாளர்களாக ஆக்கு கின்றார்களோ அவர்களுக்கு ஐந்தாண்டு கடும் சிறை தண்டனை வழங்கப்படும்.

"மேலும் வறுமைகள் குறையவும், வளமைகள் சேரவும், நலிவுகள் போகவும், நலங்கள் விளையவும் நமது அரசு என்றும் பாடுபடும். அதற்கு நீங்கள் அனைவரும் 2000 ஆண்டில் துணை நிற்க வேண்டும். இந்த நாடு செழித்து வளர தூணாக நிற்க வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

"இன்னும் இரண்டு நிமிடங்களே இருக்கின்றன. வாழ்த் தோடு 2000 ஆண்டை வரவேற்க! வாழ்த்தோடு,

பூத்தூவி வரவேற்போம். மீண்டும் உங்களுக்கு வாழ்த்திக் கூறி மகிழ்ச்சி யோடு விடைபெறுகிறேன். வணக்கம்!" என்று சிங்கராஜா பேசி முடித்ததும்-

"மலரப்போகும் 2000 ஆண்டே வருக! எங்கள் வாழ்வு வளமை தருக!" என்று எல்லா விலங்குகளும், பறவைகளும் வாழ்த்தி வரவேற்றன.

* * *



# 6. கொழு கொழு ஆடு!



மாலை ஆறு மணி-

மாட்டுத் தொழுவம் என்றாலும் ஆட்டையும் அங்கே தான் கட்டியிருந்தனர். அழகான கொம்பும், கொழு கொழு என்ற உடம்போடும், அங்கே கம்பத்தில் கட்டப்பட்டிருந்த மாவிலை, அரசன் இலைகளை ஒவ்வொன்றாக சுவைத்து தின்று கொண்டிருந்தது ஆடு. அப்போது இரண்டு காளை மாடுகளை அங்கே ஓட்டிக் கொண்டு வந்து கட்டிவிட்டுப் போனார் வீட்டுக்காரர்.

அவர்கள் வந்ததும் இலை தின்பதை நிறுத்தி விட்டு அந்த மாடுகளையே ஏளனமாகப் பார்த்து சிரித்தது ஆடு.

'என்ன தம்பி தின்பதைக் கூட விட்டுவிட்டு எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்து சிரிக்கிறே?' என்றது காளை.

'உங்கள் இருவர் மேலேயும் என்ன தடித்து இருக்கிறது?' என்று ஆடு கேட்டது.

'ஓ இதுவா?' என்றபடியே தன் முதுகைப் பார்த்து, 'முதலாளி அடிச்சிட்டார்' என்றது காளை.

'காலையிலே இருந்து நீங்க என்னென்ன வேலை செய்தீங்க?' கேட்டது ஆடு.

'காலையிலே வயலில் ஏர் உழுதோம். அப்புறம் தென் னந்தோப்பிலே இருந்து தேங்காய்களை வண்டியிலே ஏத்திக் கிட்டு கடைவீதிக்குப் போனோம். அப்புறம் ஒரு தடவை, நெல் மூட்டைகளை ஏத்திகிட்டு அரவை மில்லுக்குப் போனோம். அப்புறம் தோட்டத்திலே இருந்து அடுப்புக்கு விறகை ஏத்திக்கிட்டு இப்போ வீட்டுக்கு வந்தோம்....' என்றது காளை.

'இவ்வளவு வேலை செய்த உங்களுக்கு அடி, உதை. தின்னக் கூட புல் கிடையாது. காய்ந்த வைக்கோல். என்னைப் பாரு. எந்த வேலையும் கிடையாது. வெயிலில் கூட சென்று நான் மேய்வது இல்லை.

ஆனால், தினமும் வகை வகையான தழைகள், இலைகள், புல்கள், உங்களை நினைத்தால் எனக்கு பரிதாபமாக இருக்கிறது' என்று சொல்லி ஏளனமாக சிரித்தது ஆடு.

“என்ன செய்றது தம்பி? உன் தலைவிதி அப்படி எங்கள் தலை விதி இப்படி, அதற்காக நீ எங்களைப் பார்த்து கேவலமாக சிரிக்காதே. நீ சிரிக்கும் போது எங்கள் மனம் வருத்தப்படும் என்பதை நீ அறியவில்லையா...?' என்று கேட்டது மற்ற காளை மாடு.

‘அதைப் பற்றி எனக்கு என்ன கவலை? உங்களைப் பார்த்தால் எனக்கு சிரிப்புத்தான் வருகிறது' என்று சொல்லி மேலும் ஆடு சிரித்தது.

தன் தகுதிக்கு மேல் பேசுகிறது ஆடு என்பதை உணர்ந்ததால் காளைகள் இரண்டும் அமைதியாக இருந்துவிட்டன.

இப்படி தினம் தினம் ஆடு சிரிப்பதும், மாடுகள் அமைதியாக இருப்பதும் வழக்கமாகிப் போயின.

ஒரு நாள் காலை நேரம்.

வீட்டில் உள்ளவர்கள் எல்லாம் குளித்து முடித்து புத்தாடை அணிந்து காரில் புறப்பட்டனர்.

காளைகள் இரண்டும் வண்டியில் பூட்டப் பட்டன. ஆட்டையும் வண்டியில் ஏற்றினர்.

ஆட்டுக்கு ஒரே மகிழ்ச்சி. ராஜாவைப் போல்

நின்றது ஒரு முறை இரண்டு காளைகளையும் ஏளனத் தோடு பார்த்தது.

'ஏய், அடிமைகளா... என் பெருமையைப் பார்த்தீர் களா? உங்கள் தலைவிதியைப் பார்த்தீர்களா? உங்கள் மேல் நான் இருக்க, அடிமையைப் போல் நீங்கள் என்னை சுமந்து செல்வதைப் பார்த்தால் எனக்கு சிரிப்புதான் வருகிறது...' என்றது ஆடு.

வண்டி வேகமாகப் போய் ஒரு டீக்கடையின் முன் நின்றது.

வண்டியோட்டி, டீ குடிக்க இறங்கி போனான்.

'காளைகள் இரண்டும் அழுது கொண்டு இருந்தன. அதைக் கண்ட ஆடு 'என் சுமையைத் தூக்க முடியாமல் அழுகிறீர்களா? என்று கேட்டு மீண்டும் சிரித்தது ஆடு.

காளைகள் இரண்டும் ஆட்டைப் பார்த்து மேலும் அழத் தொடங்கின.

'இப்படி நீங்கள் அழுது கொண்டு இருந்தால் எப்படி? உண்மையைச் சொன்னால் தானே நான் உங்களுக்கு உதவ முடியும்?' என்று கேட்டது ஆடு.

'தம்பி, உனக்கு உதவ முடியவில்லையே என்ப தால் தான் நாங்கள் அழுதுகொண்டு இருக்கிறோம்' என்றது காளை.

'என்ன கிண்டலா? என்றது ஆடு.

'இல்ல, தம்பி, நாங்க சொல்றது தான் உண்மை. தினம், தினம் வகை வகையா உனக்கு இலைகளையும், தழைகளையும் போட்டு, அடிக்காம கொழு கொழுன்னு வளர்த்தாங்களே, ஏன் தெரியுமா? இன்னைக்கு கோயிலிலே உன்னை வெட்டு றதுக்குத் தான். அத நெனச்சுதான் அழறோம்....' என்றன காளைகள்.

அதைக் கேட்ட ஆடு 'மே' என்று ஓங்கி, ஒரு குரல் கொடுத்து விட்டு, காளைகள் இரண்டையும் நீர் வழியும் கண்களோடு பார்த்தது.

ஆடு கத்தியதைக் கேட்டு டீ குடித்து வந்த வண்டிக்காரன் 'கோயில் பூஜைக்கு நேரமாச்சு' என்று சொல்லிய படியே வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

ஆடு இப்போது காளைகளைப் பார்த்து ஏளனமாக சிரிக்கவில்லை.

ஆடு இப்போது அழுதுகொண்டு இருந்தது. தான் இறக்கப் போகிறோம் என்பதற்காக அல்ல. தன் மீது பாசம் கொண்ட காளைகளை, தான் இத்தனை நாட்களாக கேலி பேசியதற்காகத்தான்....

* * *

# 7. கோழிக்குழம்பு!

அஞ்சலைக்கு அறுபது வயது இருக்கும். கணவனை இழந்தவர். இருந்த ஒரு மகளையும் பக்கத்து ஊரில் கட்டிக் கொடுத்து விட்டு தனியே தன் குடிசையில் வாழ்ந்து வந்தாள்.

தன் சாப்பாட்டிற்காக ஒரு சில வீடுகளில் வேலை செய்வார். அவர்கள் கொடுக்கும் சோற்றையும், காசையும் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தாள்.

ஒரு நாள் தெருவில், ஐந்து ரூபாய்க்கு ஒரு கோழிக் குஞ்சு என்று, பெரிய கூடை ஒன்றில் வைத்து விற்றுக் கொண்டு ஒருவன் வந்தான்.

நாமும் இரண்டு வாங்கலாமே என்று கூப்பிட்டாள்.

பஞ்சு மிட்டாயைப் போல வெள்ளை, சிவப்பு நிறத்தில் ஏகப்பட்டக் குஞ்சுகள்.

அதில் இரண்டு வெள்ளை நிற குஞ்சுகளை மட்டும் வாங்கிக் கொண்டாள்.

வீட்டுக்குள் குஞ்சுகளை கொண்டு வந்த அஞ்சலை, அதை கீழே விட்டு விட்டு, அடுக்கலையில் இருந்த பானையில் நொய் அரிசி வைத்திருந்ததில் கொஞ்சம் எடுத்து வந்து அவைகள் முன்னே போட்டாள்.

கோழிக் குஞ்சுகள் அதன் சின்ன மூக்கால் கொத்திக் கொத்தி தின்பதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று முதல் வேலை நேரம் போக அந்தக் கோழி குஞ்சுகளுக்கு தீனிபோடுவதும், தண்ணீர் வைப் பதிலேயும் காலம் கழித்து வந்தாள், அஞ்சலை.

வேலைக்குப் போகும் போது கோழிக் குஞ்சுகளை பாதுகாப்பாக வீட்டிற்குள்விட்டு பூட்டி விட்டுப் போவாள். அவைகளும் பாதுகாப்பாக இருக்கும்.

இரண்டு குஞ்சுகளும் பெரிதாகி முட்டையிடும் நிலைக்கு வளர்ந்து விட்டன.

அஞ்சலையின் இரண்டு கோழிகளையும் பார்க்கும் போது அடுத்த வீட்டு அலமேலுக்கு பொறா மையாக இருக்கும். நம் கோழிகள் அவைகள் போல் கொழு கொழு வென்று இல்லையே என்று.

இந்த நிலையில் அஞ்சலையின் மகளுக்கு உடல்நிலை சரி இல்லை என்று ஆள் வந்து சொல்லிவிட்டுப் போனான்.

அன்று மதியம் தான் அஞ்சலையின் இரண்டு கோழி களும் முட்டையிடத் தொடங்கி இருந்தன.

இந்த நிலையில் கோழிகளை எங்கே, யாரிடம் விடுவது என்று புரியாமல் தவித்தாள் அஞ்சலை.

'மகளுக்கு உடம்புக்கு என்னவோ ஏதோ? எப்படி யும் பத்து நாளாவது நாம் வர ஆகும். அதுவரை கோழிகளை யாரிடம் விட்டுப் போவது?

அடுத்த வீட்டு அலமேலு பொறாமைக்காரிதான். கருமிதான். யாருக்கும் பலன் இல்லாமல் உதவாதவள் தான். ஆனால், பேராசைக்காரி. தனக்கு லாபம் கிடைக்கும் என்றால் எதையும் செய்யக் கூடியவள்.

அலமேலுவிற்கு முப்பது வயது இருக்கும். மாந் தோப்பு, தென்னந்தோப்பு, வயல்காடு என்று ஏராள மான சொத்துக்கள் உண்டு. ஒரே பெண் குழந்தைதான் அவளுக்கு.

இவளை எதைச் சொல்லி சம்மதிக்க வைக்கலாம் என்று சிந்தித்தபடியே அலமேலுவின் வீட்டிற்குச் சென்றாள் அஞ்சலை.

"வாக்கா, என்ன உன் பொண்ணுக்கு உடம்புக்கு முடிய லியாமே?' என்று கேட்டாள்.

"ஆமாம், அலமேலு காலையிலேயே கந்தன் வந்து சொல்லிவிட்டுப் போனான், நானும் போகணும், பிள்ளை எப்படி இருக்காளோ. அதான் உன் கிட்டே வந்தேன்."

"செலவுக்குப் பணம் இல்லியா?"

"அதெல்லாம் இருக்கு," என்று மனதில் போட்ட திட்டபடியே மெல்ல பேச்சைத் தொடங்கினாள்.

"இதோ பாரு அலமேலு என் பொட்டக் கோழி ரெண்டும் இன்னையிலே இருந்து முட்டை விட ஆரம்பிச் சிடுச்சி_"

"அப்படியா?" என்றாள் வியப்போடு.

"நீ தெனமும் இரண்டு முட்டையையும் எடுத்துக்க. நான் வர்ற வரைக்கும் கொஞ்சம் அதுகலை காலையிலே திறந்து விட்டு சாயங்காலம் கூண்டை மூடினா போதும். தீனி அதுகளே போய் மேஞ்சுக்கும்." என்றாள்.

அலமேலு மனதிற்குள்ளேயே கணக்குப் போட்டு பார்த்தாள். 'எப்படியும் அஞ்சலை வர பத்து நாளாவது ஆகும். இருபது முட்டை நமக்காச்சி கூண்டைத் திறந்து மூடணும் அவ்வளவுதானே....'

"என்ன அலமேலு யோசனை பண்ணுற?....."

"ஒண்ணும் இல்லக்கா- உனக்கும் யாரு இருக்காங்க. நான் பாத்துக்குறேன். நீ போய் வா..."

"ரொம்ப புண்ணியம் அலமேலு நான் போய் வரேன்."

"கவலைப்படாம போயிட்டு வா. நான் பாத்துக்கிறேன்." என்றாள் மகிழ்ச்சியோடு.

வீட்டுக்கு வந்த அஞ்சலை. மதியம் கோழி விட்ட இரண்டு முட்டைகளையும், இரண்டு புடவையையும் பையில் எடுத்துக் கொண்டு, வீட்டைப் பூட்டி விட்டு, மகள் வீட்டுக் குப் புறப்பட்டாள்.

போவதற்கு முன் கொல்லைக்குப் போனாள். தன் இரண்டு கோழிகளும் குப்பை மேட்டில் மேய்வதைப் பார்த் தாள். அவைகளை விட்டு கொஞ்ச நாள் பிரியப்

போகிறோமே என்று வேதனைப்பட்டாள்.

ஒரு வாரமாக அஞ்சலையின் கோழி விட்ட முட்டை களை எடுத்து ஆம்லெட் போட்டும், அவித்தும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் அலமேலு.

“அக்கா!” என்று அழைத்தபடியே உள்ளே வந்த முகிலனைப் பார்த்து, தம்பி பட்டணத்துல இருந்து இப்ப தான் வர்றீயா? அம்மா, அப்பாவை எல்லாம் பார்த்துட்டியா?” என்று சந்தோஷமாய் கேட்டாள்.

“அதெல்லாம் அப்புறம், உன்னைத் தான் முதலில் பார்க்க வந்தேன்,” என்றான் முகிலன்.

“சரிபோய் கை, கால் அலம்பிட்டு வா, இட்லி சாப் பிடுவே,” என்றாள் அலமேலு.

“எங்கக்கா மாமா குழந்தை எல்லாம்?” என்று கேட்டான் முகிலன்.

“மாமா, அவங்க தங்கச்சி வீட்டுக்குப் போய் இருக் காங்க. நாளைக்குத்தான் வருவாங்க. தமிழ் எதிர்த்த வீட்டுக்கு விளையாடப்போய் இருக்கா. சரி நீ போய்வா சாப்பிடலாம்.” என்றாள் பாசமாக அலமேலு.

இட்லியைச் சாப்பிட்டபடியே முகிலன் கேட்டான்; “அக்கா நம்ம வீட்டுல கோழி இருக்கா?” என்று.

“மூணு பொட்டக்கோழி, ஒரு சேவல் இருக்கு, ஏண்டா?....”

"உன் கையாலே கோழிக் குழம்பு சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு. அதான் கேட்டேன்."

"அதுக்கு என்னடா, இப்ப சாப்பிட்டுப் போய் உன் சினேகிதன்களைப் பாத்துட்டு வர்றதுக்குள்ள உனக்குக் கோழிக் குழம்பு வைச்சிடுறேன்," என்றாள்.

முகிலனும் மகிழ்ச்சியோடு டிபனைச் சாப்பிட்டு விட்டு, தன் நண்பர்களைப் பார்க்கப் போனான்.

தன் மாமா வாங்கி வந்திருந்த விளையாட்டுப் பொருள் களை வைத்து அலமேலுவின் மகள் அருந் தமிழ் தோட்டத் தில் விளையாடிக் கொண்டு இருந்தாள்.

அப்போது அவசர அவசரமாக கோழியைப் பிடித்து வந்து அதன் கழுத்தை அறுத்து, உரிக்கத் தொடங்கினாள் அலமேலு.

அதைப் பார்த்து, "ஐயோ பாவம் ஏம்மா கோழியை அறுத்த?" என்று அருந்தமிழ் கேட்டாள்.

"மாமாவுக்கு கோழிகுழம்பு வைக்கணும். நீ போய் விளையாடு," என்றாள் தாய் அலமேலு.

அதற்கு மேல் எதுவும் கேட்காமல், எதிர் வீட்டுக்கு விளையாட்டுப் பொருள்களோடு ஓடிப்போனாள் அருந் தமிழ்.

நண்பர்களைப் பார்த்து விட்டு மதியம் முகிலன் வீட் டிற்கு வந்தான்.

“அக்கா, உன் கோழிக் குழம்பு வாசனை தெருக் கோடியிலே வரும்போதே மூக்கைத் துளைக்குதுக்கா,” என்றான்.

“முட்டைக் கோழியாச்சே வரமலா இருக்கும்?” என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டவள், சுடச்சுட சாப்பிடலாம் உட்கார்,” என்று பரிமாறத் தொடங்கினாள்.

“ஏய், நீயும் உட்காருடி சாப்பிடலாம்” என்று மகள் அருந்தமிழையும் சாப்பிட அழைத்தாள்.

“ஐய... எனக்குக் கோழிக் குழம்பு வேணாம். தயிர் சோறுதான் வேணும்...” என்றாள்.

“சரி, மாமா சாப்பிடட்டும் அப்புறம் போட்டுத் தர்றேன்.” என்றாள்.

முகிலன் நன்றாகச் சாப்பிட்டு விட்டு ஊருக்குப் புறப் படத் தயாரானான்.

அஞ்சலை இரண்டு வாரத்திற்கு பின் மகள் வீட்டி லிருந்து வந்தாள்.

வந்ததுமே கோழிக் கூண்டைத் தான் பார்த்தாள்.

அங்கே, ஒரு கோழிதான் இருந்தது. உடனே அலமேலு வீட்டுக்கு போனாள்.

வாயிற்படியில் நின்றிருந்த அலமேலு, “என்னக்கா, இப்பதான்வறீயா?” என்று கேட்டாள்.

"ஆமாம், அலமேலு" என்றவள், "என்ன அலமேலு, கோழிக் கூண்டிலே ஒரு கோழிதான் இருக்கு?"

அதையேன் கேட்கிறே. போன வாரத்திலே இருந்தே ஒண்ணக் காணோம். நானும் எல்லா இடமும் பார்த் துட்டேன். கீரிப்பிள்ளை பிடிச்சிருக்கும் போல இருக்கு..." என்றாள் அலமேலு.

அங்கே, திண்ணையில் அமர்ந்து படித்துக் கொண் டிருந்த அருந்தமிழ் சொன்னாள். "இல்லப் பாட்டி, உங்க வெள்ளக் கோழிய அம்மாதான் பிடிச்சு அறுத்து... மாமாவுக்கு கொழம்பு வச்சுப் போட்டுச்சு..." என்றாள்.

அஞ்சலைக்கு மனம் கலங்கியது.

"ஏய், அது நம்ம கோழிடி..." என்று ஓர் அதட்டல் போட்டாள் அலமேலு.

"இல்ல பாட்டி, உங்க வெள்ளைக் கோழிதான் அது. அதைத்தான் அம்மா தோட்டத்திலே அறுத்தாங்க, பாவம்... அது செத்துப் போச்சு," என்றாள் அருந்தமிழ்.

அலமேலு போட்டாள் ஒரு அடி அவளுக்கு.

"எங்க டீச்சர் சொல்றாங்க பொய் சொல்லக் கூடா துன்னு. நீங்களும் பொய் சொல்லக் கூடாதுன்னு சொல்லு வீங்க. ஆனா, இப்போ... நான் என்னதான் செய்யறது?" என்று அடி தாங்க முடியாமல் அழுதாள்.

குழந்தை உண்மையைச் சொல்லி விட்டாளே என் பதால் அலமேலு தலைகுனிந்து நின்றாள்.

*அஞ்சலை மேலும் ஏதும் அலமேலுவிடம் பேச விரும்பாமல், கோழியை இழந்த வருத்தத்தோடு தன் வீட்டை நோக்கிப் போனாள்.*

*தம்பி, தங்கைகளே! உண்மையைச் சொன்னால் சில இடங்களில் அருந்தமிழுக்குக் கிடைத்ததைப் போல அடி கிடைக்கும் தான்.*

*உலகில் பல அறிஞர்கள் உண்மையைச் சொன்னதற்காக சொல்லடியும், கல்லடியும் பெற்று இருக்கிறார்கள். ஆனால், இன்று புகழோடு இருக்கிறார்கள்.*

*பொய்யைச் சொன்னால், அலமேலுவைப் போல் தலை குனிந்து இருக்க வேண்டியது தான்.*

*உண்மையைச் சொல்லும் போது தலை நிமிர்ந்து நின்று சொல்லலாம்.*

*உண்மைக்கு என்றுமே அழிவில்லை. பொய்க்கு என்றுமே உயர்வு இல்லை! இனி, நீங்களும், அருந்தமிழைப் போல் உண்மையைத்தானே பேசுவீர்கள்?*

❋ ❋ ❋

# 8. புலி எங்கே சார்?



அரும்புகள் சிறுவர் பள்ளியின் மைதானத்தில் மாணவ - மாணவிகள் சீர் உடையில் கூடி நின்றிருந்தனர். அவர்களுக்கு எதிர்புறம் உள்ள சாலையில் பஸ் ஒன்று நின்றிருந்தது.

குழந்தைகள் நின்றிருந்த இடத்தை நோக்கி விளை யாட்டு ஆசிரியை சரோஜாவும், ஓவிய ஆசிரியர் விநாயகமும் வந்தனர்.

"மாணவ - மாணவியர்களே! இப்போது நாம் எல்லாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டார் ஆசிரியர் விநாயகம்.

"வண்டலூர் ஜூவிற்குப் போகிறோம்," என்றனர் அனைவரும்.

"ஆமாம், மிருகக் காட்சி சாலைக்குப் போகிறோம். நாம் அங்கே சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, முயல்,

பலவிதப் பறவைகள் எல்லாவற்றையும் பார்க்கப் போகிறோம்.

"அப்படி நாம் பார்க்கும் போது அந்த விலங்கு களை யோ, பறவைகளையோ கல்லெறிந்து அடிக்கவோ, குச்சு எடுத்துக் குத்தவோ கூடாது.

"அதே நேரம், நீங்களும் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. ஒற்றுமையாக இருக்க வேண்டும். என்ன இருப்பீர் களா?" என்றார் ஆசிரியர்.

"அப்படியே நடந்துக் கொள்கிறோம் ஐயா!" என்றனர் கோரஸாக.

"ரொம்ப மகிழ்ச்சி சரி, மாணவிகள், வலதுபுறமும், மாணவர்கள் இடதுபுறமும் போய் பஸ்சில் அமர்ந்து கொள் ளுங்கள். நீங்கள் கொண்டு வந்திருக்கிற உணவுப் பொருட் களை அவரவர் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்," என்றார் ஆசிரியர்.

அதன்படியே அவர்களும் வரிசையாக சென்று ஒவ்வொருவராக பஸ்சில் ஏறினர். எல்லாப் பிள்ளை களும் பஸ்சில் ஏறிக் கொண்டதும் சரோஜா டீச்சரும், ஆசிரியர் விநாயகமும் ஏறிக் கொள்ள பஸ் வண்டலூர் ஜூவை நோக்கிப் புறப் பட்டது.

பஸ் கொஞ்ச தூரம் சென்றதும் சரோஜா டீச்சர் சொன்னார். "யாராவது பாட்டுப் பாடினால் பயணம் நன்றாக இருக்குமே," என்று

உடனே ஆறாவது படிக்கும் நிலா கேட்டாள் "டீச்சர், சர்மி பாட்டா, சினிமா பாட்டா?" என்று.

"எந்தப் பாட்டாக இருந்தாலும் சரி," என்றார் சரோஜா டீச்சர்.

"சரிங்க டீச்சர்," என்ற நிலா மல்லிகைப்பூவே மல் லிகைப் பூவே பார்த்தாயா பொன்மாலை எங்கள் தோட்டத்தைப் பார்க்க பூத்தாயா...' என்று நிலா பாடத் தொடங்கவும் பஸ்சில் இருந்த அனைவரும் தாளம் போட்டனர்.

நிலா பாடி முடித்ததும் எல்லாரும் அவளைப் பாராட்டினர்.

அதே நேரம், பஸ்சின் பின்சீட்டில் அமர்ந்திருந்த சுந்தருக்கும், சுரேஷிற்கும் சண்டை வந்து, 'சுரேஷ், சுந்தரை பஸ்சின் கம்பியில் மோத ஒரே ரகளை ஆனது.

சுந்தர் அழத் தொடங்கவே, ஆசிரியர் எழுந்து வந்து, "என்ன இங்கே நடந்தது?" என்று கேட்டார்.

அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சங்கர் சொன்னான். "சார், சுந்தர் ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந் தான். சுரேஷ், நான் தான் அங்கே உட்காருவேன் என்றான். அவன் முடியாது. வேண்டுமானா நீ திரும்பி வரும் போது உட்கார்ந்துக் கோன்னான். அதுக்குப் போய் சுந்தரை இந்தக் கம்பி மேலே மோதிட்டான். இப்ப பெரிசா வீங்கிப் போச்சு...."

ஆசிரியர் சுந்தரின் நெற்றியைப் பார்த்தார். வீங்கி இருந்தது. டிரைவரிடம் பஸ்சை நிறுத்தச் சொன்னார்.

பஸ் ரோட்டு ஓரம் நின்றது. பஸ்சில் இருந்தவர் களிடம் சலசலப்பு ஏற்பட்டது.

“எல்லாரும் கொஞ்சம் அவரவர் இடத்திலே அமை தியாக உட்காருங்க.” என்ற ஆசிரியர் சுந்தரின் நெற்றியைத் தேய்த்துவிட்டார்.

அப்படியே அவனைதன் அருகில் அழைத்து வந்து உட்கார வைத்துக் கொண்டு “என்ன சுந்தர் ரொம்ப வலிக்குதா? டாக்டர்கிட்ட போகலாமா?” என்று கேட்டார்.

“இப்ப வலி இல்ல சார். ஒண்ணும் வேணாம் சார்.. போகலாம்,” என்றான்.

“இந்த சுரேஷ் பையன் பள்ளியிலே தான் அட்டூழி யம் பண்ணறான்னா இங்கே வந்தும் வம்பு பண்ணு றானே. இவனை தலைமை ஆசிரியரிடம் சொல்ல வேண்டியதுதான்,” என்ற படியே, டிரைவரைப் பார்த்து பஸ்சை எடுக்கச் சொன்னார் ஆசிரியர்.

பஸ் புறப்பட்டது. பஸ்சில் அமைதி நிலவியது.

“அடுத்து யார் பாடப்போறீங்க?” என்று டீச்சர் கேட்டார்.

“நான் பாடுறேன் டீச்சர்,” என்றான் குமணன்.

“சரி பாடு,” என்றார்.

“ஈஸ்வரா... வானும் மண்ணும் பிரண்ட்ஸ்சிப் பண்ணுது உன்னாலே ஈஸ்வரா...” என்று குமணன் பாடத் தொடங் கியதும், மற்றவர்களும் அவனோடு தாளம் போட்டபடியே பாடினர்.

பஸ்சில் சலசலப்பு மறைந்து கலகலப்புத் தொடங்கியது.

ஒருவழியாக ஜூவின் முன்னே பஸ் சென்று நின்றது.

"அனைவரும் ஒவ்வொருவராக இறங்கி வரிசை யாகப் போய் கீழே நில்லுங்கள்," என்றார் ஆசிரியர்.

அதன்படியே அனைவரும் இறங்கி நின்றனர்.

சரோஜா டீச்சர் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு நிற்க, ஆசிரியர் ஜூவின் அலுவலக அறைக்குச் சென்று திரும்பினார்.

பின் எல்லோரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

ஒட்டகச்சிவிங்கியைப் பார்த்த சில பேர் அங் கேயும், முள்ளம் பன்றியைப் பார்த்த சில பேர் அங்கேயும் ஓடப் பார்த்தனர்.

அவர்களைப் பார்த்த ஆசிரியர் "இதோ பாருங் கள் நாம் அனைவருமே ஒவ்வொன்றையும் சேர்ந்து பார்க்க வேண்டும். தனித்தனியாக யாரும் போய்விடக் கூடாது," என்று கூறியதும் எல்லோரும் சேர்ந்து பார்க்கப் போனார்கள்.

முயலை பார்த்துக் கொண்டு இருந்தபோது ஆசிரியர் பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டார். "மற்ற பிராணிகளை விட முயலிடம் உள்ள சிறப்பு அம்சம் என்ன?" என்று.

"இந்தப் பிராணியை மட்டும் தான் காதைப் பிடித்து தூக்க வேண்டும்," என்று சொன்னான் சங்கர்.

"மிகச் சரியாக சொன்னாய். மேலும் ஒரு செய்தி உண்டு. அதாவது, முயலுக்கு நீண்ட தூரம் நடக்கத் தெரியாது. தாவித் தாவிதான் போகும், சரி, வாருங்கள் அடுத்து முள்ளம் பன்றியைப் பார்ப்போம்" என்று அவைகள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

"ஓய் இந்த முள்ளம்பன்றிக்கு எத்தனை முள் இருக்கும்?" என்று பாலன், அருணைக் கேட்டான்.

"முந்நூறு இருக்குமா?" என்றான்.

அதேநேரம் ஆசிரியர், "முள்ளம்பன்றியின் சிறப்பு தெரியுமா?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"எந்த மிருகமும், முள்ளம்பன்றி கிட்ட சண்டைக்கு வர முடியாது சார்," என்றான் கீரன்.

"உண்மைதான். இதோடு மேலும் ஒரு சிறப்பு உண்டு. இந்த முள்ளம்பன்றியைத் தண்ணீரில் தூக்கிப் போட்டால் மிதக்கும். ஏன்னா, அதன் மீது லேசான முட்கள் அடர்த்தியாக இருப்பதால்தான்," என்று கூறி, அடுத்து இருந்த வாத்துக் களைப் பார்க்க அழைத்துச் சென்றார்.

அங்கே நீரிலே நீந்திக் கொண்டிருந்த வாத்தை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஆசிரியர், "வாத்திடம் உள்ள சிறப்பு குணம் என்ன?" என்று கேட்டார்.

கலையரசன் சொன்னான். "அது தண்ணீரில் மிதந்து கொண்டே தூங்கும்," என்று,

"சரியாகச் சொன்னாய் சரி, வாருங்கள் அடுத்துப் போகலாம்," என்று அழைத்துப் போனார்.

'புலி' என்ற போர்டு போட்ட கூண்டின் முன்னே எல்லோரும் நின்றிருந்தனர்.

"என்ன சார் இது. புலின்னு போர்டு போட்டு இருக்கு, ஆனா, உள்ளே நாய் படுத்து இருக்கு. அது என்ன சார், நாய்க்கிட்டே பால் குடிக்குது?" என்று கலையரசன் கேட்டான்.

"இப்ப ஒரு விஷயத்தைச் சொல்லப் போறேன். எல்லோரும் நன்றாக கேளுங்க. இந்த நாய் பால் கொடுப்பது அதோட குட்டிகளுக்கு இல்லை. பால் குடிக்கும் நான்கு குட்டிகளும் புலிக்குட்டிகள்."

"நீங்க என்ன சார் சொல்றீங்க? நாய் போய் புலிக் குட்டிக்கு பால் கொடுக்குமா?" என்றான் ஒரு மாணவன்.

"இதோ கொடுக்குதே நாய்..."

"அப்ப, புலி எங்க சார்?" என்றான் சங்கரன்.

"அது இந்தக் குட்டிகளைப் போட்டதுமே இறந்து போய் விட்டதாம். அதனால், குட்டிப் போட்ட இந்த நாயிடம் புலிக்குட்டிகளைப் போட்டு இருக்கிறார்கள். நாயும், எந்தவித வேறுபாடும் பார்க்காமல், ஒற்றுமையோடு பால் கொடுக்குது...."

“புலியும், நாயும் எதிரிங்களாச்சே, ஒற்றுமையா இருக்காதே. அப்படி இருக்கும் போது... எப்படிசார்?” என்றான் கலையரசன்.

“ஆமாம் எதிரிங்கதான், அதுங்கக் கூட ஒற்றுமையா வாழுதுங்க. ஆனா, நாம என்று சொல்லி சுரேஷையும், சுந்தரையும் பார்த்தார் ஆசிரியர்.

சுரேஷ் தன் தவறை உணர்ந்து தலை குனிந்து நின்றான். ‘இனி எந்த நிலையிலும் நாம் ஒற்றுமையுடன் மற்றவர்களுடன் பழக வேண்டும், என்றெண்ணிக் கொண்டான்.

ஒருவழியாக மிருகக் காட்சி சாலையில் இருந்த விலங்கு களையும், பறவைகளையும் பார்த்துவிட்டு பள்ளியை நோக்கி பஸ் புறப்பட்டது.

இப்போது, பஸ்சின் பின்சீட்டில்-

ஜன்னல் ஓரம் சுந்தர் அமர்ந்து இருக்க, அவன் பக்கத்தில் சிரித்துப் பேசிக் கொண்டு சுரேஷ் அமர்ந்திருந்தான்.

அதைக் கண்ட அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

❋ ❋ ❋

# 9. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!



சிறுசிறு துளியாக தொடங்கிய மழை சிறிது நேரத்தில் பெருமழையாக பெய்யத் தொடங்கிவிட்டது.

அந்த நேரத்தில் குப்பைத் தொட்டியில் எச்சில் இலை களை நக்கிக் கொண்டிருந்த தெருநாய் ஒன்று மழையில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள அருகில் இருந்த சத்திரத்துத் திண்ணையில் ஒண்டிக் கொண்டது.

நாய்க்கு கீழே கிடந்த குப்பைகள் அதற்கு வெப்பம் மூட்டவே அதற்கு தூக்கம் வரத் தொடங்கியது.

*சிறிது நேரத்தில் இன்னொரு நாய் மழையில் நனைந்தபடியே அங்கே ஓடி வந்தது. அது வந்த காலடி சத்தம் கேட்டு விழித்த நாய், அதைப் பார்த்து குரைக்கத் தொடங்கியது.*

*தன்னைவிட வலிமையான அந்த நாயைப் பார்த்து, வந்த நாய் பயந்தபடியே மழையில் நனைந்து கொண்டு நின்று இருந்தது.*

*பின் "அண்ணே! நான் உங்களுக்கு தொந்தரவு கொடுக் காம ஒரு ஓரமா நின்னுக்குறேன். நீங்க நல்லா தூங்குங்க." என்றது ஒண்ட வந்த நாய்.*

*"நீ அடுத்தத் தெரு பயல் இங்கே உனக்கு என்ன வேலை? ஓடிடு இல்லை. புண்ணுபட்டு போயிடுவ."*

*"அண்ணே! நான் யார் வீட்டுலயும் இல்ல. தெருவிலே தான் வாழ்றேன். கொஞ்சம் தயவுசெய்து இடம் கொடு அண்ணே," என்றது வந்த நாய்.*

*"ஏய்! சும்மா போக மாட்டே. என் தூக்கத்தைக் கெடுக் காம போயிடு," என்று கோபமாக கத்தத் தொடங்கியது.*

*வந்த நாய் அதோடு சண்டை போட வலுவில்லாத தால் மழையில் நனைந்தபடியே நின்றிருந்தது.*

*சத்திரத்தில் நனையாமல் படுத்துக் கொண்டிருந்த நாய், தெருவில் நிற்கும் நாயைப் பார்த்து ஏளனமாக சிரித்தபடியே தூங்கத் தொடங்கியது.*

அதேநேரம் பிச்சைக்காரன் ஒருவன் மழையில் நனைந் தபடியே சத்திரத்தை நோக்கி ஓடிவந்தான்.

அங்கே சுகமாக நாய் படுத்து இருப்பதைப் பார்த்து 'மனுஷன் மழையிலே நனையிறான். இந்த தெரு நாய் எவ் வளவு சுகமா தூங்குது பாருடா...' என்று கூறியபடியே தெருவில் கிடந்த கல் ஒன்றை எடுத்து ஓங்கி வீசினான்.

தூங்கிக் கொண்டு இருந்த நாய் கல்லடிப்பட்டு 'வாள்.... வாள்....' என்று கத்திக் கொண்டு தெருவிற்கு தாவி ஓடியது.

இப்போது அந்த நாய் மழையில் நனைந்து கொண்டே தன்னை சத்திரத்தில் இருந்து வெளியேற்றிய அந்த மனி தனையே பார்த்துக் கொண்டு கோபமுடன் நின்றிருந்தது.

அதேநேரம் முன்பிருந்தே மழையில் நின்று கொண் டிருந்த நாய் அதன் அருகே வந்தது.

"என்ன அண்ணே! நல்லா தூங்கிட்டீங்களா?" என்று கேட்டது.

அதைக்கேட்டு, அந்த நாய் வெட்கப்பட்டு தலை குனிந்து கொண்டது.

"அண்ணே நாம மட்டும் அங்கே ஒற்றுமையா இருந் திருந்தா இந்த மனுஷனை ஒரு வழி பண்ணிட்டு அங்கேயே நாம மழையிலே நனையாம இருந்திருக் கலாம் இல்லியா?" என்று கேட்டது.

"உண்மைதான் தம்பி... ஒற்றுமையா இருந்தா எந்த காரியத்தையும் எளிதா செய்திடலாம்தான். இந்த அறிவு எனக்கு இல்லாததாலே உன்னை நான் கேவலமா நினைச் சுட்டேன். வா! நாம சேர்ந்து போயி.... அவனை ஒருவழி பண்ணுவோம்," என்றபடியே சத்திரத்தை நோக்கி இரண்டும் பாய்ந்து ஓடின.

என்ன குட்டீஸ்.... நாய் இரண்டும் என்ன செய்திருக்குமுன்னு நினைக்கிறீங்க? ஆமாம். நீங்க நினைக்கிறது மாதிரியே இரண்டும் போன வேகத்தைக் கண்டு கடிபடாமல் தப்பித்தால் போதும் என்று மழையில் நனைந்தபடியே அந்த மனிதன் ஓட, இரண்டும் ஒற்றுமையுடன் மழையில் நனையாமல் அங்கே படுத்துக் கொண்டன.

ஒற்றுமையாய் இருந்தால் யாரையும் வென்று விடலாம்னு இந்த கதை மூலம் தெரிஞ்சு இருப்பீங்களே!

❋ ❋ ❋



# 10. பாட்டி காக்கா!



காகம், விடியற்காலையில் கண்விழித்து எழும் பறவை. எழுந்ததும், கரைந்தபடியே இரை தேட புறப்பட்டு விடும். இதுதான் அதன் இயல்பு.

மாமரத்தில் கூடு கட்டியிருந்த ஒரு காகம் அன்று வழக்கம் போல் எழுந்ததும், வெளியில் பறந்து செல் லாமல் அப்படியே கூட்டில் படுத்து இருந்தது.

அந்த காகத்தினால் இப்போதெல்லாம் அதிக தூரம் சென்று இரை தேட முடியவில்லை. வயதான தால் அதன் உடல் தளர்ந்து விட்டது. உடலில் இறகுகள் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரத் தொடங்கி இருந்தன.

வயதாகி விட்டால் பசி வராதா என்ன?.... அதற்கு பசி வந்தது. அதைப் பற்றி சிந்தித்த படியே காகம் படுத்திருந்தது.

நம் கணவர் மட்டும் இருந்திருந்தால், இப்போது எவ்வளவு உதவியாக இருக்கும்? போன வருஷம் நாட்டுப் பக்கம் போன போது குறவன் ஒருவன் சுட்டுக் கொன்று விட்டானே, பாவி. எனக்கு பசிக்கிறது என்று சொன்னால். எங்காவது சென்று ஏதாவது கொண்டு வந்து விடுவாரே என்று வயதானகாகம் எண்ணியதுமே அதற்கு அழுகை வந்தது. எங்கும் பறந்து சென்று இரைதேட முடியாத நாம் என்ன செய்து பிழைக்கலாம் என்று சிந்தித்தது. வடை சுட்டு வியாபாரம் செய்யலாம் என்று முடிவு செய்தது.

அதற்கு முதல் வேண்டுமே என்று நினைத்த காகம், கோயில் பக்கம் உள்ள மளிகைக் கடையில் கடன் கேட்போம். முதலாளிக்கு நம்மை நன்றாகவே தெரியும். கொடுப்பார். பின் வடைகள் விற்றதும் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்று சிந்தித்தது.

அப்படியே இந்த சிந்தனைகளுடன் காகம் படுத்திருந்தது.

நன்கு விடிந்து விட்டது. எல்லா பறவைகளும் எழுந்து விட்டன. கூட்டை விட்டு பறக்கத் தொடங்கி விட்டன.

அப்போது அந்தப் பக்கம் பறந்து வந்த குயில், "காக்கா பாட்டி! ஏன் படுத்து இருக்க.... உடம்பு முடியலியா?" என்று அன்போடு கேட்டது.

“ஆமாண்டி பேத்தி, வயசாயிடிச்சுல்ல. அதான் வெளியே ரொம்ப தூரம் போக முடியல” என்றது பாட்டி காகம்.

“அப்புறம் எப்படி பாட்டிச் சாப்பிடுவே?” என்று குயில் கேட்டது.

“நம்ம பள்ளிக் கூடப்பக்கம் ஒரு வடைக் கடை போட்டு வியாபாரம் செய்யலாமுன்னு இருக்கேண்டி பேத்தி....” என்றது பாட்டி காகம்.

“நல்ல ஐடியா பாட்டி. நானும் அப்பப்ப வந்து வாங்குவேன். உடனே செய். வேறு யாராவது செய்துடப் போறாங்க....” என்று சொல்லி விட்டு பறந்தது குயில்.

காகம் பள்ளிக் கூடப்பக்கம் இருந்த வேப்பமரத்து அடியிலே வடைக்கடையைத் திறந்து விட்டது.

வியாபாரம் ஜோராக நடந்தது. அடுப்பை எரிப்பது, வடை தட்டுவது, வியாபாரம் பார்ப்பது என்று எல்லா வேலைகளையும் தனித்து பாட்டி காகம் செய்தது.

சிட்டுக் குருவியும், மைனாவும் வந்து வடை வாங்கி சென்ற பிறகும், வடைக் கடையின் முன்னே ஒரு இளைய காகம் நீண்ட நேரமாக அமர்ந்து இருந்தது.

அதைப் பாட்டிக் காகம் பார்க்காமல் இல்லை.

இது ஏன் ரொம்ப நேரமா வந்து உட்கார்ந்து இருக் கிறது?' என்று சிந்தித்தபடியே வடையை சுட்டுக்

கொண்டே ஓரக் கண்ணால் அதையும் பார்த்துக் கொண்டு இருந்தது பாட்டி காகம்.

திடீரென்று குஞ்சு காகம் ஒரு வடையை 'லபக்' கென்று எடுக்க அந்த நேரம் அதைக் கவனித்து விட்ட பாட்டி காகம் கையில் வைத்திருந்த கொம்பால் பொட் டென்று போட, குஞ்சு காகத்தின் இறகில் சரியான அடி விழுந்தது. கொர்ர்.... என்று உட்கார்ந்து விட்டது.

"வடையைத் தட்டில் போடுடி" என்றது பாட்டி காகம்.

எந்த வித மறுப்பும் சொல்லாது குஞ்சு காகம் தன் வாயில் இருந்த வடையைத் தட்டில் போட்டது.

"ஏன் வடையை எடுத்த?" கேட்டது பாட்டி காகம்.

"பசித்தது!" என்றது குஞ்சு காகம்.

"நல்ல இளமையோடுதானே இருக்கிறாய்? உழைத்துச் சாப்பிட்டால் என்ன? நம் முன்னோரில் ஒருவர் இப்படித் தான், வயதான ஒரு பொம்பளை வடை சுட்டு வித்தபோது திருட்டுத்தனமா ஒரு வடையை எடுத்திருக்கிறாரு. அப்படி எடுத்த வடையை அவராவது தின்னாரன்னா, அதுவும் இல்லை. நரி கிட்டே கொடுத்து ஏமாந்து போனாரு. அப்ப நம்ம பரம்பரைக்கு மனிதர்கள் திருட்டுப் பட்டம் சூட்டினர். இன்னும் மறையல. இப்ப நீ வேற என்கிட்டேயே திருடுறீயா?" என்று கோபமாக கேட்டது பாட்டி காகம்.

“என்ன மன்னிச்சுடு பாட்டி, இனி நான் எப்பவும் திருடவே மாட்டேன்.” என்று தன் தவறை உணர்ந்து குஞ்சு காகம் சொல்லியது.

“பசிக்குதுன்னா கேளு. நான் தர்றேன். சரிசரி இங்கே வா. அடி பலமா விழுந்துடுச்சா” என்று கிட்டே அழைத்து அதன் இறகை தடவி விட்டு, “இந்தா இதை சாப்பிடு” என்று ஒரு வடையை எடுத்துக் கொடுத்தது.

“வேணாம் பாட்டி நான் உனக்கு எந்த வேலையும் செய்யலியே. எப்படி வாங்கிக்கிறது?” என்று குஞ்சு காகம் கேட்டது.

அதன் அறிவைக் கண்டு மகிழ்ந்தபடியே “என் செல்லம் இந்தா இதைத் தின்னுட்டு கடைக்குப் போயி இந்த குவளை யிலே எண்ணெய் வாங்கிட்டு வா” என்று வடையைக் கொடுத்தது பாட்டி காகம்.

“சரி பாட்டி!” என்று சொல்லி வடையை வாங்கித் தின்று விட்டு, எண்ணெய் வாங்க குஞ்சு காகம் பறந்து போனது.

அன்று முதல் பாட்டி காகத்திற்கு வடை சுட்டு கொடுத்து வியாபாரத்தை கவனித்துக் கொண்டு இனிமை யாக வாழ்ந்தது குஞ்சு காகம். தன்னுடைய தள்ளாத காலத்தில் தனக்கு ஒரு துணையை ஆண்டவன் கொடுத் ததை நினைத்து மகிழ்ந்தது பாட்டி காகம்.

* * *

# 11. போலீஸ் ஸ்டேஷனுக்கு போன யானை!

இது பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த உண்மை நிகழ்ச்சி!,

வயது வேறுபாடு இன்றி, குழந்தைகள், பெரியோர்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லோருக்குமே யானையைப் பிடிக்கும்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டாள் கோயிலில் ஒரு யானை இருந்தது.

கோயிலுக்கு வரும் பக்தர்கள், அந்த யானைக்கு பழம், தேங்காய் கொடுத்து மிகுந்த அன்போடு பழகி வந்தனர். அந்த யானையின் பாகனும் அதனிடம் அன்பாகவே இருந்தான்.

இப்படி இருந்த பாகன், குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி யானையைக் காரணமின்றி அடிக்கத் தொடங்கினான்.

ஒருநாள் குடிபோதையில் இருந்த அவன், அதன் முதுகில் அமர்ந்து பயணம் செய்வதற்கு பதிலாக, அதன் வயிற்றில் ஒரு பக்கம் தொங்கிக் கொண்டு பயணம் செய்தான்.

அதனால் யானைக்கு நடக்கும் போது சிரமம் ஏற்பட்டது. எனினும் அவன் மீது கொண்ட அன்பால்

அவனைக் கீழே தள்ளாது பொறுமையாக இருந்தது. இவ்வாறு ஒவ் வொரு நாளும் அவனது அடாவடிச் செயல்கள் அதிகரித்தன. ஒரு நாள் பாகன், நல்ல குடிபோதையில் யானையை வெளியில் அழைத்துச் சென்று விட்டு, வந்து கோயிலுக்கு முன் எப்போதும் கட்டும் இடத்தில் கட்ட முயன்ற போது, யானை தன் காலை சங்கிலியில் நுழைக்காமல் அகற்றிக் கொண் டது. ஆனால், குடி போதையில் இருந்த யானைப் பாகன், அதனைக் கட்டி விட்டதாக எண்ணி அங்கேயே படுத்துக் கொண்டான்.

யானை சிறிது நேரம் கட்டுண்டது போல் பாவனை செய்து கொண்டிருந்தது.

பின், யானைப் பாகன் தூங்கி விட்டானா, விழித் திருக்கிறானா என்று அவன் உடலை தும்பிக்கையால் தொட்டுப் பார்த்தது.

அவன் தூங்கி விட்டான் என்பதை உணர்ந்ததும், அவ்விடத்தை விட்டு ஓட்டமும் நடையுமாய் விரைந்து வீதி வழியே சென்றது.

அதைக் கண்ட ஊர் மக்கள், யானைக்கு மதம் பிடித்து விட்டது என்று எண்ணி அலறிக் கொண்டு ஓடினர்.

இதற்கிடையில் ஒருவர், குடிபோதையில் படுத் திருந்த யானைப் பாகனை எழுப்பி, யானை வேகமாகப் போவது குறித்துச் சொன்னார்.

அதைக் கேட்ட யானைப் பாகன், அவசர அவ சரமாக எழுந்து, முகத்தைக் கழுவிக் கொண்டு

கொஞ்சம் போதை தெளிந்த நிலையில் யானை சென்ற திசையை நோக்கி ஓடினான்.

அதற்குள் யானை காவல் நிலையத்திற்குள் சென்று, அங்கே அமர்ந்திருந்த காவல் அதிகாரியின் காக்கிச் சட்டையை தும்பிக் கையால் பிடித்துக் கொண்டது.

அதைக் கண்டு சுற்றி இருந்த காவலர்கள் எல்லாம் திசைக்கு ஒருவராக ஓடினர். யானையின் பிடியில் அகப்பட்ட காவல் அதிகாரி செய்வது அறியாது தவித்தார். யானையைச் சுடுவதா வேண்டாமா என்று குழம்பிக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் யானைப் பாகன் அங்கே வர, யானை காவலாளியிடம் அவனைத் தும்பிக்கையால் காட்டி ஏதோ சொல்லியது. அவர் ஏதும் புரியாமல் விழித்தார்.

யானைக் கூற விரும்புவதை புரிந்துக் கொண்ட பாகன், "ஐயா! நான் குடிச்சிட்டு அதை அடிச் சிட்டேன். அதனால் தான் உங்களிடம் என்னை தண்டிக்கச் சொல்கிறது." என்று விளக்கினான். அப்புறம் தான் காவல் உயர் அதிகாரி நிம்மதி யானார்.

பின்பு பாகன் யானைக்குத் தெரியாமல், தன் வாயை கையால் மூடிக்கொண்டு, "ஐயா! நீங்கள் என்னை திட்டுங்கள், அடியுங்கள். அப்போதுதான் இங்கிருந்து அது நகரும்," என்றான்.

காவல் அதிகாரியும் அதன்படியே செய்தார். பின் அவர், "இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன் என்று எழுதி கையெழுத்துப் போடு,"

என்று யானைப் பாகனை மிரட்டுவது போலக் கூறினார். அதன்படியே யானைப் பாகனும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க, அதைப் பார்த்த யானை, நன்றியோடு காவல் அதிகாரியைப் பார்த்து விட்டுத் திரும்பி கோயிலை நோக்கி நடந்தது.

இந்த நிகழ்ச்சியை ஊர் மக்கள் கூடி நின்று பார்த்து வியந்தனர்.

அன்று முதல் யானைப் பாகன், குடிப்பதையே விட்டு விட்டான்.

இன்று எதற்கெடுத்தாலும் தடியைத் தூக்கும் மக்கள் மத்தியில், சட்டப்படி ஆக்ஷன் எடுத்த யானையின் அறிவை என்னவென்று சொல்வது குட்டீஸ்?

***



# 12. தெருநாய் விமானத்தில் பறந்தது!

மனிதன் தான் நன்றியை மறப்பான், காரியம் இருந்தா காலைப் பிடிப்பான். உண்மையான உள்ளத்தோடு நேசிக்க மாட்டான். அவனுடைய செயல்கள் எப்போதுமே போலி யாவே இருக்கும்.

ஆனா, குழந்தைகளே! யானை, குரங்கு, மாடு, குதிரை, பூனை, நாய் இதுங்களோட செயல்கள் எப் போதும் உண்மையாய் இருக்கும். இது தான் உண்மை!

இப்ப, நாம வழக்கம் போல ஒரு நாயைப் பற்றிய கதைக்குப் போவோமா?

ஜெர்மனியில் இருந்து உல்ரிக்கிரேமர் என்ற பெண் நமது இந்தியாவில் உள்ள கேரளாவைச் சுற்றிப் பார்க்க வந்தாள்.

அந்தப் பெண் கேரள நாட்டை இரண்டு மாசம் சுற்றினா. அந்த ரெண்டு மாசத்துல அவள் எங்கு போனாலும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து ஒரு தெரு நாய் சுற்றி வந்தது.

முதல்ல, அந்தப் பெண் தன்னைச் சுற்றி வரும் நாயை பொருட்படுத்தவே இல்லை. பின் ஒவ்வொரு நாளும் அந்த நாயோட செயல்கள் மீது அந்தப் பெண்ணோட கவனம் செல்லவே அதோடு நல்லா பழகினார். அதற்கு பிஸ்கெட், சோறு என்று உணவு பொருட்களை வாங்கிப் போட்டா.

அவள் வெளியூரிலே இருந்து சுற்றிப் பார்க்கத் தானே இந்தியாவுக்கு வந்தா. வந்த காலம் முடிந்து விட்டது.

அந்தப் பெண், தன் சொந்த நாடான ஜெர் மனுக்குப் புறப்பட்டர். அப்போது அவளோடு இவ் வளவு காலம் பழகிய அந்த நாய் ஏக்கத்தோடு பார்த் ததை அவளால் பொறுத்துக் கொள்ள முடியல.

அந்த நாயை அவளால் பிரிய முடியல. அவளுக்கு கண் கலங்கியது.

உடனே அவ தன் நாட்டு அரசிடமும், கேரளா போலீஸ் இலாகாவிடமும் அனுமதி பெற்றா எதுக்கு தெரியுமா?

தன்னோடு பழகிய அந்த நாயை தன் நாட்டிற்கே விமானத்துல அழைச்சிக்கிட்டுப் போவத்தான்.

அதன்படியே அந்தத் தெரு நாயை தன்னோடு ஜெர்மனுக்கே விமானத்தில் அழைத்துக் கொண்டு பறந்து போனாள்.

குழந்தைகளே! குப்பையும் ஒருநாள் கோபுரத்துல ஏறும் என்பது பொய் அல்ல. உண்மையான அன்புக்கு கிடைத்த பரிசை பார்த்தீங்களா?

❋ ❋ ❋

# 13. நரியை ஏமாற்றிய கரி!



அன்று நரி, யார் முகத்தில் விழித்ததோ தெரிய வில்லை. அதற்கு காலை முதலே பிரச்னையாக இருந்தது. நேற்று மாலையில் தன் இருப்பிடம் திரும்பும் போது வாகை மரம் ஒன்றில் கொழுத்த ஒரு கோழி ஏறி இரவுக்காக அமர்ந்ததை பார்த்தது.

அப்போதே நினைத்து விட்டது காலையில் அது எழுந்து கீழே வரும்போது மரத்தின் மறைவில் ஒளிந் திருந்து அதைப் பிடித்து விட வேண்டும் என்று,

அதனால், இரவு கூட சரியாக நரி தூங்காமல் இருந்து, காலையில் கோழியைப் பிடிக்க வந்தபோது, அதற்கு முன்பே மரத்தின் மறைவில் ஓநாய் ஒளிந்து இருந்தது.

அதைக் கண்ட நரி, இந்த நேரத்தில் நாம் இங்கு இருந்தால், என் சாப்பாட்டில் பங்குக்கு வந்து விட்டாயா? என்று கோபம் வந்து நம்மை அடித்தே போட்டுவிடும் என்பதால் வந்தது தெரியாமல் அதன் கண்ணில் இருந்து மறைந்து போனது. இல்லை மறைந்து நின்று கொண்டது.

கோழிக்கு விழிப்பு வந்தது, சுற்றிலும் ஒருமுறை பார்த்து இறகுகளை படபடவென்று அடித்துக் கொண்டது.

ஓநாய், அது எப்போது கீழே வரும், ஒரே அமுக் காக அமுக்கலாம் என்று வாயில் நீர் ஒழுகப் பார்த்துக் கொண்டு இருந்தது. ஓநாய் நிலையையும் நரி பார்த்துக் கொண்டு மறைவில் பதுங்கி இருந்தது. அந்த நேரத்தில் கரிக்குருவி ஒன்று பறந்து வந்து கோழியிடம் அமர்ந்து அதன் காதோடு ஏதோ பேசியது.

அதைக் கேட்ட கோழி அப்படியா என்பதைப் போல மெல்ல குனிந்து மரத்தின் பக்கம் தலையைச் சாய்த்துப் பார்த்தது. அங்கே ஓநாய் உட்கார்ந்து இருந்ததைப் பார்த்தது நன்றி என்றது கரிக் குருவியைப் பார்த்து கோழி, கரிக்குருவிப் பறந்து போனது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருந்தது நரி. கோழி கீழே இறங்கவே இல்லை. சூரியன்

உதயமாயிற்று. காட்டு விலங்குகளும், பறவைகளும் காடு முழுவதும் நடமாடத் தொடங்கின.

இனியும் இறங்கி வராத கோழிக்காக நாம் இங்கே காத்திருப்பது 'வேஸ்ட்' என்று கருதிய ஓநாய், கோழியைத் தின்ன முடியவில்லையே என்ற ஏக்கத் தோடு புறப்பட்டுப் போனது.

அதைக் கண்ட நரி, 'அப்பாடா! நமக்குக் கிடைக் காத கோழி ஓநாய்க்கும் கிடைக்கவில்லை,' என்ற மகிழ்ச்சியில் புதரில் இருந்து வெளிப்பட்டு கோழி அமர்ந்து இருக்கும் மரத்திற்கு கீழே படுத்துக் கொண்டது.

மரத்தில் இருந்த கோழியைப் பார்த்து நரி தனக்குள்ளேயே பேசிக் கொண்டது. 'ஏய்! கோழியே நீ ஓநாயை ஏமாற்றலாம். என்னை ஏமாற்ற முடியாது. நான் பலரை ஏமாற்றி வருபவன். இன்று நீ எப்படியும் கீழே வராமலா போய் விடுவாய்? வா பார்த்துக் கொள்கிறேன்,' என்று.

அதே நேரம் முன்பு கோழியிடம் வந்து சென்ற கரிக் குருவி மீண்டும் வந்தது.

"என்ன நண்பரே! ஓநாய் போன பின்னும் ஏன் இன்னும் கீழே இறங்கி மேச்சலுக்கு வராமல் இங்கேயே இருக்கிறாய்?" என்று கேட்டது.

"எப்படி கீழே இறங்கிவர இயலும்? முன்பு ஓநாய் என்னைப் பிடிக்க வெகுநேரம் உட்கார்ந்து இருந்து,

ஏமாந்து போனது. இப்போது அங்கே பார், என்னைப் பிடிக்க அதே இடத்தில் நரி உட்கார்ந்து இருக்கு...." என்று சொல்லி அதன் பக்கம் திரும்பியது.

கரிக்குருவி அங்கே பார்த்தது. நரி அங்கே நாக்கை நீட்டி 'ஜொள்' விட்டபடியே உட்கார்ந்து இருந்தது. "இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்று கோழியிடம் கரிக்குருவிக் கேட்டது.

"அதுதான் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நாம் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றி விடலாம். இந்த நரியை மட்டும் ஏமாற்றவே முடியாது. இப்போது என்ன-செய்வது? எனக்கு பசி வேறு எடுக்கிறது," என்று கோழி வருத்தத்தோடு கூறியது.

"நீ சொல்வது சரிதான். இந்த உலகிலேயே மனிதர் களைப் போல் ஏமாற்றுவதில் வல்லமை பெற்றது நரிதான். இதனிடம் இருந்து நீ எப்படி தப்புவாய்?" என்று கேட்டுவிட்டுக் கரிக்குருவி சிந்திக்கத் தொடங்கியது.

"நண்பரே! எனக்கு அதிகமாகப் பசி எடுக்கிறது," என்று சோர்ந்து போய் சொன்னது கோழி.

"வருத்தப்படாதே நண்பரே! ஏமாற்றுவதில் வல்லமை பெற்றது நரி. அதை யாராலும் ஏமாற்ற முடியாது. எல்லோரும் நரியைப் பற்றி இப்படித்தான் சொல்கிறார்கள்.

'இதை ஏன் நாம் ஏமாற்றக் கூடாது? இப்படி கரிக் குருவி நினைத்தது. அதற்காக சிந்தித்தது. நரியைப்

பார்த்தது. அது அசையாமல் கோழியைப் பார்த்த படியே அமர்ந்து இருந்தது.

பல கோணங்களில் கரிக்குருவி சிந்தித்தது.

"நண்பரே! இன்னும் சிறிது நேரத்தில் நாம் இரை தேடப் போகிறோம்...." என்றது கரிக்குருவி.

"இது நடக்கிற காரியமா? நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டது கோழி.

"நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அப்படியே அமர்ந்த படியே நரி நாக்கில் 'ஜொள்' விட உட்கார்ந்து இரு. நான் சிறிது நேரத்தில் வருகிறேன்." என்ற கரிக்கு ருவி, நரிக்குத் தெரியாமல் வந்தது போலவே பறந்து போனது.

கோழியைப் பார்த்த நரி, "நான் ஓநாயைப் போல் ஏமாந்தவன் இல்லை. இன்று உன்னைத் தின்னாமல் இந்த இடத்தை விட்டு நான் நகரவே மாட்டேன்," என்றது.

"ஏய் நரியே! நண்டு, நத்தைகள் என்று குளத்திலே எவ்வளவோ இருக்கிறதே, நீ அவைகளைப் போய் தின்னுத் தொலைக்கக் கூடாதா?"

"இன்று எனக்கு உணவாகப் போகும் என் அழகிய கோழியே! நீ சொன்ன நண்டு, நத்தைகளை தினம் தினம் தின்று எனக்கு அலுத்துவிட்டது. நேற்று மாலை உன்கொழு கொழு உடலைப் பார்த்தது முதலே எனக்கு தூக்கம் கெட்டது. இரவு முழுதுமே உன்

நினைவு என் நெஞ்சை சுட்டது. ஓநாய் பயல் எனக்கு முன்பே இங்கே உனக்காக காத்து இருந்ததைப் பார்த்து என்னுடல் வேர்த்துப் போனது. எப்போது இறங்கி வரப்போகிறாய்?" என்று ஆவலோடு நரி கேட்டுக் கொண்டு இருந்தபோது-

கரிக்குருவி, வேகமாக பறந்து வந்தபடியே, "நண்பர் கோழியாரே! ஆபத்து ஆபத்து! நீ மேல் கிளையில் ஏறி மறைந்து கொள். குறவர்கள் பத்து பேர் துப்பாக்கியோடும், வேல், தடி, வலைகளோடும் வருகின்றனர். எப்படியும் இன்று பத்து கோழிகளையும், இரண்டு நரிகளையும் பிடிக்கப் போவதாக பேசிக் கொண்டு வருகின்றனர்," என்று காடே அதிரும்படி கத்தியது. அதைக்கேட்ட கோழி பதறியபடியே தாவித் தாவி மரத்தின் உச்சிக்கே போய் ஒளிந்து கொண்டது.

கரிக்குருவி கத்தியதைக் கேட்ட நரி, கோழியை மறந்தது, எப்படி தப்புவது, எங்கே போய் மறைவது என்று ஒன்றும் புரியாமல் காட்டில் கண் மண் தெரி யாமல் ஓடிக் கொண்டே இருந்தது நரி.

கரிக்குருவி அது ஓடுவதையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் இருந்தது. பிறகு, "நண்பரே! நரியார் ஓடுவதைப் பார்," என்றது.

"என்ன நண்பரே சொல்கிறீர்?"

"நீ மறைவில் இருந்தால் எப்படி? அருகில் வா பயப் படாமல். இங்கே யாரும் இல்லை." என்று கரிக் குருவி சொன்னதும், மறைவில் இருந்து மெல்ல கோழி கீழே இறங்கி வந்தது.

கரிக்குருவி வாய் திறந்து சிரித்தபடியே "பாவம், அந்த நரி ஓடிய ஓட்டத்தில் எந்த மரத்தில் மோதிக் கொண்டதோ, எந்தப் புதரில், எந்த குழியில் இப்போது அது பயத்தோடு பதுங்கிக் கிடக்கிறதோ? யார் கண்டது."

"நீ என்ன சொல்கிறாய்?"

"வல்லவனுக்கு வல்லவன் நாட்டில் உண்டு என்று சொல்ல வருகிறேன். நான் சொன்ன குறவர்கள்.... துப்பாக்கி, வேல், வலை எல்லாம் டூப்! அந்தப் பொய்யைச் சொன்னதால் நரி நகம் உடைய ஓடியது. இல்லை என்றால் உன்னை விட்டு ஓடி இருக்குமா?" என்று சொல்லி கரிக்குருவி சிரித்தது.

"என்ன நீ சொன்னது பொய்யா?"

"ஆமாம், யாருக்கும் தீங்கு இல்லாத அப்பட்ட மான பொய் நரியை எப்படி பயம் காட்டி விரட்டுவது என்று சிந்தித்தேன். அப்போது என் சிந்தனையில் குறவர்கள், துப்பாக்கி, வேல், வலை எல்லாம் வந்தது. எமனைக் கண்டு மனிதர்கள் பயப்படுவதை போல, குறவர்களைக் கண்டு நரி, பயப்படும் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் குறவர்களை நரிக்குறவர்கள் என்றே அழைக்கிறார்கள். எப்படி என் நாடகம்?" என்று கேட்டது கரிக்குருவி சிரித்த படியே.

வியப்போடு கரிக்குருவியைப் பார்த்தது கோழி. பின் "நண்பரே! 'நரியை ஏமாற்றிய கரி நீ' என்று உனக்கு பட்டமே சூட்டலாம் போல் இருக்கிறது. உன்னை நண்பனாக நான் பெற்றதற்கு மிகவும் மகிழ்ச்சி அடை

கிறேன்." என்று கரிக் குருவியை கட்டித் தழுவிக் கொண்டது கோழி.

"நல்லது நண்பரே! இன்னுமா நீ பசியோடு இருக்க வேண்டும்? புறப்படு, போகலாம்..." என்று கரிக்குருவி சொன்னதும் மகிழ்ச்சியோடு கோழி கீழே இறங்கியது. கீழே கோழி நடந்து வர, கரிக்குருவி அதற்கு மேலே பறந்து வந்து கொண்டு இருந்தது நட்போடு!

குட்டீஸ்! தந்திரமிக்கது நரி என்பார்கள். அந்த நரியையும், கரிக்குருவி ஒன்று ஓட வைத்து விட்டது. 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்பார்களே. அது இதுதான். நீங்கள் வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் ஆவது எப்போது? இப்போதேவா? ஓ.கே!



# 14. பழநாடு!

பலவிதமான பழ மரங்களைக் கொண்டு இருந்த தால் அந்த நாட்டை 'பழநாடு' என்றே அழைத்தனர். வளமையான அந்த நாட்டை சீரோடும், சிறப்போடும் ஆண்டு வந்தான் மன்னன் வளவன்.

அந்த நாட்டில் கொலை, களவு நடந்தது இல்லை. தானியச் செல்வத்திற்கு அடுத்தபடியாக கால்நடைச் செல் வங்கள் நிறைந்த ஊர்.

அப்படி சிறந்து விளங்கிய நாட்டில்தான் தற் போது ஆடு, மாடுகள் காணாமல் போய் கொண்டிருந் தன. இது எப்படி என்று மக்களுக்கு விளங்கவே இல்லை. தினமும் இரண்டு மூன்று ஆடுகளும், மாடுகளும் காணாமல் போயின.

ஆரம்பத்தில் அரசரிடம் முறையிடாமலேயே நாமே இதற்கு ஒரு முடிவைக் கட்டி விடலாம் என்று ஊர் மக்கள் எண்ணினர்.

நாளுக்கு நாள் கால்நடைகள் குறைந்தனவே தவிர, தீர்வு ஒன்றும் கிடைக்கவில்லை.

ஊர் மக்கள் கூடினார்கள். இனியும் இந்தச் செயலை அரசரிடம் சொல்லாமல் இருப்பது நல்ல தல்ல என்ற முடி விற்கு வந்தனர்.

ஊர் தலைவர் முன் வந்து மன்னனிடம் தங்கள் நிலையை கூறினர்.

"அப்படியா? ஏன் இதை முன்பே வந்து சொல்லி யிருக்கக் கூடாது?" என்று மன்னன் அன்போடு கடிந்து கொண்டதோடு, அமைச்சர்களை அழைத்து, "நம் நாட்டு கால்நடைச் செல்வங்கள் நித்தம் நித்தம் இப்படி அழிவதை உடனே நிறுத்த ஏற்பாடு செய்யுங்கள்." என்று கட்டளை இட்டான்.

உடனே படை வீரர்கள் நல்லூரை நோக்கி சென்றனர்.

ஊர் முழுவதும் பாதுகாப்பு இருந்தும் ஒவ்வொரு நாளும் ஆடுகளும், மாடுகளும் காணாமல் போவது நிற்க வில்லை.

அமைச்சர்களும், வீரர்களும் மன்னரிடம் நிலை மைகளை எடுத்துச் சொன்னார்கள்.

மன்னன் மக்களின் நிலை எண்ணி மனம் கலங்கினான்.

வேற்றூரில் இருந்து வந்து யாரும் திருடுவதற்கு வாய்ப்பில்லை. அப்படி இருந்தும் இது எப்படி? அரசன் சிந்தித்தான்.

அமைச்சர்களை கலந்து ஆலோசனை நடத்தினான்.

"அரசே! கால்நடைகள் காணாமல் போவதற்கு காரணம் என்ன? என்பதை கண்டறிந்து கூறுபவர்களுக்கு

தக்கப்பரிசு வழங்கப்படும் என்று பறைசாற்றினால் என்ன?"

"என் மக்களின் நலன்தான் எனக்கு முக்கியம். இதற்கு ஒரு தீர்வை எந்த நாட்டு மக்களும் சொல்லட்டும். அவர் களுக்கு என் மகளைத் திருமணம் செய்து வைப்பதோடு, இந்த நாட்டு சிம்மாசனத்தையும் அவர்களுக்கு வழங்குகிறேன் என்று அறிவிப்புச் செய்யுங்கள்," என்று மன்னன் கட்டளை யிட்டான்.

ஊர் பொது மேடையில் அரசனின் ஆணை பிறப்பிக் கப்பட்டது.

அந்த ஊருக்கு அப்போதுதான் துணி வியாபாரம் செய்ய வந்த இளைஞன் ஒருவன் அரசனின் அறிவிப் பைக் கேட்டு அதிசயத்து நின்றான்.

தன் அருகில் இருந்தவரிடம் விபரமாக அவ்வூர் நிலையை அறிந்து கொண்டான்.

அன்று மதியம் ஊரில் வியாபாரத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது நல்ல வெயில் நேரம். அதனால், ஊர் கோடியில் இருந்த புன்னை மர நிழலில் சிறிது நேரம் களைப்பாறி செல்லலாமே என்று எண்ணி துணி மூட் டையை ஒரு ஓரமாக வைத்து விட்டு அமர்ந்தான்.

அவன் அமர்ந்திருந்ததற்கு நேர் எதிரே ஒரு பெரிய ஏரி நீரால் நிரம்பி இருப்பதைக் கண்டான்.

இந்தக் கோடையில் இவ்வளவு நீர் இந்த ஏரியில் எப்படி வந்தது? தன்னோடு மரநிழலில் படுத்திருந்த ஒரு வரிடம் விசாரித்தான்.

"போன மாசம் காட்டாறு பெருக்கெடுத்து வந்தது. இதுபோல எப்பவும் வந்தது இல்லை. அத னாலேதான் இந்தக் கோடையிலே கூட இவ்வளவு தண்ணி நிரம்பி இருக்கு. ஆனா, ஊருக்கு இந்த ஏரியால எந்த நன்மையும் இல்லை. கால் நடைகளுக்குத்தான் பயன்படும்," என்றார்.

அதேநேரம் நான்கு ஆடுகள் ஏரியை நோக்கி நீர் குடிக்கப் போனதை அந்த இளைஞன் கவனித்தான்.

நீர் குடித்த ஆடுகள் மீண்டும் திரும்பின. அவை களைப் பார்த்தவன் மனதில் ஒரு நெருடல். சிந்திக்கத் தொடங் கினான்.

அந்த சிந்தனையுடனேயே தன் ஊருக்குப் போனான்.

மறுநாள் மீண்டும் அந்த ஊருக்கு வந்தான்.

அரண்மனைக்கு சென்றான். அரசனைப் பார்க்க அனுமதி கேட்டான். அரசனை சந்தித்தான். பேசினான்.

"அரசே! இந்த ஊர் கால்நடைகள் காணாமல் போவதன் காரணத்தையும், அதைத் தவிர்க்கின்ற வழி யையும் நான் அறிவேன்," என்றான் இளைஞன்.

இளைஞன் கூறியதைக் கேட்டதும் சிம்மா சனத்தில் அமர்ந்து இருந்த மன்னன் மகிழ்ச்சியோடு துள்ளி எழுந்து வந்து அந்த இளைஞனைக் கட்டித் தழுவி, "அப்படியா? மிக்க மகிழ்ச்சி. சொல்லுங்கள்.... உடனே சொல்லுங்கள்..." என்றான் மன்னன்.

அவையோர் அவனை வியப்போடு பார்த்தனர்.

"ஆம் அரசே! அந்த தீய சக்தியை உடனே நான் அழித்து விடுகிறேன்," என்றான்.

"அப்படியா? எப்படி?" என்றான் மன்னன்.

"அரசே! எனக்கு சில பொருள்கள் வேண்டும்!"

இளைஞன் வேண்டியதைக் கேட்டான். உடன் ஏற்பாடு செய்ய அமைச்சர்களுக்கு கட்டளையிட்டான் மன்னன்.

இரவு நேரம். வானில் நிலா-

இளைஞன் தான் பெற்ற பொருள்களோடு தனியே ஏரிக்கரைக்கு சென்றான். தான் கொண்டு வந்தப் பொருள் களை கரையின் ஓரம் வைத்துவிட்டு, வேகமாக வந்து மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் காதை பிளக்கும் அளவிற்கு சப்தம் வந்தது. அதைத் தொடர்ந்து இளைஞன் கீழே இறங்கினான். ஏரியை நோக்கி நடந்தான்.

மீண்டும் சில வேலைகளை அங்கே செய்துவிட்டு பின் வந்து மரத்தில் ஏறிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் மீண்டும் வெடி சப்தம்.

இளைஞன் மரத்தில் இருந்து இறங்கினான். ஏரியை நோக்கி நடந்தான்.

இப்படி நான்கு முறை நடந்து முடிவதற்கும் பொழுது விடிவதற்கும் சரியாக இருந்தது.

காலையில் ஊர் மக்கள் யாவரும் ஏரிக்கரையில் நிறைந்து விட்டனர். செய்தி அறிந்து, மன்னனும் குதிரையில் பறந்து வந்து விட்டான்.

ஏரிக்கரையில் கிடந்தவைகளை வியப்போடு பார்த்த மன்னன், இளைஞனைப் பார்த்து கட்டித் தழுவிக் கொண்டான்.

அரசே! இந்த ஊரின் கால்நடைகள் இங்கே நீர் குடிக்க வரும் போதெல்லாம் இந்த முதலைகளே அவைகளை பிடித்துத் தின்றன.

"மீன்களும், தவளைகளும் இருந்த இந்த குளத் திலே சென்ற மாதம் காட்டாற்று வெள்ளம் வந்ததே. அந்த வெள் ளத்தோடு வந்தவைதான் இந்த முதலைகள். ஒதுக்குப்புறமாக இருந்த இந்த ஏரியை யாரும் கண்டு கொள்ளவே இல்லை. பிறகு அரசு ஆணையாக அறிக்கை வெளியிட்டீர்கள்.

“அன்று தான் நான் இந்த ஊருக்கு வந்தேன். வந்த நான் ஊர் திரும்பும் போது ஏரியின் பக்கத்தில் உள்ள அதோ அந்த மரநிழலில் ஓய்வு எடுத்தேன். அப்போது நீர் குடிக்க நான்கு ஆடுகள் போயின. பின் திரும்பும் போது மூன்று ஆடுகள் மிரண்டபடியே ஓடி வந்ததைக் கண்டேன்.

“அப்போது ஏரியில் ஏதோ இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு, மறுநாளும் வந்து அந்த மரத் தடியில் அமர்ந்தேன். அந்த நேர்த்தில் ஒரு பசுவும், கன்றும் ஏரிக்குச் சென்றன. சிறிது நேரத்தில் மாடு மட்டுமே மிரண்டு ஓடி வருவதைப் பார்த்தேன். முதலை தான் ஏரியில் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன்.

“அதன் பிறகே தங்களைக் கண்டேன். முதலைக்கு நாய்க்கறி என்றால் மிகவும் பிடிக்கும் என்பதை அறி வேன். அதனால்தான் தங்களிடம் கொலை செய்யப் பட்ட நாயையும், அதன் வயிற்றிலே வைத்து தைப் பதற்கு வெடி மருந்தையும் கேட்டேன். அதன் படியே இரண்டு நாய்கள் வயிற்றில் வெடி மருந்தை வைத்துக் கட்டி கரையோரம் போட்டேன். அதன் வாசனையை அறிந்ததும்.

ஆவலாய் தின்ன வந்த முதலைகள் தான் இவைகள். இனி தங்களுக்கும், இந்த நல்லூர் மக்களுக் கும் எந்த பயமும் இல்லை. நான் வருகிறேன் அரசே!” என்று புறப்பட்ட இளைஞனிடம் அரசன் சொன்னான்.

"வாலிபனே! உன் செயல் போற்றத்தக்கது. புகழத் தக்கது; பூமாலை சூட்டத்தக்கது. நான் அறிவித்தபடி என் மகளையும், என் ராஜ்யத்தையும் உனக்கே அளிக்க வேண்டும். வா, இளைஞனே என்னோடு," என்று அணைத்து அழைத்தான்.

"அரசே! தாங்கள் இந்த நாட்டின் மீதும், மக்கள் மீதும் கொண்டிருக்கின்ற அன்பும், பாசமும் எனக்கும் உண்டு. தங்களின் அறிவும், ஆற்றலும், இதயமும் பெரிது. தாங்களே இந்த பொறுப்பை எனக்கு அளிக்க வேண்டாம். நீங்களே எங்களுக்குத் தலைவராக இருக்க வேண்டும் என்பது என் எண்ணம். நான் பயன் கருதி இந்தச் செயலில் ஈடுபடவில்லை. மற்றவர் நலன் கருதும் குடிமகனாகவே ஈடுபட்டேன். என்னை மன்னியுங்கள். நான் வருகிறேன்."

"இளைஞனே! நீ என்னிலும் உயர்ந்தவன். உன் எண்ணப் படியே இந்த நாட்டை நான் ஆட்சி செய் கிறேன். ஏரியில் முதலை இருப்பதை மட்டும் கண்டு பிடித்து கூறாமல் புத்தி யோடு முதலைகளை பிடித்து அழித்து விட்டாய். உன் அறிவு எங்கள் அரசவைக்கு தேவை. உனக்கு மந்திரி பதவி தந்து கவுரவிக்கிறேன்," என்றார் அரசர்.

அதன்படியே இளைஞனும், அரசன் பின் சென்றான். ஊர் மக்கள் மகிழ்ச்சியோடு மன்னனையும், இளைஞனையும் வாழ்த்தினர்.

❋ ❋ ❋

# 15. காட்டிலே நியூ இயர்!

*அந்தக் காட்டில் உள்ள பெரிய ஆலமரத்தின் கீழே உள்ள பொதுமன்றத்திற்கு வரும்படி காலையில் சிங்கராஜா அழைப்பு விட்டிருந்ததால், காட்டிலுள்ள விலங்குகளும், பறவைகளும் கூட்டமாக வந்து கூடி யிருந்தன.*

*"ஏன் சிங்கராஜா இந்த அவசரக் கூட்டத்தை கூட்டி யிருக்கிறார்?" என்று முயல் கேட்டது நாயிடம்.*

*"புது நூற்றாண்டு வருதுல்ல அதுக்கு ஏதாவது நமக்குத் தர கூப்பிட்டு இருக்காருன்னு நினைக்கிறேன்," என்றது நாய்.*

*"இருந்தாலும் இருக்கலாம்," என்றது பூனை.*

*இதற்குள், 'ராஜா வந்து விட்டார், ராஜா வந்து விட்டார்' என்ற குரல் ஒலிக்கவே கூட்டம் அமைதி யானது. வண்டியில் வந்து இறங்கிய ராஜா முன்னே புலிகள் செல்ல, பின்னே சிறுத்தைகள் வர, மேடையில் வந்து ஏறி தன் சிம்மாசனத்தில் அமர்ந்தார்.*

*"அன்பு கொண்டு அறவழியில் ஆட்சி செய்யும் எங்கள் ராஜா வாழ்க!" என்று கரடி வாழ்த்தியதும், அதைத் தொடர்ந்து கூட்டமும் வாழ்த்து ஒலிகளை எழுப்பின.*

சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்த சிங்கராஜா எழுந்து நின்று ஒருமுறை மேடை முன் நின்றிருந்த கூட்டத்தைப் பார்த்துவிட்டு பேசத் தொடங்கியது.

"என் உயிரினும் மேலான மக்களே! உங்கள் அனை வருக்கும், என் வாழ்த்தும், வணக்கமும். இந்த அவசரக் கூட்டம் ஏன் கூட்டப்பட்டது என்பது அமைச்சர்களுக்கே தெரியாது. அதை இப்போது சொல்கிறேன். என் அருமை மக்களே! நியூ இயர் பண்டிகை வர இன்னும் ஒரு நாளே இருக்கின்றது.

"இந்த விழாவை மனிதப் பசங்கள் வெடி வெடித்து கொண்டாடுவார்கள். நாம் அதுபோல் கொண்டாடியது இல்லை. ஆனால், இந்த மனிதப் பசங்களைப் பார்த்து நம் நாட்டிலும் பட்டாசு வெடிக்க சிலர் முயன்று இருக்கின்றனர் என்பதை நான் நேற்று தான் ஒற்றர்கள் மூலம் அறிந்தேன்.

"இதோ பாருங்கள், நம் மீது ஒரு சில மனிதர் களுக்கு அன்பு உண்டு. ஆனால், எல்லோருக்கும் இல்லை. எப்போது நம்மை அடித்துத் தின்னலாம். எப்படி நம் தோலை உரித்து வெளி நாட்டிலே விற்றுப் பணம் பண்ணலாம் என்பதில்தான் குறியாக இருக்கின்றனர்.

"அன்பு மக்களே! இந்த பட்டாசு என்ற பொருள் இருக்கிறதே இது மனித நாட்டில் சிவகாசி என்ற ஊரிலே செய்யப்படுகிறது. இதை செய்வது யார் தெரியுமா?

அவர்கள் வீட்டிலே எந்தக் கவலையும் கொள் ளாது விளையாடிக் கொண்டு இருக்க வேண்டிய சிறுவர்கள். எட்டு வயது ஒன்பது வயது ஆன பிஞ்சுக் குழந்தைகள் செய்கிறார்கள்.

“இவர்கள் படிப்பது இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். இவர்கள் படிப்பது இல்லை. படிக்க வேண்டிய வயதில் அங்குள்ள பொறுப்பற்ற பெற்றோர் தங்களின் சுய நலத்திற்காக இந்தப் பிஞ்சுக் குழந்தைகளை அங்குள்ள தொழில் முதலைகளிடம் அடகு வைத்து விடுவர். அதனால் அந்தக் குழந்தைகளை அடிமையாக அவர்கள் தொழிற் கூடங்களில் போட்டு வேலை வாங்குவர்.

“ஆனால், இந்த குழந்தைகள் உற்பத்தி செய்யும் பட்டா சுகளை அந்த நாட்டு மக்கள் அதிகம் விரும்பி வாங்குவதால், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகின்றனர். அந்த ஏழைக் குழந்தைகளோ, மேலும் ஏழைகளாக நோயாளிகளாக மாறிக் கொண்டு வருகின்றனர்.

“பாவம்! அந்தப் பிஞ்சுக் குழந்தைகளை நம்மால் முடிந்த அளவு காப்பாற்றுவோம் என்ற அடிப்படையில் தான் நான் கொஞ்சம் சிந்தித்தேன். குழந்தை உழைப்பாளர் எந்த நாட்டில் உருவாகிறார்களோ அந்த நாடு அழிவுப் பாதையை நோக்கிப் போகிறது என்பது பொருள்.

நம் நாட்டிற்கு முதலில் அங்கிருந்து வெடிகளை வாங்கி வருவார்கள். பின், நாமே உற்பத்தி செய்து

விற்றால் என்ன என்ற சிந்தனை உருவாகும். பிறகு நம் குழந்தைகளின் படிப்புக் கெடத் தொடங்கும். நோய் பெருகும்!

"அப்படித்தானே அந்த நாட்டிலும் இந்த வெடி புகுந்தது. முதலில், உலகத்தில் சீன நாட்டில் தான் இந்த வெடியைக் கண்டுபிடித்தனர் என்று வரலாறு கூறு கிறது. ஆகவே, எந்த ஆண்டும் இல்லாது இந்த ஆண்டு நம் நாட்டில் பட்டாசுக் கடை போட நினைத்தது யார்? மரியாதையாக அவர்கள் சபை நடுவே வந்து விட்டால் நல்லது. இல்லை என்றால் தண்டனை கடுமையாக இருக்கும்," என்று சிங்க ராஜா கட்டளையோடு பேசினார்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கரடியும், ஓநாயும் சபை நடுவே வந்து, "அரசே! எங்களை மன்னித்து விடுங்கள். ஏதோ மகிழ்ச்சிக்காகத்தான் பட்டாசு வெடிக்கிறார்கள் என்று இருந்தோம். இந்தப் பட்டா சிற்குள் பிஞ்சுக் குழந்தைகளின் கண்ணீரும், கனவு களும், வேர்வையும் அவர்களுடைய இருட்டான எதிர் காலமும் இருக்கிறது என்பதை உணரவில்லை. தாங்கள் சொல்லிய பிறகே உணர்ந்தோம். இனி கனவிலும் பட்டாசைப் பற்றி நினைக்கமாட்டோம். ஆகவே, பெரிய மனது வைத்து நீங்களும், இந்த நாட்டு மக்களும் எங்களை மன்னிக்க வேண்டும்," என்று கையெடுத்து வணங்கி நின்றன.

அதைக் கண்ட சிங்கராஜா மகிழ்ச்சியோடு. "அறியாமல் தவறு செய்த உங்களை இந்த மாமன்

றத்தின் சார்பிலும், என் சார்பிலும் மன்னிக்கிறேன். மிக்க மகிழ்ச்சி. என் அருமை குடிமக்களே!ஒருவழியாக நம் நாட்டில் நடக்க இருந்த தீயச் செயலை தடுத்து விட்டோம். நீங்கள் எல்லாம் வழக்கம் போல் நியூ இயர் அன்று நடத்துவீர்களே, அதுபோல் பேச்சுப் போட்டி, பாட்டுப்போட்டி என்று தூள் கிளப்புங்கள்.

"என்சார்பிலே அன்று காலை முதல் மாலை வரை மூன்று வேளையும் இனிப்போடு உணவு வழங்கப்படும்.

"ஆகவே எல்லோரும் தங்கள் வீட்டில் குளித்து முடித்து புத்தாடை அணிந்து காலையிலேயே இங்கே வந்துவிடுங்கள். அட்வான்ஸ்சாக என் நியூ இயர் வாழ்த் துக்கள். தற்போது அமைதியாக செல்லுங்கள்" என்றது சிங்கராஜா.

"பண்பாடு காக்கும் பாரி வள்ளல் வாழ்க. எவ்வு யிரையும் தன் உயிர் போல் எண்ணும் எங்கள் ராஜா வாழ்க...." என்று கோஷம் எழுப்பி வாழ்த்தியபடி எல்லாவிலங்குகளும், பறவைகளும் அவை அவை இல்லம் நோக்கிப் போயின.

சிங்கராஜாவும், மற்றவர்களும், எப்படி நியூ இயரை கொண்டாடினாங்க பார்த்தீர்களா குழந்தைகளே!

❋ ❋ ❋

# 16. முயல் குட்டியின் கிறிஸ்துமஸ் டிரஸ்!



முயல்குட்டி முல்லை எதிர் வீட்டை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தது. முயல் குட்டி முல்லை மூன்றாவது படிக்கிறாள். படிப்பிலும், விளையாட்டிலும், வகுப் பிலும் அவள்தான் முதலாவதாக வருவாள்.

முல்லையின் தாய், தந்தை நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இருக்கும் கொஞ்சம் நிலத்தில் பாடு பட்டு காரெட், பீன்ஸ், முட்டைகோஸ் என்று பயிரிட்டு, அதை விற்று வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

முல்லைக்கு ஒரு அண்ணன் உண்டு. எட்டாவது படிக் கிறான். உழைப்பையே தெய்வம் என்று எண்ணு பவன். அதனால், பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் பிறருக்காக சிறு சிறு வேலைகள் செய்வான். அவர்கள்

கொடுக்கும் சிறு தொகையை தாய், தந்தையிடம் கொடுப்பான். சில வேளை களில் அவைகளை சேர்த்து வைத்து தனக்கு வேண்டிய புத்தகம், பேனா போன்ற வைகளை வாங்கிக் கொள்வான்.

அவன் பெயர் முயல் குட்டி வேந்தன். தற்போது கூட பள்ளிவிட்டு வீட்டுக்கு வந்து கிறிஸ்துமஸ் சமயம் என்பதால் ஒரு துணிக்கடையில் வேலையில் சேர்ந்து இருக் கிறான், தன் தங்கை முயல்குட்டி முல்லை மீது அளவற்ற பாசம் கொண்டவன். அவளுக்காக எதையும் செய்வான். அவள் எது கேட்டாலும் வாங்கிக் கொடுப்பான்.

இரவு மணி எட்டாகியும் முயல்குட்டி முல்லை திண்ணையில் இருந்து எழாமல் எதிர்த்த வீட்டைப் பார்த்த படியே அமர்ந்து இருந்தாள். அந்த நேரம் வேலையை முடித்து விட்டு வீடு திரும்பினான் முயல் குட்டி வேந்தன்.

"என்ன சகோதரி, ஏன் தனிமையில் அமர்ந்து இருக் கிறாய்?" என்று கேட்டான் முயல்குட்டி வேந்தன்.

"அண்ணா! உனக்காகத்தான் காத்துக் கொண்டு இருந் தேன், என்றது முயல்குட்டி முல்லை.

"அப்படியா? சொல்லும்மா என்ன விஷயம்?" என்றான் அன்போடு முயல்குட்டி வேந்தன்.

"அண்ணா! அண்ணா! எதிர்வீட்டு மான் குட்டி மைதிலி தெரியுமா?"

*"என்னம்மா இது? எதிர் வீட்டு மான்குட்டி மைதிலியை எனக்குத் தெரியாதா என்ன? அவள் உன் வகுப்பில்தானே படிக்கிறாள். அவள் அக்கா கூட என் வகுப்பில் தானே படிக்கிறாள். மைதிலிக்கு இப்போது என்ன?" என்றான் முயல்குட்டி வேந்தன்.*

*"கிறிஸ்துமஸ்க்கு ஒரு வெல்வெட் கவுன் எடுத்து இருக்காங்க பாரு அவ்வளவு நல்லா இருக்கு. அது போல அம் மாவை எனக்கும் எடுக்கச் சொன்னேன். அவுங்க பணக் காரங்க. அது போல எடுக்கலாம். நம்மால எடுக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க அண்ணா, அதுபோல நம்மாள உண்மையிலேயே எடுக்க முடியாதா?" என்று பரிதாபமாக கேட்டாள் முல்லை.*

*"அதெல்லாம் முடியும்மா, நீ ஏன் கவலைப் படுறே? என்ன விலைன்னு கேட்டியா?" என்றான் வேந்தன் குட்டி.*

*"கேட்டேன் அண்ணா! முன்னூறு ரூபாயாம். அவ பெருமையா சொன்னா," என்றாள் முல்லை.*

*"ப்பூ இவ்வளவுதானே. நீ கவலைப்படாதே. நாளைக்கு நீ என்ன செய்யறே அந்த கவுனை வாங்கி வந்து என்கிட்டே காண்பி. மற்றதை நான் பாத்துக் கிறேன்," என்றான் முயல் குட்டி வேந்தன்.*

*"அண்ணானா அண்ணாதான்," என்று சொல்லி தாவிக் குதித்தாள் முல்லை.*

*படுக்கையில் படுத்த முயல் குட்டி வேந்தனுக்கு தூக்கம் வரவில்லை. கிறிஸ்துமஸ்சுக்கு தன் அன்பு தங்கை முயல் குட்டிக்கு முன்னூறு ரூபாய்க்கு எப்படி சட்டை எடுப்பது என்பதிலேயே இருந்தது.*

*இப்போது துணிக்கடையில் நாம் செய்யும் வேலைக்கு 200 ரூபாய் கொடுப்பார்கள். அதுவும் நமக்குத் துணி எடுக்க அப்படியே இருந்தாலும் இன்னும் நூறு ரூபாய்க்கு என்ன செய்வது?*

*தீவிரமாக சிந்தித்தபடியே முயல் குட்டி வேந்தன் தூங்கிப் போனான்.*

*மறுநாள் கிறிஸ்துமஸ்-*

*முயல் குட்டி முல்லை வீட்டிற்கும் தெருவிற் குமாக நடந்து கொண்டிருந்தாள். 'இன்னும் அண்ணன் வர வில்லையே? சட்டை வாங்கி வருமா? எப்போது வரும்?' இப்படி கேள்விகளை தனக்குத்தானே கேட்டுக் கொண்டு இருந்தாள்.*

*அவள் தாய் பலகாரங்கள் செய்வதில் ஈடுபட்டு இருந்தாள். தந்தையோ கடைக்கு போனவர் இன்னும் வராமல் இருந்தார்.*

*ஒருவழியாக அண்ணன் முயல்குட்டி வேந்தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.*

*"அண்ணா! எனக்கு சட்டை எடுத்து வந்தியா?" என்று கேட்டபடியே அவன் முன் போய் நின்றாள் முல்லை.*

தான் கொண்டு வந்திருந்த பையைத் திறந்து இதோ நீ கேட்ட டிரஸ் என்று எடுத்துக் கொடுத்தான்.

"வாவ்! அதே சட்டை. அதே கலர். அம்மா, நாம எடுக்க முடியாதுன்னு சொன்னீங்களே, இப்ப எப்படி? என் அண்ணன் அண்ணன்தான்." என்று வேந்தனை கட்டிப் பிடித்து கொண்டாள் முல்லை.

அவர்கள் பாசத்தைக் கண்டு தாய் முயல் தனம் ஆனந்தக் கண்ணீர் வடித்தபடியே, "வேந்தா, உனக்கு சட்டை எங்கேடா?" என்றாள்.

"தைக்க கொடுத்து இருக்கேன். இன்னும் பட்டன் கட்டலையாம். காலையிலே வாங்கிக்கலாம்." என்று சொல்லி விட்டு, "முல்லை சட்டையை அழுக்கு ஆக் காமல் கொண்டு போய் பெட்டியில் வைத்துவிட்டு வா.... சாப்பிடலாம்," என்றான் முயல் குட்டி வேந்தன்.

"சரி அண்ணா!" என்றபடியே அவள் ஓடிச் சென்று சட்டையை வைத்துவிட்டு வந்தாள். அதற்குள் தாய்முயல் தனம் இருவருக்கும் சோறு போட்டு வைத்தாள்.

இருவரும் அமர்ந்து மகிழ்ச்சியோடு சாப்பிடத் தொடங்கினர்.

அன்று கிறிஸ்துமஸ்-

ஊரெல்லாம் ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. முயல் குட்டி முல்லை, குளித்து முடித்து புதுசட்டை அணிந்து

கொண்டு சர்ச்கு செல்ல தயாரானாள். "அண்ணா எப்படி என் டிரஸ். நல்லா இருக்கேனா?" என்று கேட்டாள்.

"சூப்பர்ம்மா! இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லாவே இருக்கு!" என்று கூறி அவளுக்கு அன்புடன் முத்தம் கொடுத்தான்.

"அண்ணா அண்ணா! அண்ணா! நான் போய் எதிர் வீட்டு மான் குட்டி மைதிலியிடம் காட்டி வருகி றேன்," என்று சொல்லி வெளியே ஓடினாள் முயல் குட்டி முல்லை.

அவள் சென்ற பிறகு தாய்முயல் தனம், தன் மகனிடம், "என்னப்பா, நீ போய் உன் புதுச்சட்டையை கடையில் இருந்து எப்போது வாங்கி வந்து போட்டுக் கொள்ளப் போகிறாய்? இதோ பார் நானும், அப்பாவும் கூட புதுத் துணியைப் போட்டுக் கொண்டோமே," என்று கூறினாள்.

"அம்மா, என்னை மன்னிச்சுடுங்க. எனக்கு கடை யிலே கொடுத்த சம்பளப் பணம் 200 ரூபாயும், ஓவர் டைம் பார்த்த நூறு ரூபாயையும் சேர்த்துத்தான் முல்லைக்கு அவள் ஆசை பட்டது போல் முன்னூறு ரூபாய்க்கு டிரஸ் எடுத்து வந்தேன்," என்றான் முயல் குட்டி வேந்தன்.

"அப்ப கேட்டபோது பட்டன் தைக்கவில்லை. காலை யில் வாங்கி வருகிறேன் என்று சொன்னாயே!" என்று தாய் முயல் கேட்டது.

“அம்மா, தங்கைக்கு நேராக உண்மையைச் சொன்னால், அவள் வருத்தப்பட்டு அவளும் துணி அணியாமல் போய் விடுவாளே என்பதால்தான் அப்படிச் சொன்னேன். என்னை மன்னிச்சுடுங்க நீங்க ரெண்டு பேரும்,” என்றான் முயல் குட்டி வேந்தன்.

தாய் முயலும், தந்தை முயலும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

“மகனே! நீதான் எங்களை மன்னிக்க வேண்டும். உனக்கு இருக்கும் பாசம் கூட எங்களுக்கு இல்லாமல், நாங்கள் புதுத்துணியை அணிந்து கொண்டு இருக்கிறோமே, நீதான் எங்களை மன்னிக்க வேண்டும்,” என்றனர் இருவரும்.

“அம்மா, அப்பா சந்தோஷம் எல்லாம் புதுத் துணி யிலே இல்லை. பிறருக்கு நாம சந்தோஷப்படுகிற மாதிரி செய்யற செயல்லதான் இருக்கு. அடுத்த மாத சம்பளத்துல நான் புதுத்துணி வாங்கி கிட்டாப் போவுது. அம்மா, நான் பர்த்டேக்கு வாங்கின சட்டையை போட்டுக்குறேன்,” என்று சொல்லிய படியே முயல் குட்டி வேந்தன் ரூமுக்குள் சென்றான்.

தங்கள் அறிவான மகன் போவதையே மகிழ்ச்சியோடு தாய் முயல் தனமும், தந்தை முயல் தயாளனும் பார்த்துக் கொண்டு இருந்தன.

என்ன குட்டீஸ்! முயல் குட்டி வேந்தன் போல நீங்களும் உங்கள் சகோதர, சகோதரிகளிடம் பாசமாய் இருப்பீர்கள் தானே!

❋ ❋ ❋

# 17. சிட்டுக் குருவி... சிட்டுக் குருவி...



வகுப்பாசிரியர் புருஷோத்தமன் வந்தது கூட தெரியாமல் மதனும், ஹபீப்பும் வகுப்பறையின் ஜன்னலில் அமர்ந் திருந்த இரண்டு சிட்டுக்குருவி களைப் பார்த்து பேசிக் கொண்டு இருந்தனர். அதைக் கண்ட ஆசிரியர், “மதனும், ஹபீப்பும் என்ன பேசிக் கொள்கிறீர்கள் என்று கூறினால் நாங்களும் அப்பேச் சில் கலந்து கொள்ளலாமே!” என்றார்.

இருவரும் எழுந்து, "சார் சிட்டுக்குருவி ரெண்டு ஜன்னலில் உட்கார்ந்து இருக்கு. அதைப்பத்திதான் பேசிக் கொண்டு இருந்தோம்,' என்றான் மதன்.

"அப்படியா? மகிழ்ச்சி. இன்றைய ஐ க்யூவை நாம் சிட்டுக் குருவியில் இருந்தே தொடங்கி விடலாமா?"

"யெஸ் சார்!" என்றான் அஹமத்.

"குட், ஒரு நிமிடத்திற்கு நம் இதயம் எத்தனை முறை துடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?"

"தெரியும், 72 தடவை துடிக்கும் சார்..." என்றான் மதன்.

"பசுவிற்கு ஒரு நிமிடத்திற்கு இதயம் 70 தடவை யும், யானைக்கு 25 தடவையும், ஒட்டகச் சிவிங்கிக்கு 150 முறையும் துடிக்கும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள் என்பது எனக்குத் தெரியும். இப்போது நமது முதல் ஐ..க்யூ.... என்னவென்றால், சிட்டுக்குருவியின் இதயம் ஒரு நிமிடத்திற்கு எத்தனை தடவை துடிக்கும் என்பது தான். ரெடி ஸ்டூடண்ட்ஸ்...." என்றார் ஆசிரியர் புருஷோத்தமன்.

வகுப்பில் இருந்த எல்லோர் பார்வையும் ஜன் னலில் அமர்ந்து இருந்த சிட்டுக்குருவிகள் மீது பதிந்தன.

மதன் எழுந்து, "50 முறை துடிக்கும் சார்," என்றான்.

"இல்லை. நெக்ஸ்ட்."

"30 முறை...." என்றான் அஹமத்.

"தவறு. நெக்ஸ்ட்...."

"120 முறை..." என்றான் ஹபீப்.

"இல்லை. நெக்ஸ்ட்."

"1000 தடவை துடிக்கும் சார்," என்றான் சோனு.

"சோனு சொல்லியதே சரியான விடை சோனு விற்கு என் வாழ்த்துக்கள்."

"டேய் எப்படிடா கண்டுபிடிச்ச?" என்று கிசுகிசுத் தான் அஹமத்.

"யாருக்கு தெரியும். ஒரு யூகத்துல சொன்னேன். அதிர்ஷ்டம் நம் பக்கம் வீசிடிச்சி," என்றான் சோனு.

"அடுத்த ஐ.க்யூவிற்கு போகலாம். தமிழ் எழுத்தக் கள் 247 என்பதை நாம் அறிவோம். இந்த எழுத்துக் களில் ஒரே ஒரு எழுத்து மட்டும் திருக்குறளில் அதிகம் இடம்பெற்று உள்ளது. அந்த எழுத்து என்ன எழுத்து,"

"உயிரெழுத்தான 'அ' எழுத்துத்தான் அதிகம் இடம் பெற்ற எழுத்து," என்றான் அஹமத்.

"தவறு. நெக்ஸ்ட்."

"க எழுத்துத்தான்," என்றான் மதன்.

*"இல்லை தவறு. அடுத்து."*

*"ச எழுத்து," என்றாள் ஆயிஷா.*

*"தவறு... நெக்ஸ்ட்...."*

*கீர்த்தனா சிந்திக்கத் தொடங்கினாள். 'க' எழுத்தும், 'அ' எழுத்தும், 'ச' எழுத்தும் இல்லை என்றால்? ஒவ்வொரு திருக்குறளாக சொல்லிப் பார்த்தாள். அவளுக்கு 800 குறளுக்கு மேல் மனப்பாடம் என்பதால்.... மிக வேகமாக சொல்லிப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அதேநேரம்-*

*"இ எழுத்துத்தான்," என்றாள் ஆயிஷா.*

*"தவறு...நெக்ஸ்ட்."*

*கீர்த்தனா எழுந்தாள் "ன்" என்றாள்.*

*"சரியான விடை. எப்படி கீர்த்தனா கண்டுபிடித்தாய்?" என்று ஆசிரியர் புருஷோத்தமன் கேட்டார்.*

*"நான் திருக்குறளை தினமும் மனப்பாடம் செய்து வர்றேன் சார். எனக்கு இப்போது 800 குறள்கள் தெரியும். அந்தக் குறள்களை நீங்கள் கேட்டதுமே சொல்லிப் பார்த்தேன். அப்படி நான் சொல்லிப் பார்த்தபோது அதிகமாக வந்த எழுத்து, 'ன்' தான் அதனால்தான் சொன்னேன்." என்றாள் கீர்த்தனா.*

*"வெரிகுட்! நீங்களும் கீர்த்தனாவைப் போல*

இன்று முதல் நாள் ஒன்றுக்கு ஒரு குறளை மனப்பாடம் செய்வீங்கன்னு நினைக்கிறேன். சரி அடுத்த ஐ.க்யூவுக்கு போவோம். நம் நாட்டு விடுதலைக்காக பல தலைவர்கள் நிறைய தண்டனை பெற்று இருக்கிறார்கள். ரோஜாவின் ராஜா என்று அழைக்கப்பட்ட நேரு மாமா எத்தனை ஆண்டுகள் அந்நியர் ஆட்சியில் சிறையில் இருந்தார்?"

"பத்து ஆண்டுகள்..." என்றான் அப்துல்.

"தவறு... நெக்ஸ்ட்."

"எட்டு வருஷம்," என்றான் மதன்.

"இல்லை. தவறு..." என்றார் ஆசிரியர்.

"இரண்டு ஆண்டுகள்." -மாலதி.

"தவறு... நெக்ஸ்ட்...."

"பனிரெண்டு வருஷம்," என்றான் சோனு.

"இல்லை சோனு. அடராமா ராமா... அடுத்து யார் சொல்லப் போறீங்க?" என்றார் ஆசிரியர்.

ஆசிரியர் சொல்லிய வார்த்தைகளில் 'ராமா ராமா' என்பதை மட்டும் மனதில் பதிவு செய்து கொண்டு பல கோணங்களில் சிந்திக்கத் தொடங்கினாள் கீர்த்தனா.

"பதினைந்து ஆண்டுகள்," என்றாள் ரோஜா.

"தவறு...நெக்ஸ்ட்."

"16 ஆண்டுகள்," என்றாள் கீர்த்தனா.

"கீர்த்தனாவிற்கு என் பாராட்டுக்கள். அடுத்த ஐ.க்யூ விற்கு போகலாம். நாலுகால் பிராணி ஒன்றிற்கு நடக்கத் தெரியாது. தாவித்தான் போகும். அந்தப் பிராணி எந்தப் பிராணி?" என்று கேட்டார் ஆசிரியர்.

"கங்காரு..." என்றான் அஹமத்.

"இல்லை...நெக்ஸ்ட்."

"முயலுக்குத்தான் நடக்கத் தெரியாது குதித்து குதித்து ஓடும்." என்றாள் ரோஜா.

"வெரிகுட் ரோஜா, அடுத்து புதிர் நேரம்... ஐந்து நிமிடங்களே உள்ளன. இதுதான் புதிர். திருநெல் வேலிக்குள்ளே ஆடு, மாடு நுழையாது, ஏன்?"

வகுப்பே பரபரப்போடு யோசிக்கத் தொடங்கியது.

'திருநெல்வேலிக்குள்ளே ஆடு, மாடு நுழை யாது–' திரும்பத் திரும்ப கீர்த்தனா அதையே சொல்லிப் பார்த்தாள்.

பளிச்சென்று எழுந்தாள். "அதுலதான் 'வேலி' இருக்கே!" என்றாள்.

"கரெக்ட் கீர்த்தனா..." என்று பாராட்டினார் ஆசிரியர் புருஷோத்தமன்.

"இதை நான் அப்பவே கண்டுபிடிச்சிட்டேன். நான் சொல்றதுக்குள்ள கீர்த்தனா முந்திக்கிட்டா," என்றான் அஹமத்.

"என்ன திருநெல்வேலிக்கே அல்வாவா," என்றான் சோனு.

"ஹி...ஹி...வேலூருக்கே ஜெயிலு," என்றான் அஹமத்.

நண்பர்கள் சிரித்து மகிழ்ந்தனர். அதேநேரம் அடுத்த வகுப்பிற்கான மணி அடித்தது. மாணவர்கள் கூக்குரலிட வகுப்பை விட்டுச் சென்றார் புருஷோத்தமன்.



* * ******

# 18. பூனைத்தம்பி!



"ஏய் அமுதா, அங்கே என்னடி செய்ற?" அதட்டலோடு தாய் கேட்டாள்.

"என் தம்பி குமாரை குளிப்பாட்டி கிட்டு இருக்கேன்...."

"அந்த சனியனை ஒழிச்சாதான் நீ உருப்படுவ. இங்கே தண்ணி கிடைக்கிறதே பெரும்பாடா இருக்கு. இதுல நீ பூனையை வேற ஒருநாள் விட்டு ஒரு நாள்

குளிப்பாட்டி என் உயிரை எடுக்குறே... உங்க அப்பா இன்னைக்கு வரட்டும் அந்த சனியனை பத்துத் தெரு தள்ளி கொண்டு போய் விட்டுட்டு மறுவேலை பார்க்கச் சொல்றேன்" என்றாள் கோபத்தோடு.

"அப்பா ஒண்ணும் என் தம்பி குமாரை உண்ண மாதிரி திட்டமாட்டாங்க. என் தம்பி குளிக்க அப்பா தானே சோப்பே வாங்கிக் கொடுக்குறாங்க.. என்ற படியே பூனையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு துவட்டிய படியே பதில் சொன்னாள்.

"அவரு கொடுக்குற தைரியம் தானடி இந்த அளவுக்கு நீ பேசுற? பூனை பிடிக்கிறவனை எங்காவது பாத்துக் கூட்டி வந்து இன்னைக்கு ஒழிச்சுக் கட்டி டுறேன். ஏய் கழுதை, சட்டை எல்லாம் ஒரே தண்ணி, கழட்டிப் போட்டு குளிச்சுட்டு பள்ளிக் கூடம் கிளம்பு" என்று அதட்டினாள்.

அமுதா, பூனையோடு பாத்ரூம்குள்ளே புகுந்து கொண் டாள். அமுதா ஆறாவது படிக்கிறாள். சுந்தரம் - சுந்தரிக்கு ஒரே மகள். அப்பா செல்லம் அதிகம்.

ஒரு நாள் வகுப்பு ஆசிரியை 'நாம் எல்லாரும் பிராணி களிடம் அன்பு காட்ட வேண்டும்' என்று சொன்னதில் இருந்து அமுதா நாய், பூனைகளிடம் அன்பு காட்டத் தொடங்கினாள்.

அந்த நேரத்தில் தான் எதிர் வீட்டுப் பூனை ஒன்று மூன்று குட்டிகளைப் போட்டிருந்தது.

அதில் ஒன்றை தன் அப்பாவிடம் கூறி ஒரு மாதக் குட்டியாக இருக்கும்போதே வாங்கி வந்து விட்டாள். இப்போது அந்தப் பூனை இவள் வீட்டிற்கு வந்த பதினெட்டு மாதங்களாகி விட்டன. கொழு கொழு வென்று ஒன்னறை அடிக்கு மேல், ஒரு சின்னநாய்க் குட்டியைப் போல் வளர்ந்து விட்டது. பக்கத்து வீட்டு நாய்க்குட்டி கூட இந்தப் பூனையைக் கண்டு ஒதுங்கிப் போய்விடும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அமுதாவின் படிப்பு நேரத்தில் கூட அந்தப் பூனை அவள் பக்கத்திலேயே இருக்கும். அவளும் அதை விட்டுப் பிரியமாட்டாள். ஆனால் அமுதாவின் அம் மாவைக் கண்டால் ஒதுங்கிக் கொள்ளும். அமுதா பள்ளி சென்று விட்டால், படுக்கையறையில் போய் 'கம்' மென்று படுத்துக் கொள்ளும். அவள் வந்து விட்டாலோ ஒரே கொண்டாட்டம் தான்.

அமுதாவைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு அடுக் கலை வேலைகளை எல்லாம் முடித்து கொஞ்ச நேரம் படுத்து ஓய்வு எடுக்கலாமே என்று அறையில் சென்றுபடுத்தாள்.

படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் யாரோ கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் வருவதை உணர்ந்து எழுந்து எட்டிப் பார்த்தாள்.

அதற்குள் அறைக்குள் வந்தத் திருடன் அவள் வாயில் துணியை வைத்து அடைத்து கைகளை அங்கே கிடந்த துண்டால் கட்டிப் போட்டுவிட்டு பீரோவைத் திறந்து பணத்தை எடுக்கும் போது, அதுவரை அங்கே

நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பூனை ஒரே தாவாகத் தாவி திருடன் முதுகிலும், முகத்திலும் ஆக்ரோஷமாகப் பிராண்டி தள்ளியது.

திடீர் தாக்குதலால் ரத்தம் வழிய திகைத்துப் போனான் திருடன். அவன் எவ்வளவோ முயன்ற போதும் விடாது அவன் மேலே பாய்ந்து கை, கால், முகம் என்ற கீறித்தள்ளியது.

அவன் எடுத்த பணம் எல்லாம் சிதறிக் கீழே விழ தப்பித்தால் போதுமென்று வெளியே ஓடத் தொடங்கும் போது கை கட்டை திமிறி அவிழ்த்து வாயில் இருந்த துணியை எடுத்து “திருடன் திருடன்” என்று சப்தம் போட்ட படியே வெளியே ஓடிவர, திருடன் தெருவில் இருந்தவர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

பின் செய்தியறிந்து திருடனை போலீஸ் ஸ்டே சனுக்குக் கொண்டு சென்றார்கள்.

வெளியில் சென்ற அமுதாவின் அம்மா அவசர அவசர மாக வீட்டிற்குள் ஓடி வந்தாள். அறையினுள் நுழைந்தாள். பூனையைத் தேடினாள். அது ஒரு மூலையில் எதுவும் நடக்காதது போல் உட்கார்ந்து இருந்தது.

அப்படியே ஓடிச் சென்று அதை தூக்கினாள். என் செல்லமே. நீ மட்டும் இங்கே இல்லை என்றால் இன்னைக்கு நகை, பணம் எல்லாம் திருடு போயி

ருக்கும் என்று சொல்லி செல்லமாகத் தடவிக் கொடுத்தாள்.

மாலையில் பள்ளியில் இருந்து அமுதாவை அழைத்துக் கொண்டு அவள் அப்பா வீட்டிற்கு வந்தார்.

அப்போது வீட்டினுள் அவர்கள் கண்ட காட்சி இரு வருக்கும் வியப்பாக இருந்தது. இத்தனை நாள் வெறுத்தப் பூனையை - காலையில் பூனை பிடிப்பவனிடம் பிடித் துக் கொடுக்கிறேன் என்ற அம்மா பூனையை மடியில் வைத்து விளையாடிக் கொண்டிருந்ததுதான்.

“அம்மா, என் குமாரை பூனை பிடிக்கிறவனு கிட்ட கொடுக்க பிடிச்சி வச்சியிருக்கியா? கொண்டா என் செல்லத்தை?” என்று புத்தகப் பையை வைத்து விட்டு வாங்கப் போனாள்.

“நான் தரமாட்டேன்டி. இது இனி உன் செல்லம் மட்டும் இல்லை. இது நம்ம வீட்டு செல்லம் - செல்வம்” என்று சொல்லி மதியம் திருடன் வந்ததையும் அப்போது நடந்தவை களையும் சொன்னாள்.

அதைக்கேட்ட அமுதா! அப்படியா? என்று மகிழ்ச்சிப் பொங்க பூனையை வாங்கி முத்தமிட்டாள்.

அமுதாவையும், பூனையையும், தன் மனை வியையும் அமைதியாகப் பார்த்து அங்கே புன்னகை

*பூத்தபடி நின் றிருந்தார், அமுதாவின் அப்பா.*

*மனிதர்களிடம் மட்டும்தான் நன்றி உணர்வு உண்டு என்பதில்லை. நாய், கரடி, குரங்கு, யானை, மாடு, பூனை போன்ற பிராணிகளிடமும் அதிகமாகவே இந்த நன்றி உணர்வு உண்டு என்பதை இந்தக் கதை உங்களுக்கு உணர்த்த வில்லையா?*

*குட்டீஸ்! இனி மேலாவது பிராணிகளைக் கண்டால் கல்லை எடுத்து அடிக்காதீர்கள்... முடிந்தால் அன்போடு பழகுங்கள்... செய்வீர்களா?...*

❋ ❋ ❋



# 19. மனம் திருந்திய ஓநாய்!

மூங்கில் காடு என்று ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் இருந்த விலங்குகளும், பறவைகளும் ஒற்றுமையாக வாழ்ந்தன.

பக்கத்தில் இருந்த காட்டு விலங்குகளும், பறவைகளும் கூட அவைகளைப் பார்த்து பொறாமைப் பட்டன. அப்படி ஒற்றுமையாக இருந்த மூங்கில் காட்டில், தற்போது சண்டை வந்து விட்டது.

அதற்குக் காரணம் ஓநாய்தான்.

ஓநாய்தான் கரும்புத் தோட்டக்காரரிடம் போய், 'யானையும், நரியும், பன்றியும் உங்கள் தோட்டத்தில் புகுந்து இரவிலே நாசம் செய்கிறது,' என்று சொன்னது.

அன்று முதல் தோட்டக்காரர் காவல் இருந்து யானையை ஈட்டியால் குத்தி புண் ஏற்படுத்தினான். ஒரு நரியும், இரண்டு பன்றிகளையும் சாகவே அடித்து விட்டான்.

இப்படி ஓநாய் ஒன்றாகவே வாழ்ந்து கொண்டு, ஒவ்வொருவரையும் 'போட்டு'க் கொடுத்து விட்ட உண்மை ஒருநாள் தெரிந்து போனது.

அதனால், இப்போது எந்த மிருகங்களும் அதோடு பேசுவது இல்லை, சேருவதும் இல்லை.

எல்லாம் அதை ஒதுக்கி விட்டன.

இந்த நிலையில்தான் ஓநாய் தன் இருப்பிடத்தில் இரண்டு குட்டிகளைப் போட்டிருந்தது.

சென்ற முறை குட்டிப்போட்டு இருந்தபோது நரி, நாய், பன்றி, மான் எல்லாம் கூட போய் அவைகளைப் பார்த்து வாழ்த்தின.

ஓநாய் வெளியில் இறைதேட போகும்போது, குட்டிகளை குரங்கு, கரடி எல்லாம் பார்த்துக் கொண்டன. ஆனால், இந்த முறை எதுவுமே அவைகள் பக்கம் போகவில்லை.

குட்டிப் போட்டத்தைக் கூட காக்கைதான் அந்தப் பக்கம் போன போது பார்த்து வந்து எல்லோரி டமும் கூறியது.

அன்று பவுர்ணமி எல்லா விலங்குகளும், பறவை களும் பளிங்குப் பாறையில் ஒன்று கூடி ஆடி பாடி மகிழ்ந்தன.

ஒவ்வொரு பவுர்ணமி நாளிலும் இப்படி நடப்பது வழக்கம். அன்றும் இதுபோல்தான் ஆடிப்பாடி மகிழ்ந் தன. அப்போது, 'என் குழந்தைகளை யாராவது காப்பாற்றுங் களே.... காப்பாற்றுங்களே...' என்று சத்தம் கேட்பதை முயல் தன் நீண்ட காதுகளால் கேட்டது.

"அண்ணே! யாருக்கோ ஆபத்து. காப்பாத்தச் சொல்லி சத்தம் போடுறாங்க!" என்று முயல், தன்

பக்கத்தில் நின்றிருந்த கரடியிடம் சொல்லியதும், அது எல்லாரிடமும் கூற, ஆட்டம், பாட்டம் நின்றது.

ஆளுக்கொரு திசையாக எட்டிப் பார்த்தன. பளிங்குப் பாறைக்கும் கீழே மூங்கில் காட்டில்தான் தீ பரவி இருந்தது.

"ஓநாய் இருந்த புதர் பக்கம் தான் தீயிருக்கிறது." என்றது யானை.

"அப்படியா! வெயில் காலம் இல்லையா? மூங்கில் ஒன்றோடு ஒன்று உரசியிருக்கும். தீ பற்றியிருக்கும்." என்றது சிங்கம்.

"ஆமாம், ஆமாம்." என்றது மான். தொடர்ந்து 'காப்பாற்றுங்கள்... என் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்...." என் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்...' என்ற அபயக் குரல் கேட்டபடியே இருந்தது.

"நான் போய் நிலைமையை அறிந்து வருகிறேன்," என்ற ஆந்தை, அங்கு பறந்து போனது.

சிறிது நேரத்தில் திரும்பியும் வந்தது.

"அண்ணே! ஓநாயின் இருப்பிடத்தில்தான் தீ. தன் இரண்டு குழந்தைகளுக்கும் நடுவில் தீயிருப்பதால் ஓநாய் போய் காப்பாற்ற முடியாமல் தவிக்கிறது. அது தான், காப்பாற்றச் சொல்லி கதறி அழுகிறது," என்று விளக்கமாக கூறியது.

“நாம் யாரும் போய் காப்பாற்ற வேண்டாம். அந்த கோள்மூட்டி ஒழிந்து போகட்டும்,” என்றது நரி.

“ஆமாம். நண்பர் சொல்வது சரிதான்,” என்றது கரடி.

“நண்பர்களே! நமக்கு வேண்டாதவன் ஓநாய் பயல்தான். அந்தப் பச்சிளம் குழந்தைகள் அல்ல. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்,” என்றது சிங்கம்.

“ஆமாம், அண்ணன் சொல்வதும் சரியாகத்தான் படுகிறது. நமக்கு எதிரி குழந்தைகள் அல்ல,” என்றது யானை.

“ஆந்தையாரே! தீயின் போக்கு எப்படி இருக்கிறது?” என்று புலி கேட்டது.

ஒருபுறம் மட்டும் தீயில்லை. காரணம், அங்கு சந்தன ஏரி இருப்பதால் மற்ற மூன்று பக்கமும் கடுமையான தீ இருக் கிறது.'' என்று ஆந்தை கூறியது.

“அப்படியா?” என்று கேட்டு விட்டு யானை சிந்தித்து.

பின் அதுவே பேசியது. “நண்பர்களே! நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். நான் ஏரியில் இறங்கிப் போய் எப்படியாவது அக்குழந்தைகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்,” என்றது.

“நீர் சொல்வதும் சரிதான்,” என்றது சிங்கம்.

“நான் ஒன்று சொல்லலாமா?” என்றது குரங்கு.

“சொல் தம்பி! என்றது யானை.

“இதோ பாருங்கள். நானும் உங்களோடு கூட வருகிறேன். ஏனென்றால், ஓநாயின் வீடோ சிறியதாக இருக்கும். நீங்கள் எப்படி உள்ளே செல்வீர்கள்? நான் சென்றுவர சுலபமாக இருக்கும்,” என்றது குரங்கு.

“ஆமாம், ஆமாம்! நண்பர் கூறுவதும் சரிதான்,” என்று யாவும் கூறின.

அதன்படியே, யானையின் மீது குரங்கு தாவி ஏறிக் கொண்டது.

ஓநாயின் அபயக்குரல் மேலும் மேலும் உயர்ந்து ஒலித்தது.

“அண்ணே! வேகமாகப் போங்க. குழந்தைகளுக்கு ஏதாவது நடந்து விடப் போகிறது,” என்று குரங்கு சொல்லவும், யானை வேகமாகச் சென்று சந்தன ஏரியில் இறங்கி, மூங்கில் காட்டில் ஏறியது.

நல்லவேளை அங்கு இன்னும் தீ பரவவில்லை.

யானையையும், குரங்கையும் கண்ட ஓநாயின் குழந் தைகள் வியப்போடு பார்த்தன.

இரண்டு குழந்தைகளையும், தன் இரு பக்கமும் குரங்கு எடுத்து அணைத்துக் கொண்டது. யானையோ, அப்படியே குரங்கை தன் துதிக்கையால் தூக்கிக்

கொண்டு விடுவிடு என்று வேகமாக திரும்பி நடக்கத் தொடங்கியது.

அவைகள் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததுமே, அங்கு தீ பரவத் தொடங்கியது.

யானையும், குரங்கும் வந்து தன் குழந்தைகளைக் காப்பாற்றியது கூட அறிய முடியாத நிலையில் ஓநாய் அழுது புலம்பிக் கொண்டிருந்தது.

யானையும், குரங்கும் ஓநாயின் குழந்தைகளுடன் வருவதைக் கண்ட எல்லா மிருகங்களும், பறவைகளும் மகிழ்ச்சியோடு மீண்டும் ஆடிப்பாடின.

பளிங்குப் பாறையின் மத்தியில், குரங்கு தூக்கி வந்த ஓநாயின் குழந்தைகளை இறக்கிவிட்டது.

எல்லாம் கூடி நின்று அவற்றைப் பார்த்தன.

"குழந்தைகள் பசியோடு இருக்கிறார்கள் என்று நினைக் கிறேன். தம்பி, நரியாரே நீ ஏதாவது ஏற்பாடு செய்யேன்," என்றது புலி.

உடனே கூட்டத்தில் இருந்த பெண் நரி ஒன்று அவை களுக்கு பால் கொடுத்தது.

பொழுது புலர்ந்தது!

அதே நேரம் மூங்கில் காடும் எரிந்து முடிந்தது.

இரவு முழுவதும் அழுது புலம்பிய ஓநாய் எரிந்து முடிந்த காட்டை நோக்கி ஓடியது.

அங்கே - தன் வீடு எரிந்த நிலையில் இருந்ததைக் கண்டு என் தகாத புத்தியால் என் இரண்டு குழந்தைகளையும் இழந்தேனே... இந்நேரம் நான் ஒற்றுமையாக இருந்திருந்தால் என் நண்பர்கள் எனக்கு உதவிக்கு வந்திருப்பார்களே.... என்னோட காட்டி கொடுக்கிற புத்தியால் என் குழந்தைகளை இழந்துவிட்டேன்,'' என்று கூறி தன் வீட்டின் முன் அழுது புலம்பிக் கொண்டு இருந்தது.

ஓநாயைப் பின் தொடர்ந்து வந்த காக்கை, “ஏய் அண்ணா!” என்று அழைத்தது.

திடுக்கிட்டுத் திரும்பிய ஓநாய் அங்கே காக்கை இருப் பதைப் பார்த்து, “நீதான் என்னை அழைத்தாயா?” என்று கேட்டது.

இரவு நடந்தது எதுவும் தெரியாதது போல் காக்கை கேட்டது. “ஆமாம். நீ ஏன் சோகமாக இருக்கிறாய்?” என்று.

“நண்பரே! என் குழந்தைகளுக்கு உணவு தேட இரவு போயிருந்தேன். அப்போது காட்டில் தீப் பிடித்துக் கொண் டது. அந்த நிலையில் நான் திரும்பி வந்தேன். தீக்கு அந்த புரம் என் குழந்தைகள். நானோ இந்தப்புரம் மாட்டிக் கொண் டேன். என் கண் முன்னே குழந்தைகள் இருந்தும் என்னால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. யாராவது வந்து காப்பாற்ற மாட்டார்களா? என்று அழுது புலம்பி இரவு முழுதும்

கத்தினேன். மரங்களில் மோதி சாகவும் துணிந்தேன். எல்லாம் முடிந்துவிட்டது."

"இப்போது வருத்தப்பட்டு என்ன செய்வது நண்பா! முன்பே இந்த அறிவு இருந்திருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால், ஒற்றுமையாக இருந்த நாமெல்லாம் பிரிந்து இருக்க மாட்டோம். நீ உன் குழந்தைகளையும் இழந்திருக்க மாட்டாய்!" என்றது காகம்.

"உண்மைதான் நண்பரே உண்மைதான். என் சின்ன புத்தியால் இன்று வாழ்க்கை சிதறி நிற்கிறேன். அதுவும் தனிமரமாக. இனி நான் வாழ்வதில் பயனில்லை. நான் இறக்கத்தான் வேண்டும்.

ஊருடனும் சண்டை; என்னுயிரினும் மேலான குழந்தைகள் போயின. நான் எதற்காக - யாருக்காக வாழ வேண்டும்?

"நண்பரே! என்னை நீ மட்டுமாவது மன்னித்து விடு. நான் திருந்திவிட்டேன் என்பதை மட்டுமாவது நண்பர்களிடம் போய் சொல். நான் வருகிறேன்," என்று சொல்லி விட்டு புறப்பட்டது ஓநாய்.

"எங்கு நண்பா, போகிறாய்?"

"கழுகு மலையின் உச்சிக்குச் சென்று அங்கு இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். அதுதான் எனக்கு சரியான தண்டனை.

"இல்லை, நீ வாழ வேண்டும். உன் இரு குழந்தைகளுக்காக வாழத்தான் வேண்டும்," என்றது காக்கை.

"நீ என்ன சொல்கிறாய் நண்பா?" வியப்போடு ஓநாய் கேட்டது.

"ஆமாம்!" என்று கூறி முன் நடந்த அனைத்தையும் காக்கை கூறியது.

"என் குழந்தைகள் உயிரோடு இருக்கிறார்களா? இந்தப் பாவியை மன்னித்து என் செல்வங்களை நீங்கள் எல்லாம் காப்பாற்றி விட்டீர்களா?" என்று கேட்டு ஓநாய் ஆனந்தக் கண்ணீர் விட்டது.

"சரி நண்பரே! வா உன் குழந்தைகளைப் பார்க்கப் போகலாம்."

"தவறு செய்த நான் அவர்கள் முன்னே எப்படி நண்பரே வருவது?"

"நீ வர வேண்டாம். அதோ பார். உன் குழந்தைகளோடு நண்பர்கள் எல்லாம் உன்னைத் தேடி வருவதை..." என்று காக்கைக் கூறிய திசையை ஓநாய் நோக்கியது.

அங்கே பகையை மறந்து நட்போடு நண்பர்கள் வந்து கொண்டு இருந்தனர்.

ஓநாய் தன் தவற்றை எண்ணி தலைகுனிந்து நின்றிருந்தது!

***



# 20. கிளி மிஸ்!



பள்ளி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைய பறவைகளும், விலங்குகளும், பள்ளியின் முதல் மணி அடித்ததும் பரபரப்போடு வகுப்பிற்குள் நுழைந்தன.

அதைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த டீச்சர் பச்சைக் கிளியைப் பார்த்ததும் எல்லாம் எழுந்து நின்று 'குட்மார்னிங் மிஸ்' என்றன. பதிலுக்கு டீச்சர் கிளியும், 'வெரி குட்மார்னிங் குட்டீஸ்களா!' என்று சொல்லி விட்டு, நாற்காலியில் அமர்ந்தது.

"குட்டீஸ்களா! நான் நேற்று சொன்னதுபோல், உங்கள் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள இன்று யார் யார், ரேடியோ நியூஸ், டிவி நியூஸ் கேட்டீங்க?" என்று டீச்சர் கிளி கேட்டது.

"நான் கேட்டேன் மிஸ்," என்றது மைனா.

"நான் கேட்டேன் மிஸ், என்றது சிட்டுக்குருவி.

"சரி எல்லோருமே சமத்தா சொன்னபடி கேட்டு இருக்கீங்க. மகிழ்ச்சி! இன்று நீங்கள் அறிந்து கொண்ட முக்கிய செய்தி என்ன?" டீச்சர் கிளி கேட்டது.

"நான் சொல்றேன் டீச்சர்," என்று எழுந்து நின்று முயல் சொன்னது. "இந்த கல்வி ஆண்டு முதல் யார் தாய் மொழிப் பாடத்தில் மாநிலத்திலேயே முதல் மார்க் வாங்குகிறார்களோ அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் நமது சிங்கராஜாவின் நிதியில் இருந்து

வழங்கப்படும் என்று சிங்கராஜா அறிவித்துள்ளார்,'' என்றது.

அடுத்து மைனா, “நமது நாட்டு எல்லையில் புகுந்து தொல்லை கொடுக்க வந்த எதிரிப் படைகளை நமது நாட்டு வீரர்கள் எதிர் நின்று போராடியதில் எதிர் நாட்டு வீரர்கள் எழுபது பேர் மாண்டார்கள். நமது நாட்டு வீரர் இருவர் வீர மரணம் அடைந்தனர்,'' என்றது.

“குட்டீஸ்களா! நமது நாட்டைக் காக்க தங்கள் உயிரையே பணயம் வைத்த அந்த மாவீரர்களுக்கு, நாம் அனைவரும் ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்திவிட்டு, நமது இன்றைய பாடத்தை தொடங்கலாம்,'' என்று டீச்சர் கிளி சொன்னதும், அனைத்தும் அப்படியே எழுந்து நின்று அஞ்சலி செலுத்தின.

“இன்று குயில் பாட்டி எழுதிய அருள்மொழி களை யார் சொல்லப் போகிறீர்கள்?'' என்று கிளி டீச்சர் கேட்டது.

“நான் சொல்கிறேன் மிஸ்...'' என்று நரி எழுந்து நின்றது.

“வெரிகுட் சொல்.''

“அன்பாய் இரு. ஆணவம் தவிர். இயன்ற அளவு பிறருக்கு உதவி செய். உழைப்பைப் போற்று. பிறரை ஏமாற் றாதே. பெற்றோரை மதி. பெரியோரை வணங்கு. சிறியோரை வாழ்த்து. நாடு முன்னேற பாடு படு,'' என்று நரிக்குட்டி கூறி முடித்தது

“ஆமாம், நீங்கள் அனைவரும் என்றுமே குயில் பாட்டி சொன்ன அருள்மொழிகளை மறக்கவே கூடாது.

அடுத்து உங்களில் யாராவது நேற்று சொல்லித் தந்த பாடலை இசையோடு பாடுங்கள்,'' என்றது கிளிமிஸ்.

“நான் பாடுறேன் மிஸ்,'' என்று குயில் எழுந்து நின்றது.

“வெரிகுட் பாடு.''

“சின்னப் பொண்ணு ரோசி

சிரிக்க சிரிக்க பேசி

தின்னுறாளே ஐஸூ

தெருவில் சுத்துறாளே லூசு....''

என்று குயில் அழகாக பாடியதும், வகுப்பில் கரவொலி எழுந்தது.

“உண்மையிலேயே என்னை விட அழகாகவே பாடி விட்டாள் குயில்,'' என்று மிஸ் கிளி பாராட்டியது.

“மிஸ், பாடம் சொல்லியாச்சு, பாட்டு பாடியாச்சு, ஒருகதை சொல்லுங்க மிஸ்,'' என்றது கரடி குட்டி.

“ஆமாம் டீச்சர். ஆமாம் டீச்சர் கதை சொல் லுங்க,'' என்று குரங்குக் குட்டி சொன்னதும் அதைத் தொடர்ந்து முயல் குட்டி, கரடி குட்டி, மயில் எல்லாம் கதைச் சொல்ல சொல்லின.

“என்ன கதை சொல்லலாம்?'' என்று மிஸ் கிளி கேட்டது.

“நீங்க போன வாரம் சொன்னிங்களே, மனிதப் பசங் களைப் பத்தி, அதுமாதிரி சொல்லுங்க,'' என்றது கங்காரு.

"சரி மனிதப் பசங்க கதையே சொல்றேன்," என்றது கிளி மிஸ்!

"உத்தமநாதபுரம் என்ற ஒரு சிற்றூர் இருந்தது. இந்த ஊரில் தான் தமிழ் தாத்தா என்று மனிதர்களால் பெருமை யோடு அழைக்கப்பட்டு வரும் உ .வே. சாமி நாத ஐயர் பிறந்தார்.

வயல்களும், தோப்புகளும் சூழ்ந்த இந்த அழகிய ஊரில் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் முகில் வண்ணன் என்பது. இவர் பிறருக்கு உதவி செய்வதிலும், பிறரிடம் அன்பு செய்வதிலும், ஏற்றத்தாழ்வு பார்க் காமல் பழகுவதிலும் அவருக்கு நிகர் அவரேதான். அந்த ஊரில் மட்டுமல்ல, பக்கத்தில் உள்ள கிராமங் களுக்கும், நகரில் உள்ள தொழில் அதிபர்களுக்கும் அவரைப் பிடிக்கும்.

அந்தக் கிராமத்திற்கு குடிநீர் குழாய் போட்டதும், அஞ்சலகம் வந்ததும், பூங்கா அமைத்ததும். அப்படி அந்த கிராமத்தின் உயர்விற்காக பாடுபட்டதில் முதன் மையானவர் யார் என்றால் எல்லோருமே சொல் வார்கள். ஆசிரியர் முகில் வண்ணன்தான் என்று.

இப்படி ஊர் எல்லாம் நல்ல பெயர் பெற்றிருந்த இவருக்கு ஒரே மகன் அவன் பெயர் இளம்பாரி என்பது. பத்தாவதில் இரண்டு முறை தோல்வியைக் கண்டு தற்போது வீட்டில் தண்டச் சோறு சாப்பிட்டுக் கொண்டு நண்பர் களுடன் சினிமா, கேலி என்று சுற்றிக் கொண்டு இருந்தான்.

தாயும், தந்தையும் எவ்வளவோ சொல்லியும் கேட்க வில்லை. சரி தொலையட்டும் என்று விட்டு

விட்டார்கள். தண்டச் சோறு தின்றுவிட்டு ஊர் சுற்றி வந்த இவனால் இப்போது தாய், தந்தைக்கு புதிய பிரச்னை ஒன்று வந்து விட்டது.

அதாவது, அந்த ஊர் சுத்திப்ய செலவுக்கு பணத்துக்காக அவன் தந்தையின் பெயரைப் பயன்படுத்தி திருட்டுத்தனமாக பணம் வாங்கத் தொடங்கினான். இந்த ஊர் சுற்றிப் பயலிடம் அற்புதமான ஒரு ஆற்றல் இருந்தது. அதாவது 'மிமிக்ரி' செய்வது. அதாவது, ஒருவர் பேசுவதைப் போல், பேசுவது, நடிப்பது.

இந்தக் கலையை நல்லதற்குப் பயன்படுத்திக் கொள்ளாமல், போனில் அவன் அப்பா பேசுவதைப் போல பேசி எனக்கு உடல் நலம் சரியில்லை. என் பையன் வருவான் அவனிடம் இவ்வளவு பணம் கொடுத்து அனுப்புங்கள். அடுத்த மாதம் தந்து விடுகிறேன் என்றும், அவசர வீட்டுத் தேவை, இவ்வளவு பணம் என் மகனிடம் கொடுத்து அனுப் புங்கள் ஒரு வாரத்தில் கொடுக்கிறேன், சம்பளம் கொடுத்ததும் அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி பல பேரிடம் கை நீட்டத் தொடங்கி விட்டான். பெற்றோருக்கே கலங்கம் உண்டாக்க முனைந்து விட்டான்.

ஒருநாள் தன் தந்தையிடம் படித்த சுந்தரம் என்ற தொழிலதிபரிடம் போன் செய்து வழக்கம் போல் ஏமாற்றத் தொடங்கினான். பக்கத்து நகரத்தில் உள்ள அவரும், ஏமாந்து பணம் தர, வரச் சொல்லிவிட்டார்.

தொழிலதிபரின் வீட்டில் நுழைந்த இளம்பாரியின் நடவடிக்கைகளைக் கண்ட சுந்தரத்திற்கு உள்ளத்தில் கொஞ்சம் நெருடல் ஏற்பட்டது. இருந்தாலும்,

வெளியே காட்டிக் கொள்ளாமல் வேலை ஆட்களை கூப்பிட்டு டிபன், காபி எல்லாம் கொடுக்கச் சொல்லி விட்டு, "தம்பி, இங்கேயே இரு. பேங்கிற்கு போய் பணம் எடுத்து வந்து விடுகிறேன்," என்று சொல்லி வெளியில் புறப்பட்டார்.

வெளியில் வந்த தொழிலதிபர் சுந்தரம், காரில் ஏறி தன்னோடு படித்த நண்பர் சேகரைப் பார்க்கப் போனார். சேகரை கண்டு விஷயத்தை சொன்னார்.

"இதோ பார். இப்போ நீ போ. கொஞ்ச நேரத் திலே எனக்கு டியூட்டி முடிந்துவிடும். எல்லாம் சரி பார்த்துட்டு வந்துடுறேன்," என்று கூறி சேகர் வழிய னுப்பி வைத்தார்.

"வந்துட்டியா சேகர்," என்றார் தொழில் அதிபர் சுந்தரம்.

"வந்தது இருக்கட்டும் நம், ஆசிரியர் மகன் எங்கே?" என்ற படியே தலையில் இருந்த தொப்பியைக் கழட்டி மேஜை மீது வைத்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தார்.

"அடுத்த ரூமில் இருக்கான்...."

"நீ சந்தேகப்பட்டது சரிதான். நம்ம ஆசிரியருக்கு எதுவுமே தெரியாது. பல பேரிடம் இந்தப் பையன் இப்படி 'மிமிக்ரி' பண்ணி இவங்க அப்பா பெயரை கெடுத்திருக்கான். அவனுக்கு நான் சரியான பாடம் கற்பிக்கிறேன். கூட்டி வரச்சொல்," என்று இன்ஸ் பெக்டர் சேகர் சொன்னதும் பணியாளை அழைத்து கூட்டி வரச் சொன்னார்.

இளம்பாரி உள்ளே வந்தான்.

“வா தம்பி, இப்படி உட்கார்,” என்று சொல்லி விட்டு, “இதோ பார் நான் எப்படி உங்க அப்பாவிற்கு மாணவனோ, அதேபோல இன்ஸ்பெக்டர் சேகரும் மாணவர்தான்,” என்று அறிமுகம் செய்து வைத்து விட்டு ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தார்.

அதை மகிழ்ச்சியோடு இளம்பாரி பெற்றுக் கொண்டான். “அப்ப நான் புறப்படுகிறேன் சார். ரொம்ப நன்றி,” என்று சொல்லி எழுந்தான்.

“கொஞ்சம் உட்காரப்பா...” என்று சொன்ன இன்ஸ்பெக்டர் சேகர்,” அப்பா எந்த மருத்துவ மனையில் இருக் காங்க?” என்று கேட்டார்.

“சிவசக்தி ஆஸ்பத்திரியில் இருக்காங்க,” என்றான் இளம்பாரி.

“அப்படியா? நானும் அங்கேதான் போறேன். அந்த டாக்டரும் உங்க அப்பாகிட்டே படிச்சவருதான் வா போகலாம்....” என்றார் இன்ஸ்பெக்டர் சேகர்.

அதைக் கேட்டதும் இளம்பாரிக்கு நடுக்கம் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

“இல்ல சார். நீங்க நினைக்கிற மாதிரி சீரியஸ் ஒண்ணும் இல்ல. நார்மல்தான். நீங்க கேட்டதா வேணா அப்பாகிட்டே நானே சொல்லிடுறேன்,” என்றான் சாமார்த்தியமாக.

“தம்பி, நீ இவ்வளவு சாமார்த்தியமா இருப் பேன்னு நினைக்கல. அதே நேரத்துல எங்க தொழில்ல நான் எவ்வளவு சாமார்த்தியசாலின்னு உனக்குத்

தெரியாது. நான் இப்பதான் உங்க அப்பாவை - அதாவது எங்க ஆசிரியரை பள்ளியிலே பார்த்துட்டு வர்றேன். நீ இதுபோல 'மிமிக்ரி' செய்து பல பேரை ஏமாத்தி இருக்கிறேன்னு தெரிஞ்சுகிட்டேன். இப்ப நேரா என்னோட ஸ்டேஷனுக்கு வர்றே. உன்னை ஜெயில்லே போடுறேன்..." என்று இன்ஸ்பெக்டர் சேகர் சொன்னதுமே, "சார் நீங்க ரெண்டு பேருமே என்னை மன்னிச்சுடுங்க. இந்தாங்க உங்க பணம். இனி இது போல 'மிமிக்ரி' செய்து எங்க அப்பா பெயரை கெடுக்க மாட்டேன்," என்று சொல்லி அழுதான்.

"எங்க ஆசிரியர் பையனாச்சேன்னு இந்த முறை உன்னை மன்னிக்கிறோம். என்ன படிச்சி இருக்கே?" என்று அதட்டலோடு இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"பத்தாவது பெயில்..." என்றான்.

"வெட்கமா இல்லை இதைச் சொல்ல?" என்றார் இன்ஸ்பெக்டர்.

தலைகுனிந்து நின்றிருந்தான் இளம்பாரி.

"சுந்தரம்! இவன் ஊர் சுத்தறதாலேதான் இப்படி இருக்கிறான். அதனால உன் கம்பெனியிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்து உன் பாதுகாப்பிலேயே வச்சிக்கிட்டா என்ன?" என்று இன்ஸ்பெக்டர் சேகர் கேட்டார்.

"நானும் அதையேதான் நினைத்துக் கொண்டு இருந்தேன்," என்று சொல்லிவிட்டு இளம்பாரியிடம் கேட்டார். "தம்பி இங்கே வேலை செய்கிறாயா?" என்று.

"செய்கிறேன்," என்றான் இளம்பாரி.

"சரி...." என்று சொல்லிவிட்டு பணியாள் ஒருவரை அழைத்து, "இதோ பாருப்பா தம்பியை வண்டியிலே அழைச் சிட்டு போய் அவுங்க அப்பாகிட்டே சொல்லிட்டு இங்கே வேலைக்கு அழைச்சிகிட்டு வா. இந்தாப் பணம் போகும் போது இரண்டு பேரும் ஓட்டலில் சாப்பிட்டுட்டு போங்க," என்று நூறு ரூபாயைக் கொடுத்தார். பணியாள் வாங்கிக் கொண்டார்.

"தம்பி நாங்க ரெண்டு பேரும் அப்பாவைக் கேட்டதா சொல்லு..." என்றார் இன்ஸ்பெக்டர்.

"சரி சார்," என்றான் இளம்பாரி.

மனம் திருந்திய இளம்பாரி மகிழ்ச்சியோடு புறப் பட்டான். அதைக் கண்ட இன்ஸ்பெக்டரும், தொழி லதிபர் சுந்தரமும் மகிழ்ச்சி அடைந்தனர் என்று கிளி மிஸ் கதை சொல்லி முடித்தது.

"மிஸ், கதை ரொம்ப ரொம்ப ஜோரு....." என்றது சிட்டுக்குருவி.

"டீச்சர் 'மிமிக்ரி' ன்னரை என்ன?" என்றது மரங் கொத்தி பறவை.

"இந்த மனுஷப் பசங்களே பொய்தான் பேசுவானுங்களா? திருடதான் செய்வானுங்களா?" என்றது மயில்.

கிளி மிஸ் சிரித்துக் கொண்ட. பின்-

"அப்படியெல்லாம் இல்ல. வேலை செய்யாமல் இப்படி ஊர் சுத்துனா இப்படி திருடிதான் பிழைக்க வரும். ஒழுங்கா வேலை செய்தா வருமா என்ன?' நீங்க

எப்படி இருக்கப் போறீங்க?" என்று கிளி மிஸ் கேட்டதும்-

"நாங்க நல்லா படிச்சி, ஒழுங்கா வேலைக்குப் போவோம், என்றன எல்லாம்.

அதுசரி குட்டீஸ்! அப்போ நீங்க?

* * *



# 21. குவிஷ் டைம்

பள்ளி மணி அடித்ததும், மாணவ, மாணவிகள் அமைதியாக வகுப்பில் வந்து அமர்ந்தனர். "டியர் ஸ்டூடண்ட்!" என்றபடியே வகுப்பினுள் நுழைந்தார் ஆசிரியர் ராமன். அதேநேரம் பாலன், கண்ணன், மீனா உற்று பார்த்தனர். அவர்களின் பார்வையில் 'இன்று' உன்னை நாங்கள் வெற்றி கொள்ளப் போகிறோம் என்ற பொருள் இருந்தது.

"இன்றைய வகுப்பை நாம் இனிப்போடு ஆரம்பிக்கலாமா?" என்றார் ஆசிரியர் ராமன்.

"டியர் ஸ்டூடணட்! இதோ இனிப்போடு ஒரு புதிர். இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் என்று எந்த மாநிலம் அழைக்கப்படுகிறது? இதுதான் இன்றைய முதல் ஐ.க்யூ., ரெடி.... யார் வேண்டு மானாலும் விடை சொல்லாம்."

"நான் சொல்றேன் சார்-"என்று ரோஜா எழுந்தாள்.

"குஜராத் மாநிலத்தை..."என்றாள்.

"தவறு...அடுத்து..." என்றார் ஆசிரியர்.

"மத்திய பிரதேஷ்..."என்றான் அப்துல்.

"இல்லை...தவறு...அடுத்து..."

"உத்திரபிரதேசம்..." என்றான் கண்ணன்.

"வெரிகுட் கண்ணன்..." என்று ஆசிரியர் பாராட்டியதும், பாலன், மீனாவை ஏளனத்தோடு பார்த்துச் சிரித்தான். மீனா தலைகுனிந்து கொண்டாள்.

"நெக்ஸ்ட ஐ.க்யூவைப் பார்க்கலாமா?" என்றார்.

"எஸ் சார்!" என்றான் சுந்தர்.

"இந்தியாவில் முதன்முதலில் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர் யார்?" என்று கேட்டார் ஆசிரியர் ராமன்.

"நடிகர் திலகம் சிவாஜிக்கணேசன்!" என்றாள் விஜயா.

"சிவாஜி பட்டம் பெற்றார்தான். நீங்கள் கேள்வியை நன்றாகக் கவனிக்க வேண்டும். இந்தியாவில் முதன்முதலில் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர் யார்? என்பதுதான் நெக்ஸ்ட் யார் வேண்டுமானாலும் சொல்லலாம்."

"முதல் சட்டமன்ற உறுப்பினராகவும், விடுதலைப் போராட்ட வீராங்கனையாகவும் திகழ்ந்த முத்துலட்சுமி அம்மாள்."

"தவறு... நெக்ஸ்ட்"

பாலன் எழுந்தான். "அன்னை தெரசா அவர்கள் தான் பெண்களில் முதல்முதலில் பத்மஸ்ரீ பட்டம் வாங்கியவர்," என்றான்.

"வெரிகுட் பாலன், கூறியதே சரியான விடை. என் பாராட்டுக்கள்.

மாணவிகள் மத்தியில் ஒரே சலசலப்பு. மாணவர்கள் மத்தியில் ஒரே கலகலப்பு. பாலனை பெருமையோடு பார்த்தான் கண்ணன். நிலவைக் காணாத அல்லியாக, மீனாவின் முகம் சூம்பி இருந்தது.

"சரி, நாம் அடுத்த ஐ.க்யூவிற்கு போகலாம்," என்றார் ஆசிரியர் ராமன். "இப்போது போர் நடந்து

கொண்டு இருக்கிறது. அது சம்பந்தமாக ஒரு புதிர். செஞ் சிலுவை சங்கத்தை தோற்றுவித்தவர் யார்?" என்று கேட்டார்.

"நைட்டிங்கேள்..." என்றாள் ரோஜா.

"தவறு...நெக்ஸ்ட்...."

"சரோஜினி நாயுடு..." என்றாள் விஜயா.

"தவறு...அடுத்து..."

"காந்தியடிகள்..." என்றான் மதன்.

"இல்லை... தவறு... நெக்ஸ்ட்...." என்றார் ஆசிரியர் ராமன்.

மீனா எழுந்தாள். "இத்தாலியில் உள்ளது சால் பரினோ என்ற இடம். இங்கே நடந்த போரின் கொடுமை யைக் கண்டு மனிதநேயமிக்க ஹென்றி டுனாண்ட் என்பவரால் ஏற்படுத்தப்பட்டதுதான் ரெட்கிராஸ் சங்கம். அதாவது செஞ்சிலுவை சங்கம்," என்றாள்.

"வெரிகுட் மீனா. அடுத்த ஐ.க்யூவிற்கு போகலாம். இந்தியாவில் முதன் முதலாக பஞ்சாயத்துத் தேர்தல் எந்த ஆண்டு நடந்தது?" என்றார் ஆசிரியர் ராமன்.

"1947" என்றாள் ஆயிஷா.

"இல்லை. நெக்ஸ்ட்."

"1950" என்றாள் கலைவாணி.

"தவறு. நெக்ஸ்ட்"

"1952" என்றான் பாலன்.

“1926” என்றாள் மீனா.

“வெரிகுட் மீனா... மீனா சொன்னதே சரியான விடை என் பாராட்டுக்கள். அடுத்த ஐ.க்யூவுக்குப் போகலாம். உலகின் மிக மிக வறண்ட பகுதி எது?”

“கிம்மிதீவு....” என்றான் கண்ணன்.

“தவறு நெக்ஸ்ட்.”

“சிலி நாட்டிலுள்ள கலாமா என்ற இடம்தான். அங்கு ஒரு துளி மழை விழுந்ததை இதுவரை யாரும் கண்டது இல்லை.” என்றாள் மீனா.

“மீனா கூறியதே மிகச் சரியான விடை. என் பாராட்டுக்கள். ஸ்டூடண்ட்ஸ்! இன்னும் மூன்று நிமிடமே உள்ளது. அதற்குள் ஒரு புதிர் போடுகிறேன்... அமெரிக்காவிற்கு எதிர்பதம் என்ன?” என்றார் ஆசிரியர் ராமன்.

கண்ணனும், பாலனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“அமெரிப்பழம்!” என்றாள் ரோஜா.

“சரியான விடை. பாராட்டுக்கள் ரோஜா!”

“கடி ஜோக்ஸ்னா மட்டும் சரியா கடிச்சிடுவா சாரி கண்டுபிடிச்சிடுவா ரோஜா,” என்று பாலன் கடிக்க, வகுப்பே சிரிப்பொலியில் அதிர்ந்தது.

* * *

# 22. குருவியும் குரங்கும்!



அந்த நிலத்தில் நீண்டு வளர்ந்த பனை மரம் ஒன்று பலகாலமாக இருந்து வந்தது. அந்த மரத்திலே கணவனும், மனைவியுமான ஒரு ஜோடி தூக்கணாங் குருவிகளும் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தன.

அந்த இரண்டு குருவிகளும் இப்போது இறகுகள் படபடக்க வயிற்றிலும், வாயிலும் அடித்துக் கொண்டு அழுத படியே மரத்தைச் சுற்றிச் சுற்றி பறந்து வந்து கொண்டு இருந்தன.

இதை எல்லாம் ஆலமரத்தில் அமர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தது ஒரு குரங்கு.

“தம்பிகளே” இங்கே வாங்க” என்று அழைத்தது குரங்கு

"தம்பிகளே! ஏன் ரொம்ப நேரமா அழுது கிட்டிருக்கீங்க?" என்று குரங்கு கேட்டதும் மீண்டும் குருவிகள் அழத் தொடங்கின.

"இதோ பாருங்கள், செய்தியைச் சொல்லாமல் இப்படி அழுதால் எப்படி? என்ன துன்பம் என்று சொன்னால் தானே என்னால் ஏதாவது உதவ முடியுமா? என்று பார்க்கலாம்?" என்று குரங்கு கேட்டது.

"உண்மைதான் அண்ணே! நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டது முதல் இந்த பனை மரத்தில்தான் வீடு கட்டிக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறோம். இப்போது, அதோ நிற்கிறார்களே அவர்கள் இருவரும் கோடாலி, அரிவாளோடு வெட்ட வந்து இருக்கிறார்கள். எங்கள் அழகிய வீடு அழியப் போகிறது நாங்கள் எங்கே தங்குவோம்? அதை நினைத்து தான் நாங்கள் அழுகிறோம்..." என்று சொல்லிய ஆண் குருவி மீண்டும் அழுதது.

தம்பிகளே முன்பெல்லாம் மனிதர்கள் மரங்களை அன்போடு வளர்த்தார்கள். இப்போதோ, மரங்களை வெட்டு வதையே வேலையாக கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? அவர்களுடைய அறியாமையால்தான் நாட்டில் மழை பெய்வது குறைந்து, உணவுப் பொருள் உற்பத்தி நிறைவாக இல்லை. எங்கும் வறுமை சூழ்ந்து கொண்டு இருக்கிறது. இதை அவர்களுக்கு யார் கூறுவது? போகட்டும் இப்போது உங்கள் வீடு உங்களுக்கு வேண்டும் அவ்வளவு தானே?....'' என்று கேட்டது குரங்கு.

ஆம் அண்ணா! என்று கூறின குருவிகள்.

“அதோ அவர்கள் கோடாலியையும் அரிவாளையும் வைத்து விட்டு கிணற்றுப் பக்கம் போகிறார்கள். நான் அதற்குள் உங்கள் வீட்டை, அதோ தெரிகிறதே ஈச்சமரம் அதில் மாற்றி விடுகிறேன்,” என்றது.

“அது எப்படி அண்ணா? என்றது ஆண் குருவி.

“தம்பி, உன் வீட்டை அப்படியே பனை மரத்தில் இருந்து அவிழ்த்து, ஈச்சமரத்தில் கட்டிவிடுகிறேன். வீடும் சிதையாது, நீங்கள் கவலைப்படாமல் அங்கே வாழலாம்.” என்று குரங்கு சொன்னதும் குருவிகள் ஒன்றை ஒன்று மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டன.

“மிக்க நன்றியண்ணா!” என்று குருவிகள் கூறியதும் பறபறவென்று குரங்கு மரத்தில் இருந்து இறங்கி, பனை மரத்தில் ஏறி குருவிக் கூட்டை சிதையாமல் அவிழ்த்துக் கொண்டு ஓடி, ஈச்சமரத்தின் ஓலையில் கட்டியது. கூடு காற்றில் அழகாக அசைந்தது.

குருவிகள் இரண்டும் அதைக் கண்டு மகிழ்ந்தன.

ஈச்சமரத்தில் இருந்து இறங்கி வந்த குரங்கைப் பார்த்து, “அண்ணா உங்களது இந்த உதவியை நாங்கள் என்றுமே மறக்க மாட்டோம்,” என்று கூறின.

“தம்பி இது என்னால் ஆன சின்ன உதவி. நீங்கள் நலமுடன் வாழ்க. நான் வருகிறேன்,” என்று குரங்கு கூறிக் கொண்டு இருக்கும் போதே பனைமரத்தை அந்த இருவரும் வெட்டத் தொடங்கினார்கள்.

குருவிகள் இரண்டும் தங்கள் அழகிய வீட்டிலே புகுந்து உல்லாசமாக இருந்தது.

இரை தேடி விட்டு குருவிகள் இரண்டும் அவை களின் இருப்பிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன.

அப்போது இரண்டு மனிதர்கள் பேசிக் கொண் டே நடந்து வந்தனர். அவர்களின் பேச்சு குருவிகளின் காதில் விழுந்தன. அதைக் கேட்டதும் குருவிகள் பதறிப் போயின.

"எப்படியாவது நாம் அண்ணனைக் காப்பாற்ற வேண்டும். வா... விரைந்து போவோம்," என்று ஆண் குருவி கூறியதும் பெண் குருவி, "ஆமாம், ஆமாம்," என்ற படியே வேகமாக பறந்தன.

பறந்து வந்த குருவிகள் இரண்டும், "குரங் கண்ணா, குரங்கண்ணா," என்று அழைத்தபடியே ஆலமரத்தைச் சுற்றிச் சுற்றி பறந்து வந்தன.

ஆலமர பொந்து ஒன்றில் தூங்கிக் கொண்டு இருந்த குரங்கு மெல்ல கண் விழித்து வெளியே வந்தது.

அதைக் கண்ட குருவிகள் இரண்டும் அண்ணா ஆபத்து! என்று பதறின .

"என்ன தம்பி? யாருக்கு ஆபத்து? எதனால் ஆபத்து? பொறுமையாகச் சொல்லுங்கள்" என்றது குரங்கு.

"அண்ணா உங்களுக்குத்தான் ஆபத்து. நாங்கள் இருவரும் இரைதேடி விட்டு திரும்பி வந்து கொண்டு இருந்தோம். அப்போது இரண்டு பேர், இந்தக் காட்டிலே உள்ள பெரிய ஆலமரத்தில் ஒரு குரங்கு இருக்கிறது. அதை நாம் பிடித்து சர்க்கஸ் கம்ெனியில் கொடுத்தால் நல்ல பணம் கொடுப்பார்கள். அதற் காகத்தான்

உன்னைத் துணைக்கு அழைத்து வந்தேன்' என்றான்.

"அதற்கு இன்னொருவன் எப்படி அந்தக் குரங்கை பிடிப்பாய்?' என்று கேட்டான்.

"தன் கைப்பையைக் காட்டி, இந்தப் பையிலே பொரி, கடலை, பழம் எல்லாம் இருக்கு. இதை எல்லாம், ஆலமரத்திற்குக் கீழே ஒரு குழியைத் தோண்டி போட்டுவிட்டு, அந்தக் குழியைச் சுற்றி சுருக்குக் கயிற்றைப் போட்டு, அந்தக் கயிற்றின் முனை ஒன்றை கையில் பிடித்துக் கொண்டு நாம் ஒரு மறைவில் இருப்போம். குரங்கு குழியில் இருக்கும் பொருள்களைத் தின்ன ஆவலாக ஒடி வந்து குழியில் கையை விடும். அப்போது நாம் கயிற்றை இழுத்தால் குரங்கின் கை அதில் மாட்டிக் கொள்ளும், பிறகு என்ன? நமக்கு ஜாலிதான். பணம்தான்' என்று சொல்லி சிரித்தபடியே உன்னை பிடிக்க வந்து கொண்டு இருக்கின்றனர் என்று படபடப்போடு குருவி கூறியது.

அது கூறிய எல்லாவற்றையும் குரங்கு அமைதியாக கேட்டு விட்டு சிந்திக்கத் தொடங்கியது.

"அண்ணா, நாங்கள் உங்களுக்கு வரும் ஆபத்தைப் பற்றிக் கூறிக் கொண்டு இருக்கிறோம். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் அமர்ந்து இருக்கிறீர்களே! மனிதர்கள் தந்திரக்காரர்கள் அண்ணா! நீங்கள் அவர்களிடம் சிக்கிக் கொள்வீர்களோ என்று எங்களுக்கு பயமாக இருக் கிறது" என்றது பெண் குருவி கவலையோடு.

"இதோ பாருங்கள். மனிதர்கள் தந்திரக்காரர்கள் தான். பிறரை ஏமாற்றிப் பிழைப்பவர்கள்தான். அவர்

களையும் நாம் சமாளிக்க முடியும். அதைப் பற்றிதான் நான் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன்." என்று கூறியது குரங்கு.

"எப்படி அண்ணா அவர்களைச் சமாளிப் பீர்கள்?" என்று ஆண் குருவி கேட்டது.

"அதை உங்களுக்குச் சொன்னால் புரியாது. மறைந்து இருந்து இங்கேயே பார்த்துக் கொண்டு இருங்கள்." என்றது குரங்கு.

அதே நேரம், குரங்கைப் பிடிக்க வந்த அந்த இரண்டு மனிதர்களும் ஆலமரத்தடியில் வந்து நின்றனர்.

அவர்களைக் கண்டு குருவிகள் இரண்டும் ஒரு சின்ன பொந்தில் மறைந்து கொண்டன. குரங்கோ அவர்களைக் கண்டதும் அங்கும் இங்கும் கிளைகளில் தாவியது.

அதைக் கண்ட மனிதர்கள் "அண்ணே அதோ குரங்கு நமக்கு இன்னைக்கு நல்ல வேட்டை தான். என்றான் ஒருவன்.

"சரி நீ அப்படி இரு. நான் எல்லா வேலைகளையும் முடிக்கிறேன்." என்ற மற்றவன் கிடுகிடுவென்று குழி தோண்டி, பொரி, கடலை, வாழைப்பழம் எல்லாவற் றையும் ஒரு பேப்பரில் வைத்துவிட்டு குழியைச் சுற்றி மெலிதான ஒயர் ஒன்றினை சுருக்குப்போட்டு அதில் ஒரு முனை கயிற்றை கட்டி வைத்து, மறு முனை கயிற் றை தன் கையில் வைத்து நீளமாக கயிறை விட்டு மறைவில் ஒரு மரத்தடியில் இருவரும் மறைந்து கொண்டார்கள்.

அவர்கள் அந்த இடத்தை விட்டுப் போனதும் குரங்கு மெல்ல இறங்கி வந்து, குழியையும், அங்கு இருந்த பொருள் களையும் சுருக்குக் கயிற்றையும் கூர்ந்து கவனித்தது.

அங்கே ஒடிந்து கிடந்த ஆலம் கொம்பு ஒன்றை தாவி எடுத்தது. எடுத்தக் குச்சியால் மண்ணைப் போட்டு மறைந்து வைத்திருந்த சுருக் ஒயரை அப் படியே தூக்கி அப்புறம் வைத்து விட்டு, குழிக்குள்ளே கையை விட்டு அங்கே பேப் பரில் இருந்த பொருள் களை ஒரு நொடியில் எடுத்துக் கொண்டு, குருவிகள் அமர்ந்து இருந்த இடத்திற்குச் சென்றது. அவைகள் இரண்டும் வியப்போடு குரங்கைப் பார்த்தன.

அதே நேரம், "டே குரங்கு தப்பிச்சிடிச்சிடா" என்ற படியே இருவரும் மறைவில் இருந்து வெளியேவந்து, குழியிடம் வந்தனர்.

சுருக்கு ஒயர் அகற்றப்பட்டும், பொருள்கள் எடுக்கப் பட்டும் இருந்ததைக் கண்ட அவர்கள் கோபத்தோடு அன்னாந்து குரங்கைப் பார்த்தனர்.

அது அமைதியாக வாழைப் பழத்தை உறித்துத் தின்று விட்டு, தோலை அவர்கள் மீது வீசியது.

அதைக் கண்டு, "என்ன திமிரு பாருடா இந்தக் குரங் கிற்கு" என்று ஒருவன் திட்டினான்.

"ஏய் உன்னை நம்பி நான் வந்தேன் பாரு. வேறு ஏதாவது வேலைக்குப் போயி இருந்தாலும் சம்பாதிச்சி இருக்கலாம். உன்னால நான் கெட்டேன். நீயே இந்த உருப் படாத வேலையைப் பாரு. ஏய், இதோபாரு, நாம

மட்டும் தான் அறிவாளிகள் இல்லை. விலங்குகளும் அறிவாளிகதான். நான் வர்றேன்," என்று புறப்பட்டுப் போனான்.

"இருடா நானும் வர்றேன். இனி குரங்கு பிடிக்கிற வேலையும். கொக்கு பிடிக்கிற வேலையும் எனக்கு வேண்டாம். அதுக நம்மல கெடுக்கல. நாம ஏன் அதைக் கெடுக்கனும். நல்லா இருக்கட்டும் என்று சொல்லி கையில் இருந்த சுருக் குக் கயிறைத் தூக்கி எறிந்து விட்டு அவன் பின்னாலேயே நடக்கத் தொடங்கினான்.

மரத்தில் அமர்ந்து இதை எல்லாம் பார்த்துக் கொண் டிருந்த குருவிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"இதோ பாருங்கள், அங்கே என்ன பார்வை. அவர்கள் இனி இங்கே வரமாட்டார்கள். இந்தாங்க, பொரிகடலைச் சாப்பிடுங்கள்." என்று தன் கையிலிருந்ததை கொடுத்தது குரங்கு.

அவைகளும் அன்போடு வாங்கித் தின்றன.

ஒருநாள், தான் செய்த உதவிக்கு இன்று தன் உயிரையே காத்துக் கொடுத்த குருவிகளை நன்றியோடு பார்த்து மகிழ்ந்தது குரங்கு.

***

# 23. ஏர் உழும் நாய்கள்!



குட்டீஸ்களா...

உலகம் முழுவதும் உள்ள ஒரே பிராணி எது தெரியுமா? தெரியாதவங்க தெரிஞ்சுக்கங்க. அது நாய் மட்டும் தான்.

அந்த நாயைப் பத்தி ஓர் உண்மைக் கதையை உங்க கிட்டே சொல்லப் போறேன். நாய் மனிதனை விட பல மடங்கு நன்றி உள்ள ஜீவன். அதுதான் இந்த கதை யோட ஹீரோ இல்லியா? அதனால மட்டுமல்ல, உண்மையிலேயே அதன் பேரை 'பாய்'ன்னே அழைப்போம். ஓ.கே....

வளமான விவசாய கிராமம் அது. அந்த ஊர்ல ஒரு நல்ல விவசாயி இருந்தாரு. அவருகிட்டே நிலமும் இருந்துச்சு. இவரு மழைக்குக் கூட பள்ளிக்கூடப் பக்கம் போனதே இல்ல. ஆனா, எதைச் செஞ்சாலும் புது மையா செய்யணும்கிற எண்ணம் உள்ளவர்.

இவரு ஒரு நாளு என்ன செய்தார்ன்னா... தான் வளர்த்த நாய்களை ஏரில் பூட்டி தன் நிலத்தை உழுதார்....

"ஸ்டாப்...ஸ்டாப்... பிரதர்! நீங்க உண்மைக் கதை யின்னு சொன்னதால் 'டிவி' கூட பாக்காம ரொம்ப 'சின்சியரா' படிச்சு வைப்போமே, கேட்டு வைப்போ முன்னு.... நினைச் சேன்! நீங்க என்னடான்னா... உண்மை யிலேயே கதை உடு றீங்க.... என்று நீங்க முனகிறது என் காதுல விழாமலில்ல....

இதோ பாருங்க குட்டீஸ்! என் தெய்வங்கள் சத்தியமா சொல்றேன். நம்புங்க. இது உண்மை, உண்மைக் கதையின்றி வேறு இல்லை. இப்ப நான் சொல்றதை 'மைன் டிலே' வச்சிக்கிட்டு கதையை கேட்கணும்...

மத்தியப் பிரதேச மாநிலத்தில் 'சர்சீவா' என்னும் கிராமத்தில் தான் நாயைப் பூட்டி ஏர் உழுதார்.

பனிப்பிரதேசத்தில் எஸ்கிமோக்கள் நாய்கள் கட்டப் பட்ட சிறு பலகையில் அமர்ந்து கொண்டு

செல்வதை அறிந்த நமக்கு இது கொஞ்சம் வித்தியா சமாகத் தான் தோணும்.

இவரு என்ன செய்தாருன்னா, நாய்கள் இனத்திலேயே கொஞ்சம் வித்தியாசமான இரண்டு பெரிய நாய்களை வளர்த்தாரு.

நம்ம ஊர் பெரிய மனிதங்க வீட்டுல வளர்க்கிற நாய்க்கு அரை கிலோ கறி, ஒரு கிலோ கறின்னு போடுவாங்க.

ஆனா, இந்த மனிதர் வளர்த்த நாய் சுத்த சைவம். அப்படியே அவரு சின்னக்குட்டியிலே இருந்து பழக்கி யிருக் காரு. காய்கறிகள்னா நல்லா தின்னும்.

வீட்டிலே எல்லாரிடமும் பாசமா இருக்கும். தன்னை வளர்க்கும் தலைவருக்கோ மிகுதியாக மரி யாதை கொடுக்கும்.

எதைச் செய்தாலும் கொஞ்சம் புதுமையா சிந்திக் கிற ராம்நாத் என்ற அந்த விவசாயி, தான் வளர்த்த இரண்டு நாய்களின் உயரத்திற்கு ஏற்றபடி விசேஷமான ஓர் ஏர் ஒன்றை தயாரித்தார். அதுல அதைப் பூட்டி உழத் தொடங்கினாரு. அதைக் கண்ட ஊரே கூடி நின்னு பாத்துச்சு.

அந்த நாய்ங்க... சாரி 'பாய்ஸ்'ங்க காலையிலே இருந்து மாலை வரை, நிலத்தை உழுது முடித்த பிறகு அவைகளை சிறு வண்டி ஒண்றில் பூட்டி, அந்த வண்டியில் ராம்நாத் தோட மகன் ஏறிக் கொள்ள 'பாய்' கள் இழுத்துக்கிட்டு வீட்டுக்குப் போச்சு.

வீட்டுக்கு 'பாய்ஸ்ங்' க போனதும் அடேங்கப்பா! ஏகப்பட்ட வரவேற்பு நடந்துச்சு.

ராம்நாத்தோட பொண்டாட்டி அந்த ‘பாய்ஸ்ங் கள’ தேச்சுக் குளிப்பாட்டி கமகமக்கும் பவுடர்களை எல்லாம் போட்டு அமர்க்களப்படுத்திட்டார்.

ஏர் இழுக்கும் இந்த ‘பாய்ஸ்ங்கள’ப் பத்தி அதன் முதலாளி சொன்னது இது.

“என் செல்ல வளர்ப்புங்க, நான் இல்லாம சாப்பிடாது. ஓரிரு நாள் நான் வெளியூர் போனாக் கூட சாப்பிடாது. இதுல பிடிவாதமாக இருக்கும்.

“என் பிள்ளைங்களை விட ரொம்ப நேசிக்கிற இவை களைக் கொண்டு வருங்காலத்துல மேலும் பல புதுமையான செயல்களைச் செய்வேன்’னு சொல்வார்.

குட்டீஸ்ங்களா! நிச்சயமா இவரும், இந்த ‘பாய்ஸ்’களும் புதுமைகளைச் செய்வாங்க என்றே எனக்குத் தோணுது. உங்களுக்கு எப்படி?

❋ ❋ ❋

# 24. உதவி!

"அம்மா பள்ளிக்கு நேரமாச்சு. டிபன் ரெடி பண்ணிட்டியா?" என்றது குட்டி முயல்.

"இதோ கொண்டு வர்றேன்," என்றபடியே இரண்டு இட்லியை தட்டில் வைத்து சட்னி போட்டு எடுத்துக் கொண்டு வந்து, 'என் கண்ணுல்ல... எங்கே ஆ...காட்டு...' என்று தாய் முயல் சொல்ல. அதேபோல் குட்டி முயல் இட்லியைத் தின்று விட்டு அவசர அவசரமாக பள்ளிக்கு கிளம்பியது.

"இதோ பாரு கண்ணு. நீ பள்ளி விட்டு வரும் போது துணி தைக்கிற ஊசி ஒண்ணு வாங்கி கிட்டுவா. இந்தா காசு," என்று தாய் முயல் கொடுக்க, அதை வாங்கிக் கொண்டு குட்டி முயல் துள்ளித் துள்ளி பள்ளிக்கு ஓடியது.

முயல் குட்டி நாலாவது படிக்குது. படிப்பில் சுமார் தான். வால்தனத்தில் படுசுட்டி, எதிலும் அவசரம். அலட்சியம் முயல் குட்டியின் பள்ளிக்கூடம் ஆற்றைத் தாண்டி இருந்தது. ஆற்றைக் கடக்க மரப்பாலம் இருந்தது.

பள்ளி முடிந்ததும் பள்ளிக்குப் பக்கத்தில் இருந்த கடை ஒன்றில் முயல் குட்டி தன் தாய் சொன்னது போல் ஒரு ஊசியை வாங்கிக் கொண்டது. இன்று கோலியாட்டத்தில் கரடிக் கண்ணனை ஜெயித்து விட வேண்டும் என்ற எண் ணத்தில் குட்டி முயல் வேகமாக ஓடி வந்தது.

பாலத்தில்ஓடிவந்துகொண்டுஇருக்கும்போதுகையில் இருந்த ஊசி ஆற்றில் விழுந்துவிட்டது. குட்டி முயலுக்கு 'பக்'கென்று ஆனது மனது. 'ஆற்றில் தண்ணீர் குறைவுதான். இருந்தாலும் நமக்கு நீச்சல் தெரியாதே. இப்போது என்ன செய்வது,' என்றுவருத்தப்பட்டதுகுட்டிமுயல்.

அம்மாவை சமாளித்து விடலாம். அப்பாவிற்கு தெரிந்தால் உதை பின்னி எடுத்து விடுவாரே! காசு இருந்தாலாவது வேறொன்று வாங்கிச் சென்று விடலாம். இப்போது என்ன செய்வது? ஊசி இல்லாமல் வீட்டிற்கு போக முடியாதே, என்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு ஆற்றை பார்த்தபடியே கரை ஓரம் வந்து உட்கார்ந்தது.

அப்போது ஆற்றில் இருந்து கரையை நோக்கி ஒரு ஆமை வந்தது. வந்த ஆமை சோகமாக அமர்ந்து இருந்த முயலைப் பார்த்தது. "ஓட்டப்பந்தய வீரா என்ன சோகமா உட்கார்ந்து இருக்க? உன் நண்பர்களை எதிர்பார்த்து இருக் கியா?" என்று கேட்டது.

"என் நண்பர்களுக்காக நான் காத்து இருக்கல. எங்க அம்மா வாங்கிக்கிட்டு வரச் சொன்ன ஊசி, ஆத்துல விழுந்துடுச்சி. அது இல்லாம போனா எங்க அப்பா என்னை அடிச்சே கொன்னுபுடுவாரு. அதான் ஒண்ணும் புரியாம உட்கார்ந்து இருக்கேன்," என்று அழுதபடியே சொன்னது முயல்.

"இதுக்குப் போய் ஏன் கோழை மனுஷப்பசங்க மாதிரி அழுவுறே?" என்றது ஆமை.

"எங்க அப்பாகிட்ட அடிவாங்கப் போறது நீ இல்ல. நான்," என்றது மேலும் சோகத்தோடு.

“இதோ பார். முதல்ல கண்ணைத் துடை. எங்கே ஊசி விழுந்ததுன்னு சொல்லு. நான் எடுத்துத்தர் றேன்,” என்றது ஆமை.

மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்த முயல், ஊசி விழுந்த இடத்தை காட்டியது.

கரை ஏறிய ஆமை மீண்டும் ஆற்றுக்குள் குதித்தது. முயல் சொன்ன இடத்திற்கு மெல்ல மெல்ல நீந்திப் போனது. காலம் கடந்து கொண்டு இருந்தது. ஊசி எடுத்து வருகிறேன் என்று ஆற்றுக்குள் போன ஆமை மேலே வரவே இல்லை. ஒருவேளை ஆமை பொய் சொல்லி நம்மை ஏமாற்றி போய் விட்டதோ? என்று குட்டி முயல் நினைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தது.

தண்ணீரில் இருந்து மெல்ல தலையைத் தூக்கிப் பார்த்தது ஆமை. கரைக்கு வந்த ஆமை முயல் குட்டியின் பின்புறம் சென்று நின்று கொண்டு, “ஓட்டப்பந்தய வீரா! இதோ, இதுதானே உன் ஊசி?” என்று கேட்டு தன் ஓட்டின் மீது சொருகி வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தது.

“ஆமாம், ஆமாம் இதுதான். ரொம்ப நன்றி நண்பரே. இந்த உதவியை நான் என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன். உனது இந்த உதவிக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்?” என்று கேட்டது.

“நான் மனிதர்களைப் போல எதையும் எதிர் பார்த்து உனக்கு உதவி செய்யவில்லை. ஒருவருக்கு ஒருவர் உதவி புரிதலே பண்பாகும். அந்த அடிப் படையில்தான் செய்தேன்...” என்றது ஆமை அமைதியாக.

"உமது எண்ணத்திற்கு ரொம்ப நன்றி! இருந் தாலும் உனக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். அதனால் எனக்காக என் மன ஆறுதலுக்காக நீ ஏதாவது கேளு," என்று வேண்டிக் கேட்டுக் கொண்டதால் ஆமை சிறிது நேர ! இடை வெளிக்குப் பின் தன் எண்ணத்தை கூறியது.

"இதோ பார் ஓட்டப்பந்தய வீரா! இன்று நீ ஊசியைத் தொலைத்ததற்கு காரணம், உன்னுடைய அவசர புத்தியும், அலட்சிய புத்தியும்தான். இனி பொறுமையை கடைபிடி என்ன நான் சொல்றது சரிதானே?" என்றது ஆமை.

"உண்மைதான் நண்பரே! இனி நான் அதுபோல் செய்ய மாட்டேன். என் தவறை உணர்ந்து கொண்டேன்," என்று மனம் திருந்தி சொன்னது முயல்குட்டி.

"சரி உன் தவறை உணர்ந்து நீ திருந்தியதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். உன் விருப்பப்படியே என் விருப் பத்தை சொல்றேன். நான் உன்னைப் போல் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நான் உன்னைப் போல் பள்ளிக்கு வர முடியாது. அப்படியே வந்தாலும் என்னை கேலி பேசுவார்கள். அதனால்தான் பள்ளிக்கு வரவில்லை. அதனால், நீ உனக்கு தினம் நடக்கின்ற பாடங்களில் ஒன்றை எனக்கு சொல்லேன். அது உன்னால் முடியுமா?" என்று கேட்டது ஆமை.

"என்ன அப்படி கேட்டுட்டே. உன் விருப்பம் போலவே தினமும் நான் ஒரு பாடத்தை உனக்கு சொல்கிறேன்," என்றது முயல்குட்டி.

"மிக்க நன்றி, இன்று நடந்த பாடங்களில் ஒன்றைச் சொல்கிறாயா?" என்று கேட்டது ஆமை.

"ஓ! தாராளமாக சொல்கிறேன்," என்று கூறி-

'காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞானத்தின் மானப் பெரிது.' இந்தத் திருக்குறளை எங்க தமிழ் மிஸ் பரிமளா சொல்லி கொடுத்தாங்க. அந்தக் குறளுக்கு விளக் கம்..... துன்பம் வந்த காலத்தில் செய்த உதவி சிறிது ஆயினும் அது நில உலகத்திலும் மிகப் பெரிது ஆகும்' என்று முயல் குட்டி கூறியது.

"ஓட்டப்பந்தய வீரா! இப்ப நான் செய்த உதவியை வச்சி தானே இந்தப் பாட்டை சொன்னே?" என்றது ஆமை.

"நான் உண்மையைச் சொன்னேன்," என்றது முயல் குட்டி.

"சரி சரி... நாளை நாம் சந்திப்போம்... உன் தாய் தந்தை தேடுவார்கள் உடனே வீட்டிற்கு போ," என்றது ஆமை.

"மிக்க நன்றி நண்பரே!" என்றபடியே ஊசியை ஒரு புத்தகத்தின் நடுவே வைத்துக் கொண்டு துள்ளித் துள்ளி முயல்குட்டி ஓடியது.

குட்டீஸ்! அவசரமும், அலட்சியமும் ஒருவருக்கு இருந்தால் முயல்குட்டியைப் போல் அவதிப்பட வேண்டும் என்பதை இந்தக் கதையைப் படிச்சதும் தெரிஞ்சு இருப்பீங் கன்னு நெனக்கிறேன்...ஓ.கே.,

* * *

# 25. தங்க முட்டை!



அவன் பெயர் அழகன். ஏழை விவசாயி. அவன் சந்தை யிலிருந்து ஒருநாள் இரண்டு வாத்துக் குஞ்சி களை விலைக்கு வாங்கி வந்தான்.

அவைகளை அன்போடும், பாசத்தோடும் வளர்த்து வந்தான். தன் வேலை நேரம் போக அவை களோடே இருப்பான். அவைகளும் அவனை விட்டு எங்கும் போகாது.

நேரம் தவறாது தீனி கொடுத்து வந்தான். பருவம் வந்ததும் வாத்து முட்டை இட்டது. முட்டை தங்க நிறமாக இருந்தது. அழகனுக்கு ஒரே வியப்பு, பயம்.

பக்கத்து வீட்டிலிருந்த பரமசிவத்திடம் முட்டை யை எடுத்துக் கொண்டு ஓடினான். அவன் அதைப் பார்த்து விட்டு, "இது ஏதோ சாமி குற்றம். அதனால்

தான் வெள்ளையாக இருக்க வேண்டிய முட்டை இப்படி தங்க நிறமாக இருக் கிறது,” என்றான்.

அழகன் மேலும் பயந்தபடியே தெருக் கடைசியில் இருந்த பொற்கொல்லரிடம் முட்டையை எடுத்துக் கொண்டு ஓடினான். அந்தப் பொற்கொல்லர் நல்லவர். அதனால் தான் அவரிடம் ஓடினான்.

அழகனை அன்போடு வரவேற்ற அவர், அவன் கொடுத்த முட்டையை உரசி சோதித்துப் பார்த்து விட்டு, “இந்தாப்பா அழகன் நீ பெரிய அதிர்ஷ்டக்காரன். உன் வாத்து இட்டு இருப்பது தங்க முட்டை. நீ பணக்கார னாகப் போகிறாய்,” என்று மனதார வாழ்த்தி விட்டு, “இதை நீ கடை வீதிக்கு எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்கலாம்,” என்றும் கூறினார்.

அதன்படியே அழகன் தங்க முட்டையை எடுத் துக் கொண்டு, கடைவீதிக்குச் சென்று விற்றான். நல்ல விலைக்குப் போனது. அதிகப் பணத்தைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உடனே வாத்துக் களைப் பார்க்க வேண்டும் என்று அவனது நன்றி உள்ளம் நினைத்தது.

இப்படி தினமும் வாத்து தங்க முட்டையிட அதைக் கொண்டு போய் கடையில் விற்று வந்தான். சில நாட்களிலேயே பெரிய பணக்காரனாக ஆகிவிட்டான். பெரிய வீடு கட்டினான். திருமணம் செய்து கொண் டான். தங்க முட்டை யிடும் வாத்துகளுக்கு அவைகள் நீந்தி மகிழ வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு குளம் வெட்டினான். அவைகளுக்கு தினமும் நல்ல தீனி களைக் கொடுத்தான். ஏழைகளுக்கு உதவினான்.

அழகனின் உயர்வைக் கண்ட பக்கத்து வீட்டு பரம சிவம் பொறாமை கொண்டான். எப்படியாவது இவன் உயர்வை தடுக்க எண்ணினான். அதனால், அவன் வீட்டிற்கு வந்தான்.

பரமசிவத்தை அன்போடு வரவேற்றான் அழகன்.

"அழகா, தினமும் வாத்து முட்டையிட, அதை நீ வெளியில் எடுத்துக் கொண்டு போய் கடையிலே விற்று வரவேண்டும்? உன் வாத்தின் வயிற்றில் நிறைய முட்டைகள் இருக்குமே? நீ ஏன் ஒரே நாளில் அவற்றை அடைந்து, இன்னும் பெரிய பணக்காரனாக ஆகக் கூடாது?" என்று வஞ்சகமாக வலை விரித்தான்.

"ஆமாம், நீ சொல்வதும் சரிதான். அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான் அழகன்.

"ஒன்றும் பெரிதல்ல. உன் முட்டையிடும் வாத்தின் வயிற்றைக் கத்தியால் கிழித்தால் எல்லா முட்டைகளையும் நீ ஒரே நாளில் பெற்று விடலாம். இன்னும் பெரிய பணக் காரனாக ஆகிவிடலாம்," என்றான்.

நமக்கு இவ்வளவு வசதிகளைக் கொடுத்த நம் வாத்தை - வாயில்லா ஜீவனை கொல்ல வேண்டுமா?" என்று கலங்கினான். 'இவன் சொல்வதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது,' என்பதை உணர்ந்து சிந்தித்தான்.

"சரி, நண்பரே! நீ சொன்னபடியே நாளை செய்கிறேன்," என்றான்.

அதைக் கேட்டதும் பரமசிவம் மகிழ்ந்தான். "சரி நான் வருகிறேன்," என்றபடியே தன் வீட்டிற்குச் சென்றான்.

மறுநாள் வழக்கம் போலவே தங்க முட்டையை எடுத்துக் கொண்டு கடைவீதிக்கு அழகன் செல்வதைக் கண்ட பரமசிவம். "என்ன வாத்தை அறுத்து விட்டாயா?" என்று கேட்டான்.

வஞ்சகத்தை வஞ்சகத்தாலேயே வெல்ல வேண்டும் என்று இரவு முழுதும் சிந்தித்துக் கொண்டிருந்த அழகன், "நண்பா! நீ சொன்னது போலவே காலையில் வாத்தை அறுக்க இருந்தேன். ஆனால், இரவு என் கனவில் ஒரு தேவதை வந்து, "இருப்பதை விட்டு பறப்பதற்கு ஆசைப் படாதே; பேராசைப் பட்டு பின் புலம்பி தவிக்காதே, என்று சொன்னதும் தான் என் பேராசை எனக்குப் புரிந்தது. மேலும், நீ வாத்தை அறுத்தால், உன் பக்கத்து வீட்டில் இருக்கும் ஆண் ஒருவன் ரத்த வாந்தி எடுத்து இறந்து போவான்," என்று சொன்னது.

"நண்பா! பக்கத்து வீட்டில் இருக்கும் ஆண் நீதானே உன்னை இழக்க நான் எப்படி சம்மதிப்பேன். அதனால்தான் அந்த வாத்தை நான் அறுக்கவில்லை. நீ இப்போது சொல் நான் வாத்தை உடனே அறுத்து விடுகிறேன்," என்றான்.

முகத்தில் பயம் கப்பிய பரமசிவம், "வேண்டாம். வாத்தை அறுத்துவிடாதே," என்று கூறி புலம்பினான்.

உள்ளுக்குள் சிரித்தபடியே, தங்க முட்டையோடு கடைவீதி நோக்கிச் சென்றான் அழகன்.

* * *

# 26. செஸ்போர்ட்!

சுந்தர மணி தாத்தா வந்தாலே வீடு கலகலப்பாக இருக்கும். ஞாயிற்றுக் கிழமை என்பதால் பேரக்குழந்தைகள் எல்லோரும் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர்.

இப்போது என்ன செய்யலாம் என்பது போல் எல்லாரையும் ஏறிட்டுப் பார்த்தார்.

"தாத்தா ஏதாவது கதை சொல்லுங்களேன்," என்றான் மருதவாணன்.

குட்டீஸ் நான் இன்னைக்கு கதை சொல்லப் போறது இல்லை,"

"அப்ப என்ன செய்யப் போறீங்க," என்றாள் வான் நிலா.

நான் உங்க கிட்ட சில கேள்விகளை கேட்கப் போறேன். யார் சரியா பதில் சொல்றீங்களோ அவங்களுக்கு நான் வாங்கி வந்திருக்கிற செஸ்போர்ட்டை பரிசாக தரப்போறேன்."

தாத்தா சொன்னதை கேட்ட எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. அதே நேரம் அது யாருக்கு என்ற கேள்வியும் எழுந்தது.

"சரி கேள்விகளை கேளுங்க என்றான் மருத வாணன். எல்லா பழத்திலேயும் விதைகள் அதன் உள்ளே இருக்கும். ஆனா, ஒரே ஒரு பழத்திலே மட்டும் விதை வெளியே இருக்கும். அது என்ன பழம்?" என்றார் தாத்தா.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மருதவாணன் தன் பக்கத்தில் இருந்த கீரனிடம்

கிசுகிசுத் தான். 'தாத்தா என்னடா இப்படி கேட்கிறாங்க? பலா பழத்துல, மாம்பழத்துல, ஆரஞ்சு பழத்துல இப்படி எல்லா பழத்திலேயும் விதைங்க உள்ளே தானே இருக்கு. தாத்தா என்னடான்னா இப்படி கேட் கிறாங்களே..'

"அந்தப் பழம் கொடியிலே காய்க்குமா? செடி யிலே காய்க்குமா? மரத்திலே காய்க்குமா?" என்று கேட்டான் கீரன்.

தாத்தா சிரித்தபடியே, "சரி நீ கேட்டதாலே ஒரு க்ளூ தர்றேன். அது மரத்துல தான் காய்கும்."

"அப்படியா தாத்தா!" என்ற கீரன், கொய்யாப் பழம், மாதுளம் பழம், பப்பாளிப் பழம் என்று மரத்தில் காய்க்கும் பழங்கள் எல்லாவற்றையும் சொல்லிப் பார்த்தான்.

அப்படியே மருதவாணனும் சொல்லிக் கொண் டிருந்தவன், விடை தெரிந்த மகிழ்ச்சியில், "தாத்தா நான் சொல்றேன். அது முந்திரி பழம்," என்றான்.

"சரியாச் சொன்னே.." என்று பாராட்டினார். எல் லோரும் மருதவாணனை பொறாமையுடன் பார்த்தனர்.

"சரி இன்னொரு கேள்வி- ஒரு பறவை ஒரே இடத்தில் நின்று பறக்கும். அதே நேரம் உயரத்தில் இருந்து நேரா கீழே வந்து, அதே நேரம் அதே வேகத்தில் மேலேயும் பறக்கும். அது என்ன பறவை?" என்று தாத்தா கேட்டார். எல்லோரும் சீரியசாக சிந்திக்கத் தொடங்கினர்.

அந்த நேரத்தில், "தாத்தா அந்தப் பறவை என்ன தீனி தின்னும்?" என்று கேட்டாள் வான் நிலா.

"ஏய் குட்டீஸ்களா அதுதானே சொல்ல மாட் டேன். ஈஸியா கண்டுபிடிக்கப் பார்க்கிறீங்களா? இந்தத் தடவை அது முடியாது," என்று சொல்லிவிட்டு தன்

முன் மேஜையில் கிடந்த தினசரி பேப்பரைப் பார்க்கத் தொடங்கினார்.

"ஏய், வாணன், தாத்தா சொல்ற பறவை வெளி நாட்டிலே இருக்குமோ?" என்று சந்தேகத்தை எழுப் பினான் கீரன்.

"இருந்தாலும் இருக்குண்டா..." என்றான் விவேக்.

அடுத்து நொடியே கீரன் கேட்டான், "தாத்தா அந்தப் பறவை வெளிநாட்டுல இருக்கா, நம்ம நாட்டுல இருக்கா?" என்று.

மெல்ல சிரித்தபடியே தாத்தா சொன்னார். "நம்ம நாட்டிலேயே இருக்கு."

மீண்டும் சிந்திக்கத் தொடங்கினர்.

ஒவ்வொருவரும் தாங்கள் பார்த்த பறவைகளை மனக் கண்ணில் கொண்டு வந்து பார்த்தார்கள்.

"தாத்தா இதற்கும் நானே பதில் சொல்றேன்," என்றான் மருதவாணன்.

எல்லோரும் அவனையே பார்த்தனர்.

"தாத்தா, அது மீன் குத்திக் குருவி..." சரிதானே!" என்றான் மருதவாணன்.

"சரியோ சரி! இது எப்படி உனக்குத் தெரியும்?" என்றார் தாத்தா.

"மாமாவோடு குளத்துல குளிக்கப் போனபோது தான் பார்த்தேன். மீன் குத்திக் குருவி மீனைப் பிடிக்க தண்ணிக்கு மேலே ஒரே இடத்திலே இருந்து பறந்து கிட்டு இருந்துச்சு. கொஞ்ச நேரத்துல 'சர்'ன்னு நேரே கீழே தண்ணிக்குள்ளே மூழ்கி மீனைப் பிடிச்சுகிட்டே கீழே வந்தது போலவே மேலே பறந்துடுச்சு," என்றான்.

எல்லோரும் வியப்போடு அவனைப் பார்த்தனர்.

தாத்தா மகிழ்ச்சியோடு, மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

நூற்றுக்கு மேற்பட்ட பறவை இனம் இருக்கு. இதுல பறக்கத் தெரியாத பறவைகள் என்னென்ன?''

“இறகு இருக்குல்ல?'' வான் நிலா கேட்டாள்.

“இறகு இருக்கு. கால் இருக்கு. எல்லா உறுப்பும் மற்ற பறவைகளுக்கு இருக்குற மாதிரியே இருக்கு. ஆனா, பறக்காது!''

“என்ன தாத்தா நீங்க? இறகு இருக்கு, கால் இருக்கு பறக்காதுங்குறீங்க. எல்லாம் பறக்கத்தானே செய்யும்?''

“அதுதான் உண்மை குட்டீஸ்! நான் போய் பொடிடப்பாவை எடுத்துகிட்டு வர்றேன்...'' என்றபடியே எழுந்து போனார் தாத்தா.

“பச்சைக்கிளி பறக்கும். சிட்டுக்குருவி பறக்கும், காக்கா பறக்கும்....'' என்று சொல்லிக் கொண்டு வந்த விவேக்கைத் தொடர்ந்து, வான்நிலா “மயிலு பறக்கும், குயிலு பறக்கும், மைனா பறக்கும்.... இந்த தாத்தா என்னடான்னா இறகு இருக்கு பறக்காதுங்குறாரே! அப்படி என்ன பறவை அது? ஏய் வாணன் உனக்கு தெரியுமாடா?''

“ஏய் சும்மா இருடி.... நானே குழம்பி போயிருக்கேன். தாத்தா சும்மா சொல்ல மாட்டாங்க. ஆனா, சொல்றாங்களே....ம்...'' என்று சொல்லிக் கொண்டே சிந்திக்கத் தொடங்கினான்.

“ஏய். அப்படி ஏதாவது பறவைங்க இருக்கான்னு

தெரிஞ்சுக்க நம்மகிட்ட இப்படி தாத்தா கேட்டாலும் கேட்டிருப்பாங்க..." என்றான் கீரன்.

"டேய் தாத்தாவை அப்படி எல்லாம் நினைக் காதே. பெரிய அறிவாளி, நாமும் கொஞ்சம் சிந்திச்சுப் பார்ப்போம். தெரியாட்டி தெரியலன்னு சொல்லு வோம்," என்றான் வாணன்.

பொடியை மூக்கில் இழுத்தபடியே தாத்தா வந்து அவர்கள் முன்னே அமர்ந்து," என்ன பறவைகளைப் கண்டுப் பிடிச்சிட்டீங்களா?" என்று கிண்டலாக கேட்டார்.

"தாத்தா, நீங்களே சொல்லிடுங்களேன்," என்றாள் வான்நிலா.

"என்ன வாணன், கீரன் சொல்லிடவா? சொல்லிட்டா பரிசு தரமாட்டேன்- என்ன சம்மதமா?" என்றார்.

"வேண்டாம் தாத்தா முயற்சி செய்றேன்-" என்றான் மருதவாணன்.

"எல்லாப் பறவையும் சொல்லிப் பார்த்துட்டோம்- இன்னும் என்ன பறவை இருக்கு?" என்றான் கீரன்.

"டேய், நீ சும்மா இருடா-" என்று சொன்னவன் திடீர் என்று விழிப்புற்றவனாய்-

"தாத்தா, தாத்தா நெருப்புக்கோழி-" என்றான் வாணன்.

"வெரிகுட்...வெரிகுட்...சரி இன்னும் ஒரு பறவை?" என்று தாத்தா கேட்டார்.

"முயற்சி செய்றேன்," என்றான் மருதவாணன்.

அரைமணி நேரத்திற்கு மேலாக எல்லோரும் சிந்தித் துப் பார்த்தனர். அவர்களின் சிந்தனை வலையில் அந்தப்

பறவை சிக்கவே இல்லை. சோர்ந்து போனார்கள்.

ஒரு வழியாக பேப்பரை படித்து முடித்த தாத்தா கேட்டார். "குட்டீஸ்களா, என்ன தெரியலியா?"

"ஆமாம், தாத்தா," என்று எல்லாரும் கோரஸாகக் கூறினார்கள்.

"நானே சொல்றேன். பரிசும் தர்றேன். அந்தப் பறவை, பென்குவின், கேஸோவரி பறவை. இவை பறவை இனத்தை சேர்ந்தவைதான் என்றாலும் இம்மூன்று பறவைகளால் பறக்க முடியாது. ஆனா, வேகமாக ஓடக்கூடியது. இப்பப் புரியுதா? நீங்க எந்தப் பொருளைப் பார்த்தாலும் நுட்பமா பார்க்கணும். இப்படி பொது அறிவை நீங்க வளர்க்க தினமும் நூலகம் போய் பொது அறிவு நூல்களைத் தேடிப் பிடிச்சுப் படிக்கணும். இன்னைக்கு கேள்வி கேட்டதுல பதில் சொன்னது மருதவாணன்தான். அவனுக்கு செஸ்போர்டை பரிசா கொடுக்கப் போறேன்." என்று சொல்லிவிட்டு அறைக்குள் சென்று எடுத்து வந்து "இதுபோல நீங்களும் பரிசு வாங்கணும்," என்று சொல்லி மருதவாணனிடம் கொடுத்தார்.

அதைப் பெற்றுக் கொண்ட மருதவாணன், "இந்தப் பரிசு எனக்கு மட்டும் சொந்தமில்ல தாத்தா, எங்க எல்லோருக்குமே சொந்தம். வாங்க எல்லோரும் போய் விளையாடலாம்," என்று மருதவாணன் அழைக்க, எல்லோரும் உற்சாகமானார்கள்.

அவர்களின் ஒற்றுமையைக் கண்டு தாத்தா மகிழ்ந்து போனார்.

❋ ❋ ❋

# 27. ரங்கா!

கடை வீதியில் குரங்காட்டி வித்தைக்காட்டிக் கொண்டு இருந்தான். ஏகமாக கூட்டம் கூடியிருந்தது. ஒருவழியாக வித்தைகளை எல்லாம் செய்து முடித்த குரங்காட்டி, "இதோ பாருடா ரங்கா! அந்தத் தட்டை எடுத்துக்கிட்டுப் போயி முதலாளிங்ககிட்ட எல்லாம் காசு வாங்கிட்டு வாடா, என்றான்.

அதைக்கேட்ட குரங்கும் கையில் இருந்த குச்சி யைக் கீழே போட்டுவிட்டு, அங்கே கிடந்தத் தட்டை எடுத்துக் கொண்டு எல்லோரிடமும் நீட்ட தங்களால் இயன்றதை கூட்டத்தினர் போட்டார்கள்.

அதை எல்லாம் அப்படியே எடுத்துக் கொண்டு வந்து, தன்னை வளர்க்கும் குரங்காட்டியிடம் கொடுத்தது.

"ரங்கா! உனக்கு எல்லோரும் காசு போட்டு இருக்காங்க அதனால, நீ அவுங்களுக்கு நன்றி சொல்டா," என்று குரங்காட்டி சொன்னதும், அதன்படியே குரங்கும் வணக்கம் என்று கைகூப்பி கூறிவிட்டு ஒரு குட்டிக் கரணமும் போட்டதும், கூட்டம் மெல்ல விலகத் தொடங்கியது.

ஆனால், இவ்வளவு நேரமும் குரங்கின் செயல் களைப் பார்த்துக் கொண்டு ஒரு விலை உயர்ந்த காரில் இருந்தவர் மட்டும் போகவில்லை. அவர் மனத்திற்குள் புகுந்து கொண்டு குரங்கு பலவித வேலைகளை செய்து கொண்டு இருந்தது.

குரங்காட்டி அங்கிருந்த மர நிழலில் அமர்ந்து கொண்டு தட்டில் இருந்த காசுகளை எண்ணிக் கொண்டு

இருந்தான். குரங்கு அவன் முன்னே முதுகை சொரிந்து கொண்டு உட்கார்ந்து இருந்தது. காரில் அமர்ந்திருந்த அந்தப் பணக்காரர் காரைவிட்டு இறங்கி குரங்காட்டியிடம் வந்தார்.

"தம்பிக்கு எந்த ஊரு?" என்று குரங்காட்டியிடம் வந்து கேட்டார்.

குரங்காட்டி தன் ஊரைச் சொன்னான்.

"ஒரு நாளைக்கு உனக்கு எவ்வளவு காசு கிடைக்கும்?" என்று அந்த பெரிய மனிதர் கேட்டார்.

"நிலையா சொல்ல முடியாதுங்க. ஒரு நாளைக்கு ஐந்தும் கிடைக்கும், பத்தும் கிடைக்கும். சில நாளை யிலே நூறும் கிடைக்கும். அப்படி நூறு கிடைக்கும் போது எனக்கு பிரியாணிதான். என் ரங்கனுக்கு ஆப்பிள்தான்," என்று சொல்லி சிரித்து குரங்கை தடவினான்.

"இதோ பாரு, உன் குரங்கு இன்னும் விளையாட்டு எல்லாம் செய்யுமா?" என்று காரில் வந்த பெரிய மனிதர் கேட்டார்.

"இது என்னங்க விளையாட்டு, என் ரங்கனுக்கு தெரியாதது ஒண்ணுமே இல்லை. ஒரு தென்னந்தோப்பிலே புகுந்து ஒரு தேங்காயை கொண்டு வான்னா பத்து நிமிடத்துல கொண்டு வந்துடுவான். இந்த காசை கொண்டுபோய் என் மனைவிகிட்டே கொடுத்துவிட்டு வான்னா கொடுத்துவிட்டு வந்துடுவான். அவ்வளவு பெரிய அறிவாளி," என்று சொல்லி குரங்காட்டி குரங்கிற்கு முத்தமிட்டான்.

பெரிய மனிதரின் மூளை வேலைசெய்யத் தொடங்கியது.

"அப்படியா தம்பி, நீ தினமும் பிரியாணி சாப்பிடலாம்.

உன் ரங்கன் தினமும் ஆப்பிள் சாப்பிடலாம்,” என்றார்.

சிரித்தபடியே, “நீங்க என்ன ஐயா சொல்றீங்க?” என்றான் குரங்காட்டி.

“ஒண்ணுமில்ல தம்பி, என்னோடு வா, காரில் போகும் போதே எல்லாத்தையும் சொல்றேன்,” என்றார்.

காரில் போகும் போதா, நானும், என் ரங்கனும் காரில் போகப்போகிறோமா? என்று நினைத்ததுமே,குரங்காட்டிக்கு மனம் மகிழ்ச்சியோடு குரங்காய் தாவியது.

“நீங்க ஏதாவது சினிமா எடுக்குறீங்களா?”

“அதெல்லாம் ஒன்றும் இல்லப்பா, உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. உன் ரங்கன் செய்ற தொழில் பிடிச்சிருக்கு. என் தொழிலுக்கு நீங்க ‘செட்’டாவீங்க. அதனால, உங் களைக் கூப்பிடுறேன். மற்றதை எல்லாம் நாம காரில் போகும் போதே பேசிக்கலாம். உனக்கு நான், உன் செலவு, உன் ரங்கன் செலவு போக வாரம் ஆயிரம் ரூபாய் தருகிறேன்,” என்றார் பெரியவர்.

“ஆயிரம்ரூபாயா?” என்று வாய்பிளந்தான் குரங்காட்டி

“இதோ பார்,நான் சொல்றது போலநீங்கரெண்டுபேரும் செய்தால் அதற்கு மேலேயும் தருவேன்,” என்றார் பெரியவர்.

“வில்லங்கம் ஏதும் இருக்காதுங்களே?” என்று கேட்டான் குரங்காட்டி.

“இதுல வில்லங்கமும் இல்லே, லவங்கமும் இல்ல. நீயும், உன் ரங்கனும், குடும்பமும் நல்லா இருக்கணும்னு நெனச்சா என்னோடு வாங்க. இல்ல நான் வர்றேன்.” என்று பெரியவர் புறப்பட்டார்.

பெரியவர் சொன்ன ஆயிரம், குடும்பம் என்று சிந்தித்த குரங்காட்டி, “ஐயா, நீங்க காருல இருங்க, நான் இதோ,

வந்துடுறேன்," என்று சொல்லி கீழே கிடந்த துண்டுகளையும், குச்சி, தட்டுகளையும் எடுத்துக் கொண்டு, ரங்கனையும் அழைத்துக் கொண்டு, காரை நோக்கி புறப்பட்டான் குரங்காட்டி.

குரங்காட்டியையும், ரங்கனையும் ஏற்றிக் கொண்டு கார் புறப்பட்டது.

கார் பயணத்தின்போது, குரங்காட்டியும், ரங்கனும் என்ன செய்ய வேண்டும் என்பதை பெரியவர் தெளிவாகச் சொல்லிக் கொண்டே வந்தார்.

அதை எல்லாம் கேட்டுக் கொண்டு வந்த குரங் காட்டி, "அதாவது நீங்க கொடுக்கிற பொருளை நாங்க அதற்குரியவர்களிடம் சேர்க்கணும். அதுவும் நாங்க காரிலேயே போய், அவ்வளவு தானே ஐயா," என்றான் குரங்காட்டி.

"அதே... அதே தான் அப்பா. நீங்க வேற எந்த வேலையும் செய்ய வேணாம். அதுவும் தினமும் இந்த வேலை செய்ய வேண்டியது இல்லே. வாரத்திலே இரண்டு நாளு, மூன்று நாளுதான் வேலை இருக்கும். மற்ற நேரங்களிலே நீங்க ஆபிசிலேயே 'ஏசி' ரூமில் இருக்கலாம்," என்றார் பெரியவர்.

அதைக்கேட்ட குரங்காட்டிக்கு மகிழ்ச்சி தலைக் கேறியது.

"ஐயா! நீங்க இனிமே ஏதும் சொல்ல வேணாம். எங்களை நல்லா வைக்கணும்னு நினைக்கிறீங்க. அதுபோதும், மற்றதை நானும், ரங்கனும் பார்த்துக்கறோம்," என்றான் குரங்காட்டி.

'அப்பாடா, எப்படியோ ஒருவழியாக குரங்காட்டியை நம் வழிக்குக் கொண்டு வந்துவிட்டோம்' என்ற

மகிழ்ச்சியில் பெரிய மனிதர் தன் மாளிகையை நோக்கி காரை ஓட்டினார்.

பெரியவரின் ஆபிசில் இருபது பெண்களும், முப்பத்து ஏழு ஆண்களும் பணி செய்யும் பெரிய நிலையில் இயங்கிக் கொண்டு இருந்தது.

அங்கு இருந்த அனைவருமே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருந்தனர். யாரும் அங்கே அதிகமாக பேசவில்லை. ஆனால், ஏதோ செய்து கொண்டு இருந்தனர். சத்தம் போட்டுக் கூட யாரும் அங்கே பேசவில்லை.

இதை எல்லாம் பார்த்துவிட்டு குரங்கும், குரங் காட்டியும், பெரியவர் அறையில் நுழைந்தனர்.

பெரியவர் இருவரையும் அன்போடு வரவேற்றுவிட்டு, குரங்கிற்கு பிஸ்கெட்டும், குரங்காட்டிக்கு கூல்டிரிங்ஸ் கொண்டு வரச் சொல்லி இண்டர்காமில் பேசினார்.

சிறிது நேரத்தில் அதன்படியே வந்தன.

சாப்பிட்டு முடித்ததும் பெரியவர் பேசினார்." இதோ பார் தம்பி, இந்த சின்னப் பொட்டலத்தை, வசந்தம் ஓட்டலில் மூணாவது மாடியில் இருக்கும் என் நண்பரிடம், நேர் வழியில் செல்லாமல் பின்பக்கம் உள்ள பாத்ரூம் குழாய் வழியாக ஏறிச்சென்று ரங்கன் கொடுத்துவர வேண்டும். இன்று வேலை இவ்வளவுதான்," என்று சொல்லி நூறு ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றை அவன் முன்னே போட்டார்.

அதைப்பார்த்த குரங்காட்டிக்கு மயக்கமே வருவது போல் இருந்தது.

அவன், வாழ்நாளில் இரண்டு முறை தான் ஒற்றை நூறுரூபாய் நோட்டையே பார்த்தவன் அவன். ஒரு

கட்டு நூறுரூபாய் நோட்டைப் பார்த்தவனுக்கு மயக்கம் வராமல் இருக்குமா என்ன?

கட்டு நோட்டையே கண்மூடாமல் பார்த்துக் கொண்டு இருந்தவனிடம் பெரிய மனிதர், "தம்பி, இந்தப்பணம்நீசெய்யப்போறவேலைக்கு அட்வான்ஸ்தான். நீநடந்துகொள்கிறதைப் பார்த்து இன்னும் கூடும்," என்றார்.

நடப்பதும், கேட்பதும், கனவா? நனவா? என்று அறியமுடியாதவனாய் குரங்காட்டி அமர்ந்து இருந்தான்.

"என்ன தம்பி யோசனை?" என்றார்.

"ஒண்ணுமில்லீங்க ஐயா," என்றான்.

இண்டர்காமில்,யாரோடோ பேசினார்.சிறிது நேரத்தில், சூட், கோட் அணிந்த இரண்டு பேர்கள் வணக்கம் சொல்லியபடி அவர் முன்னே வந்து நின்றனர்.

"மாதவ், கேசவ், இன்று முதல் நம்மோடு நம் தொழிலில் இந்தத் தம்பியும் ஈடுபடப் போகிறார்.அதனால், நடை உடைகளை எல்லாம் மாற்றுங்கள். 'வசந்தம்' ஓட்டலுக்கு இன்று அனுப்ப வேண்டிய பொருளை இவரிடம் ஒப்படைத்து,செய்யச் சொல்லுங்கள்.அதற்கு முன்னே இடத்தை காண்பித்து விடுங்கள். இதில் ஏதும் மாற்றம் இருந்தால் பின், தொடர்பு கொள்கிறேன். இப்போது இவரை அழைத்துக் கொண்டு போய் குளிக்க வைத்து, முடிவெட்டி, உடை மாற்றிவிடுங்கள்," என்றார் பெரியவர்.

"உத்தரவு ஐயா!" என்றபடியே குரங்காட்டி யையும், குரங்கையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்றனர்.

குரங்கும், குரங்காட்டியும் காரில் சென்று பெரியவர் சொல்லிய வேலைகளை முறையாக செய்து

கொண்டு இருந்தனர். அவர்களுக்கு என்று தனியே அறையும் ஒதுக்கப் பட்டது. வேலை நேரம் போக நன்றாகச் சாப்பிட்டுவிட்டு உறங்கி ஓய்வும் எடுத்துக் கொண்டு இருந்தனர். குரங்கு சுதந்திரமாக அந்த ஆபீஸ் முழுதும் உலாவத் தொடங்கியது.

குரங்கும்தானும்,என்னதொழில்செய்கிறோம்என்பதை அறியாதவரையில்குரங்காட்டி மகிழ்ச்சியோடு இருந்தான்.

ஒருநாள்-

நாம் செய்வது தேசவிரோத கள்ளக்கடத்தல் வேலை போதைப்பொருள் கடத்தல்வேலைஎன்பதை அறிந்தபோது, குரங்காட்டிக்கு பயம்வந்துவிட்டது.

பணமும்வேண்டாம்.ஏசி அறை வாழ்வும்வேண்டாம். நிம்மதியாக வீதியில் வித்தைக் காட்டலாம் என்ற எண்ணத் திற்கு வந்துவிட்டான்.

இவனது மாற்றத்தை மாதவ்வும், கேசவ்வும் அறிந்து கொண்டு விட்டார்கள். அதனால் உடனே பெரியவரிடம் சொல்லஎண்ணினார்கள்.அவரைப் பார்க்கப்போனார்கள்.

“என்ன மாதவ்,கேசவ்?” என்றுகேட்டார்பெரியவர்.

“ஐயா! இப்போது குரங்காட்டியின் போக்கில் மாற்றம் தெரிகிறது. குரங்கிடம் எது கொடுத்து அனுப்பினாலும் அது என்ன? இது என்ன? என்று கேள்விகேட்டு அரிக் கிறான். இப்படியே நிலைமை போனால் நாம ஒருநாள் போலீசில் மாட்ட வேண்டிதான் வரும்,” என்றான் மாதவ்.

“ஆமாங்க, ஐயா! குரங்கு நம்மகிட்ட இருந்தா போதும், அவன் இனி நமக்குத் தேவையில்லை. அனுப் பிவிடலாம்...” என்றான் கேசவ்.

"அப்படியா? இவ்வளவு தூரம் வந்த பிறகு அவனை வெளியில் அனுப்பினால் நமக்கு நல்லது அல்ல. குரங்கைப் பிரிந்து அவன் போவான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை." என்றார்.

"பிறகு என்னதான் ஐயா செய்யலாம்?" என்று கேசவ் கேட்டான்.

"அதைத்தான் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். சரி, இன்று நீங்கள் எந்தப் பார்ட்டியைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டார்.

"தாய்லாந்தில் இரண்டு பார்ட்டி வந்து 'இன்பம்' ஓட்டலில் தங்கி இருக்காங்க. இன்று அவர்களுக்கு ஆறு வைரக்கற்கள் கொடுக்க வேண்டும்." என்றான் மாதவ்.

"அப்படியா? சரி, குரங்கை ஓட்டலுக்கு அனுப்பிவிட்டு, அவனை சிக்கலில் மாட்டாமல் முடித்துவிடுங்கள். இதோ பாருங்கள். அந்த ஓட்டலுக்கு பக்கம் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதனால் கவனமாக செயல்படுங்கள்." என்றார் பெரியவர்.

"அப்படியே ஐயா!" என்றபடியே வெளியே வர, அதுவரை கதவு ஓரம் உட்கார்ந்து இருந்த ரங்கன் அவர்கள் வருவதை அறிந்ததும் அடுத்த அறைக்குள் சென்று மறைந்து கொண்டது.

குரங்கின் கையில் வழக்கம்போல் வைரத்தைக் கொடுத்து, "ரங்கா, அதோ தெரியுது பார், பச்சைத் துணி போட்ட ஏழாவது மாடி அங்கேதான் நீ போகணும். போய் வா," என்று சொல்லியதும் வழக்கம்போல் ரங்கன் ஓட்டலை நோக்கி ஓடினான்.

மாதவ்வும், கேசவ்வும் ஒருவரை ஒருவர் பார்த்துக்

கொண்டனர். அப்போது–

“சார்! தாகமா இருக்கு. சோடா குடிச்சுட்டு வரட்டுமா?” என்றான் குரங்காட்டி.

“சரிபோயிட்டுஉடனேவாநாமரங்கன்வந்ததும்உடனே போகணும்,” என்றான்மாதவ்.

“சரி!” என்றபடியேகுரங்காட்டிபோனான்.

அவன் போனதும்.

“மாதவ்,அவன்வந்ததும்முடித்துவிடலாமா?” என்றான்.

“கேசவ்! அவசரப்படாதே. அதோ பார் போலீஸ்–குரங்கும் வரட்டும், அவனும் வரட்டும். இருவரையும் திரும்பி அழைத்துக் கொண்டு போகும்போது, கடற் கரைப் பக்கம் அவனைச் சுட்டு, தூக்கிப் போட்டுவிட்டுப் போய் விடலாம்,” என்றான் மாதவ்.

சோடா குடித்துவிட்டு குரங்காட்டி வந்து, “என்ன சாரு இன்னும் ரங்கன் வரலியா?” என்றான்.

“ஏனோ தெரியல இன்னும் காணோம். எப்பவும் இப்படி லேட்டாக்க மாட்டானே. இன்னிக்கு இன்னும் காணலியே,” என்றான் கேசவ்.

நீண்ட நேரம் ஆகியும் குரங்கு வராததால் மாதவ்வும், கேசவ்வும்தவித்துக்கொண்டு இருந்தனர்.

ஒருவழியாக குரங்கு ஓட்டல் பக்கம் இருந்து திரும்பி திரும்பி பார்த்தபடியே அவர்கள் இருந்த காரை நோக்கி வந்து, சிறிது தூரத்திலேயே நின்று கொண்டது. நின்று கொண்ட குரங்கு சுற்றும் முற்றும் பார்த்தது. அங்கு

நின்று இருவரைக் கண்டதும், மீண்டும் காரை நோக்கி மெல்ல நடக்கத் தொடங்கியது.

அதைக்கண்ட மூவரும் காரில் ஏறிக்கொண்டனர்.

அதேநேரம்-

அங்கே 'மப்டி' உடையில் வந்திருந்த இரண்டு போலீஸ்காரர்கள் காரோடு மூவரையும் பிடித்துக் கொண்டார்கள்.

அடுத்த நாள் பேப்பரில் செய்தி வந்தது...

குரங்கை வைத்து போதைப் பொருள்களை கடத்தியவர்களை, அதே குரங்கு போலீஸ்ஸ்டேஷனுக்குப் போய் பிடித்துக்கொடுத்தது.

நீண்ட நாட்களாக போலீஸ்காரர்களை ஏமாற்றி வந்த பழம் பெரும் கடத்தல்காரர்கள் என்பது புலனாய்வில் தெரிய வந்துள்ளது.

கடத்தல் கும்பல் தற்போது குரங்கால் காட்டிக் கொடுக்கப்பட்டு கம்பி எண்ணிக் கொண்டு இருக்கின்றனர்.

இந்த கும்பலுக்கு உடந்தையாக இருந்த குரங்காட்டி யையும் கைது செய்து மேலும் விசாரித்து வருகின்றனர்.

கடத்தல்காரர்களைப் பிடித்துக் கொடுத்த குரங்கு ரங்கனைப் பார்க்க நீதிமன்றத்தில் மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

❋ ❋ ❋

# 28. கண்ணன் வீட்டு காகம்!



கண்ணனும், அவன் மனைவி நீலாவும் அந்த வீட்டிற்கு குடிவந்தது முதலே அந்தக்காக்காவும் அங்கேவரத் தொடங்கி விட்டது. காலையில் சரியாக பத்து மணிக்கு வரும், மாலையில் சரியாக இரண்டு முதல் இரண்டு முப்பது மணிக்குள் வந்து விடும்.

வீட்டிற்கு எதிரே உள்ள பூவரச மரத்தில் வந்து காகம் அமர்ந்து கொண்டு குரல் கொடுக்கும் அந்தக் குரல் கேட்டு நீலா

வந்து இட்லி, தோசையோ, சாப்பாடோ வைக்கவில்லை என்றால் வாசல் படியில் வந்து அமர்ந்து கொண்டு குரல் கொடுக்கும்.

அந்த காக்கா சரியான டைம்க்கு வருவது நீலாவுக்கு ஆச்சரியமா இருக்கும்.

மழை காலங்களில் அது நனைந்தபடியே வரும்போது நீலாவுக்கு மனது வேதனையாக இருக்கும். கோடை காலங் களில் அதற்கு சோறு வைக்கும்போது, வீட்டுப் பக்கத்தில் ஒரு கிண்ணம் நிறைய தண்ணீரையும் வைக்கத் தவற மாட்டாள்.

இதெல்லாம், நீலாவின் கணவன் கண்ணனுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. அது வந்து மரத்தில் அமர்ந்தோ, வாசல்படியில் அமர்ந்தோ கத்தத் தொடங்கினால், 'ஏய் நீலா, அந்த சனியனை விரட்டி அடி எந்த வேலையும் செய்ய முடியலே. அது கத்துற கத்து தலைவலியே வந்துடும் போல இருக்கு,' என்று நீலாவின் கணவன் காகத்திற்கு மேல் கத்தத் தொடங்கி விடுவான்.

'அப்படியெல்லாம் அதைத் திட்டாதீங்க. அது வந்தா வீட்டுக்கு நல்லது. அது நம்ம கிட்டே காசு கேட்குதா? துணி கேட்குதா? ஏதோ பசிக்கும்போது இங்கே வருது. ஏதோ நம்ம வீட்டுல மிச்சப்படுறதப் போட்டா தின்னுட்டுப் போவுது. இதுக்குப் போயி ஏன் கோபப்படுறீங்க, என்று ஆறுதலாக பேசுவாள் நீலா.

'உன்னை திருத்த முடியாதுடி. என்னைக்காவது நகைங்களை கழட்டி வச்சிட்டு குளிக்கப் போகும்போது ஜன்னல் வழியா புகுந்து திருடிகிட்டுப்

போகும்போது தான் நீ திருந்தப் போறே,' என்பான் கண்ணன்.

இப்படி கண்ணனுக்கும், நீலாவுக்கும் அடிக்கடி 'போர்' நடக்கும்.

தன் இரண்டு வயது குழந்தையை காகம் வரும்போது தூக்கி வைத்துக் கொண்டு சோறு ஊட்டத் தொடங்குவாள் நீலா. குழந்தையும் காகத்தைப் பார்த்து கைக்கொட்டிச் சிரிப்பதைக் கண்டு நீலாவும் மகிழ்வாள்.

இந்த நிலையில் தான் நீலாவின் குடும்பம் அடுத்தத் தெருவிற்கு குடியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இருந்த வீட்டை விட்டுப் போவதில் நீலாவிற்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால், அந்த காகத்தை விட்டுப் பிரியப் போகிறோமே என்பதை நினைத்த போதுதான் நீலாவிற்கு அழுகையே வந்துவிட்டது.

இருந்தாலும் மனதைத் தேற்றிக் கொண்டு புதுவீட் டிற்குப் போய் சேர்ந்தாள். கடிகாரத்தில் பத்து மணி ஆகும் போதும், இரண்டு மணி ஆகும்போதும் ஏக்கத்தோடும் காகம் வந்துள்ளதா - அதன் குரல் கேட்காதா என்று வெளியே நீலா எட்டிப் பார்ப்பாள்.

இரண்டு நாட்கள் நீலாவிற்கு கவலையோடே கழிந்து போனது. மூன்றாவது நாள். நீலா குழந்தைக்குப் பால்கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்போது வெளியில் காகத்தின் குரல் கேட்டது.

நீலாவிற்கு பொறி தட்டியது போல் இருந்தது.

மணி யைப் பார்த்தாள். சரியாக பத்து, அதே குரல்..... அந்தக் காக்காதானா? அவள், உள்ளத்தில் எங்கிருந் தோ மகிழ்ச்சி ஓடிவந்து ஒட்டிக் கொண்டது.

பால் குடித்த குழந்தையை அப்படியே விட்டு விட்டு வெளியில் வந்து பார்த்தாள். அதே காகம் தான். கரைந் தப்படியே அவள் அருகில் வந்தது.

நீலாவிற்கு அதே காகத்தைக் கண்ட மகிழ்ச்சியில் கண்களில் நீரே வந்துவிட்டது. எப்படி இந்த வீட்டைக் கண்டுபிடிச்சே...?' அதனிடம் மனிதர்களிடம் கேட்பது போலவே கேட்டாள் நீலா.

"ஊரெல்லாம் சுற்றுகிற எனக்கு உன் வீட்டைக் கண்டு பிடிப்பது தான் கஷ்டமா என்பது போல், நீலாவின் கையை வழக்கம் போல் கொத்திவிட்டு வாசல்படியில் உட்கார்ந்து கொண்டது.

காகத்தைக் கண்ட மகிழ்ச்சியில் வீட்டினுள் சென்ற நீலா காலையில் சுட்ட இரண்டு இட்லிக ளோடும், கிண்ணத்தில் தண்ணீரோடும் வெளிப் பட்டாள்.

காக்கையிடம் இட்லிகளைப் புட்டுப் புட்டு போட் டாள். அதுவும் கொத்திக் கொத்தி தின்றது.

"அத்தான் அத்தான் செய்தி தெரியுமா? என் னோட காக்கா இங்கேயும் நம்மை தேடிகிட்டு வந்துடுச்சிங்க..." என்றாள் மகிழ்ச்சியோடு நீலா.

"வடை, பாயாசமெல்லாம் வச்சிப்போட்டியா?" என்று கேட்டான் கண்ணன்.

"இந்த கிண்டல்தானே வேணாங்கறது...?"

"என்னமோ ஓடிப்போன பிள்ளை திரும்பி வந்தது போலல்ல மகிழ்ச்சியோட சொல்ற? அந்த சனியன் இங்கேயும் வந்துடுச்சின்னு சொல்லு..." என்றான் வெறுப்போடு.

"அதோட பாசம் உங்களுக்குப் புரியாதுங்க. உங்க கிட்டே வந்து சொன்னேன் பாருங்க என்ன..."

"அதோ மூலையிலே செருப்புக் கிடக்கு எடுத்து அடிச் சுக்க." என்றபடியே உடைகளை மாற்ற அறைக்குள் நுழைந்தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை-

மதிய உணவை முடித்துக் கொண்டு தன் நண்பன் ஒருவனைப் பார்க்க கண்ணன் வெளியில் சென்றான். மின் சாரம் தடைபட்டு இருந்ததால், குழந்தையை காற்றுக்காக வாயில்படிக்கு நேராகத் தூங்க வைத்து விட்டு துணிகளை துவைக்க கிணற்றடிக்கு போயிருந் தாள் நீலா.

அப்போது காகம் வந்து வாயிற்படியில் அமர்ந்து குரல் கொடுத்தது. அதன் குரல் நீலாவிற்குக் கேட்காத தால் அவள் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

அதே நேரம் தூங்கிக் கொண்டு இருந்த குழந்தை யின் அருகே விஷப்பூரான் ஒன்று ஊர்ந்து வந்து கொண்டிருப் பதை தன் ஓரக் கண்ணால் காகம் பார்த்து விட்டது.

அவ்வளவுதான். எங்கே குழந்தையைக் கடித்து விடப் போகிறதோ என்ற எண்ணத்தில் ஒரே தாவலில்

அதைப் பிடித்து இரண்டு துண்டாக்கிப் போட்டது. துண்டாக்கிப் போட்ட பூரான் மேலும் துள்ளித் துள்ளி குழந்தையிடம் போகவே மேலும் காகம் அதைத் துண்டாக்கிக் கொண்டு இருந்தது.

அந்த நேரத்தில் வெளியில் சென்ற கண்ணன் வீட்டிற்கு வர, வாயில்படியில் குழந்தையிடம் காக்கா ஏதோ செய்து கொண்டிருப்பதைக் கண்டு - 'குழந் தையை காக்கா கொத்திக் கொண்டு இருக்கிறதோ' என்ற எண்ணத்தில் அதை அடிக்க ஓடிவந்தான்.

வந்தவன் குழந்தையின் ஓரம் துண்டாக்கப்பட்டுக் கிடந்த விஷப்பூரானைக் கண்டு துடிதுடித்துப் போய் குழந் தையைத் தூக்கிக் கொண்டு, காகத்தை நன்றிப் பெருக்கோடு பார்த்தான்.

காகம் அமைதியாக எதுவும் நடக்காதது போல் அமர்ந்திருந்தது. தன் கணவனின் குரல் கேட்டு அங்கே ஓடிவந்த நீலா, குழந்தையைத் தூக்கி வைத்து இருந்த கணவனிடம் என்னங்க?' என்றாள்.

கண்ணன் குழந்தை படுத்திருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

அங்கே நான்கு துண்டுகளாகி பூரான் துடித்துக் கொண்டு கிடந்தது.

"இந்தக் காக்கா மட்டும் இங்கே வராமல் இருந் திருந்தால் இந்த விஷப்பூரான் நம் பிள்ளையின் உயிரைப் போக்கி யிருக்கும்," என்று தான் வரும் போது காக்கா, பூரானைத் துண்டாக்கிப் போட்டதை மலைப்போடு சொன்னான்.

அதைக் கேட்ட நீலா, மகிழ்ச்சியோடு காக் காவைப் பார்த்தாள். அந்த பார்வையில் நன்றி இருந்தது.

இப்போதெல்லாம் கண்ணன் சாப்பிடும்போது, காக்கா விற்கு என்று ஒரு உருண்டை சோறு எடுத்து வைக்காமல் சாப்பிடுவது இல்லை. அதன் குரல் கூட இப்போது அவனுக்கு இனிமையாகவே இருந்தது.

குட்டீஸ்களா! நீங்கள் வேண்டுமானால் கண்ணன் வீட்டிற்கு காலை பத்து மணிக்கும், மாலை இரண்டு மணிக்கும் சென்றால் இப்போது கூட அந்த நன்றி உள்ள காகத்தைப் பார்க்கலாம்....?

❋ ❋ ❋

# 29. போலீஸ் ஸ்டேஷனுக்கு போன குரங்குகள்!

மேற்கு வங்கத்தில் 1996ம் ஆண்டு நடந்த உண்மை நிகழ்ச்சி!

தலைமை ஆசிரியர் தருமராஜனுக்கு ஒரு வாரமாக ஒரே தலைவலி. காரணம், பள்ளிக்கூடத்திற்கு அருகில் உள்ள மரங்களில் இருந்து கொண்டு குரங் குகள் செய்யும் சேட் டைகள்தான். குரங்குகள் மட்டுமா சேட்டைகள் செய்கின்றன. மரத்தில் உள்ள குரங்குகளைப் பார்ப்பதற்காக வகுப்பு நேரத்தில் கூட குழந்தைகள் அங்கே போய் விடுவதுதான்.

குரங்குகளைப் பார்த்தால் குழந்தைகள் சும்மா இருக் குமா என்ன? கல்லை எடுத்து எறிவது, இடுப்பில் சொரிந்து பல்லைக் காட்டி நிற்பதும் நடக்கத்தானே செய்யும்?

அப்படித்தான் ஒரு வாரமாக நடந்து கொண்டு இருக் கிறது. அதனால்தான், ஆசிரியர் தருமராஜன் டென்ஷன் ஆகி விட்டார். திடீரென்று எங்கிருந்தோ வந்த இந்த குரங்குகளால் பிள்ளைகளின் படிப்புக் கவனம் திசை திரும்பி விட்டதே. இதை எப்படி சரி செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினார்.

அவரின் சிந்தனையில், புகைவண்டி நிலையத்தின் ஓரம் தங்கியுள்ள குறவர்களின் நினைவு வந்தது.

தனக்குள் நினைத் துக் கொண்டார். இன்று பள்ளி முடிந்ததும் நேராக அந்தக் குறவர்களிடம் செல்ல வேண்டும். ஒருவனைப் பார்த்து, ஒரு நாட்டுத் துப்பாக்கியை நாளை பள்ளிக்கு எடுத்து வா, அதற்காக இந்தப் பணத்தை வைத்துக் கொள்,' என்று கூறி வர வேண்டும். அவன் துப்பாக்கியோடு வந்த பின், மரத்தில் உள்ள ஒரு குரங்கையாவது சுட்டுக் கொன்றால், அந்த பயத்தில் மற்றக் குரங்குகள் பயந்து எங்காவது ஓடி விடும் என்று எண்ணினார்.

அதன்படியே பள்ளி விட்டதும் குறவர்களை நோக்கிச் சென்றார். அடுத்த நாள் குறவன் ஒருவன் நாட்டுத் துப்பாக்கி யோடு தலைமை ஆசிரியர் தருமரா ஜனை சந்தித்தான்.

துப்பாக்கியை கோபத்தோடு வாங்கிக் கொண்டு பள்ளிக்கு அருகில் இருந்த மரத்திற்குச் சென்றார். மரத்தில் குரங்குகள் மகிழ்ச்சியோடு கிளைக்குக் கிளை தாவி விளை யாடிக் கொண்டு இருந்தன.

தலைமை ஆசிரியர் தருமராஜன் ஒரு குரங்கிற்கு குறி பார்த்துச் சுட்டார். அடுத்த நொடியே குரங்கு ஒரு முனகலோடு கீழே தொப்பென்று விழுந்தது. அதைக் கண்ட மற்றக் குரங்குகள் 'கீச் கீச்' என்று அலறத் தொடங்கின.

குரங்கைச் சுட்ட பெருமிதத்துடன் ஆசிரியர் தரும ராஜன், குறவனிடம் துப்பாக்கியைக் கொடுத்து விட்டு, விடுவிடு வென்று தன் அறைக்குச் சென்று விட்டார். சுட்டுக் கீழே விழுந்த குரங்கைச் சுற்றி

மரத்தில் இருந்த குரங்குகள் எல்லாம் இறங்கி வந்து அதைச் சுற்றி கத்திக் கொண்டு இருந்தன.

சிறிது நேரத்தில் - இறந்து போன குரங்கிடம் இரண்டு குரங்குகள் மட்டும் இருக்க, மற்ற குரங்குகள் எல்லாம் தெருவில் வேக வேகமாக ஓடின.

அப்படி ஓடிய நூற்றுக்கு மேற்பட்ட குரங்குகள், அவ்வூரில் இருந்த போலீஸ் ஸ்டேஷனின் மேலே ஏறி கத்தத் தொடங்கின. திடீரென்று இப்படி குரங்குகள் யாரையும் உள்ளேயும், வெளியேயும் போக விடாமல் முற்றுகை செய்த தைப் பார்த்த அந்தக் காவல் நிலையத் தின் அதிகாரி என்ன ஏது என்று காரணம் புரியாமல் திகைத்துப் போனார்.

குரங்குகளின் இந்தப் போராட்டத்திற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று மட்டும் அவருக்குப் புரிந்தது.

அதனால், மெல்ல ஒரு காவலரை ஊருக்குள் அனுப்பி செய்தி அறிந்து வர ஏற்பாடு செய்தார். அதன்படியே அவரும் சிறிது நேரத்தில் உண்மையை அறிந்து வந்தார்.

உடனே, சில போலீசாருடன் சென்று தலைமை ஆசி ரியர் தருமராஜனை, இன்ஸ்பெக்டர், வனவிலங்கு பாது காப்புச் சட்டப்பிரிவு 55வது விதியின்படி, கைது செய்து பள்ளியில் இருந்து கொண்டு வந்தனர்.

அதைக் கண்ட பிறகே வானரப் படைகள் முற்று கையிட்டு இருந்த போலீஸ் ஸ்டேஷனை விட்டு

*வெளியேறின. இந்தக் குரங்குகளின் செயலைக் கண்டு ஊர் மக்களே கூடிக் கூடி பேசிக் கொண்டு இருந்தனர்.*

*குட்டீஸ்! இந்த காலத்து குரங்குகளிடம் இருக்கின்ற சட்டம் பற்றிய அறிவைப் பார்த்தீர்களா?*

❋ ❋ ❋

# 30. மனைவியை கொன்ற நரி!

முத்துக்காடு என்பது அந்தக் காட்டின் பெயர். அந்தக் காட்டில் ஆலமரத்திற்கு அடியில் ஒரு பெண் நரியும், ஆண் நரியும் சோகமாக உட்கார்ந்து இருந்தன.

"இதோ பாருங்க நாம இந்த நாட்டிலே இனி இருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் நமக்கு எதிர்ப் பாயிடுச்சி. இங்கு இனி பிழைக்க வழியும் எனக்குத் தெரியலே..." என்றது பெண்நரி.

"ஆமாம், நீ சொல்றதும் உண்மைதான். காக்காவை ஏமாத்தினோம், மாட்டை ஏமாத்தினோம், கொக்கை, கோழியை ஏமாத்தினதோடு, சிங்கத்தையும் ஏமாத்தினோம். இப்படி எல்லோரையும் நாம ஏமாத்தியாச்சி. இனி யாரையும் ஏமாத்த நினைச்சா நம்மை உயிரோடையே குழிதோண்டி புதைச்சிடுவாங்க. அதனால, நாம் வேறு காட்டுக்குப் போய் பிழைப்பைத் தேடுறதுதான் நல்லதுன்னு எனக்குப்படுது," என்றது ஆண்நரி.

"காசு இல்லாம அங்கேயும் எப்படி போய் பிழைக்கிறது?" என்று கேட்டது பெண் நரி.

"நானும் அதைப்பத்திதான் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். என் அறிவை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு வழியை கண்டுபிடிச்சிருக்கேன்." என்று கூறி பெண் நரியின் காதோடு விஷயத்தை சொல்லியது.

ஆண் நரி சொன்ன யோசனையை கேட்டு அதிர்ந்தது பெண் நரி.

விடியற்காலை ஐந்து மணி-

ஆண் நரி ஓவென்று பெண் நரியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதது. அழுகுரல் கேட்டு பக்கத்து வீட்டில் இருந்த காகம் வந்து,'' என்ன ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது.

“நான் என்னத்தச் சொல்ல. இரவு நல்லா சாப்பிட்டா, வயித்த வலிக்குதுன்னு சொன்னா, மருந்து போட்டுகிட்டு படுன்னு சொன்னேன். படுத்தா, காலையிலே பார்த்தா செத்து போயிட்டா. நான் என்ன செய்வேன் தம்பி....” என்று காகத் தைக் கட்டிப்பிடித்து நரி அழுதது.

“சரி அண்ணா, என்ன செய்றது. நாம கொடுத்து வச்சது அவ்வளவுதான்,” என்று தன் வருத்தத்தைக் கூறியது காகம்.

“தம்பி, கையிலே ஒரு காசு இல்லியே, எப்படி எடுப் பேன், முடிப்பேன்?” என்று கேவி கேவி அழுதது.

“நீ கவலைப்படாதே. உனக்கு வேண்டிய பணத்துக்கு நான் ஏற்பாடு செய்றேன். இப்போ நான் கொஞ்சம் பணம் கொண்டு வர்றேன்,” என்று சொல்லி காகம் சென்றது.

அதற்குள் நரி பக்கத்துத் தோட்டத்தில் இருந்து பூக் களை பறித்து வந்து பெண் நரியின் மேலெல்லாம் போட்டது. காகம் அவசரமா பறந்து வந்து ஆண்

நரியிடம் நூறு ரூபா யைக் கொடுத்து, "இதை செல வுக்கு வைத்துக் கொள். மற்ற ஏற்பாடுகளை நான் போய் செய்கிறேன்..." என்று சொல்லி பறந்து போனது.

சிறிது நேரத்தில் காட்டிலுள்ள விலங்குகளும், பறவை களும் பெண் நரி இறந்ததை அறிந்து, ஆண் நரிக்கு ஆறுதல் கூறி வந்தன. வந்த எல்லாவற்றிடமும் காக்கையிடம் சொன் னதையே சொல்லி அழுதது ஆண் நரி.

அதைக்கேட்ட விலங்குகளும், பறவைகளும் தங்க ளால் இயன்ற பணங்களை கொடுத்துப் போயின.

இரவு நெருங்கி விட்டது, இன்னும் இறந்த நரியை எடுக்காமல் இருப்பது நல்லதல்ல என்பதால் பக்கத்து வீட்டில் உள்ள ஓநாய், மான், சிறுத்தை எல்லாம் வந்து 'பாடி'யை எடுக்கலாம் என்று ஆண் நரியிடம் பேசின.

"அன்பானவர்களே! உங்கள் நல்ல உள்ளத்திற்கு நன்றி! நான் ஒன்று கூறுவேன். யாரும் தவறாக எண்ணிக் கொள்ளா தீர்கள். என் மனைவி இறந்தால் அவள் ஊரில்தான் புதைக்க வேண்டும் என்று, எங்கள் திருமணத்தின் போதே சத்தியம் வாங்கி இருக்கிறாள். அதனால், இரவு 12 மணிக்கு அவளோட தாய், தந்தை இங்கே வந்த பிறகு இவளை அவர்கள் ஊருக்கு தூக்கிச் சென்று புதைக்க வேண்டும். அவர்களுக்கு செய்தியும் சொல்லி அனுப்பிவிட்டேன். அவர்கள் காரை எடுத்துக் கொண்டு வந்து விடுவார்கள். அதனால், நீங்கள் எல்லோரும் அவரவர் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்.." என்று வேண்டிக் கேட்டுக் கொண்டது.

"அப்படியா! சரி உன் இஷ்டம் போல் செய்து கொள். போகும் போது உதவி ஏதாவது தேவை என்றால், குரல் கொடு, நாங்கள் வந்து உதவுகிறோம்," என்று சொல்லிவிட்டு போயின.

ஆண்நரியும், பெண் நரியும், மட்டும் வீட்டில் இருந்தன. சிறிது நேரம் சென்ற பின் ஆண் நரி மெல்ல வெளியில் சென்று பார்த்தது.

எல்லா விலங்குகளின் வீடும் தாழ்போடப்பட்டு இருந் ததைக் கண்டது.

எல்லாம் தூங்கிவிட்டன என்பதை உணர்ந்த நரி வேக வேகமாக வீட்டிற்குள் வந்து கதவைத் தாழ்போட்டு விட்டு, காலையில் இருந்து விலங்குகளும், பறவைகளும் கொடுத்த பணத்தை பெண் நரியின் தலைப்பக்கம் போட்டு இருந்ததை எல்லாம் எடுத்து எண்ணத் தொடங்கியது. ஆண் நரிக்கு ஒரே மகிழ்ச்சி. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தது.

மெல்ல பெண் நரியை எழுப்பியது. பெண் நரியோ பசி மயக்கத்தில் அப்படியே தூங்கிக் கொண்டு இருந்தது. ஒரு வழியாக அதை எழுப்பியது.

"செத்தது போல் நீ நடித்தது போதும். இதோ பார், எல்லோரையும் ஒட்டு மொத்தமாக ஏமாற்றி பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதித்து விட்டேன். இந்தப் பணத்தைக் கொண்டு அடுத்து ஊருக்கு நாம் சென்று பிழைத்துக் கொள்வோம்," என்றது ஆண் நரி.

"உண்மையிலேயே பெரிய ஆள்தான் நீங்க. இரவு இந்த ஐடியாவைச் சொன்னபோது, எங்கே மாட்டி

விடுவோமோ என்று பயந்தேன். நீ கில்லாடி என்பதை நிரூபித்து விட்டாய்...” என்று ஆண் நரியை முத்தமிட்டது.

“இப்போது நாம் கொஞ்சுவதற்கு நேரமில்லை. விடிவதற்குள் நாம் மேற்கு பக்க ஏரிக்கரை வழியாக ஓடிவிட வேண்டும்,” என்று அவசரப்படுத்தியது.

ஆண் நரியும், பெண் நரியும் பேசிக் கொண்டதை எல்லாம் அதன் வீட்டுக் கூரையில் உட்கார்ந்து இது வரைக்கும் கேட்டுக் கொண்டிருந்த ஆந்தை வேகமாக பறந்து சென்றது.

பொழுது விடியும் நேரம்-

ஆண் நரியும், பெண் நரியும் மகிழ்ச்சியோடு, பத்தா யிரம் ரூபாய் பணத்தோடு ஏரிக்கரை வழியே நடந்து கொண்டிருந்தன.

ஏரிக்கரை ஓரம் இருந்த ஆலமரத்தின் மறைவில் காட்டில் உள்ள விலங்குகளும், பறவைகளும் மறைந்து இருந்தன. திடீர் என்று நரிகள் வந்த வழியில் யாவும் கூடி நின்றன. நரிகள் இரண்டும் செய்வது அறியாது திகைத்துப் போய் நின்றன.

“டேய் பொடுசுங்களா, சிலரை சில காலம் ஏமாத்தலாம். பலரை பலகாலம் ஏமாத்தலாம். எல்லோரையும் எப்போதும் ஏமாத்த முடியாது...” என்று சொல்லி ஆண் நரியை ஒரு போடு போட்டது ஓநாய்.

“அண்ணே, எங்களை மன்னிச்சுடுங்க...” என்றது ஆண் நரி.

"உங்க திருட்டுத்தனத்தை எல்லாம் யார் சொன்ன துன்னு பாக்குறீயா? நான்தான் சொன்னேன்..." என்றது ஆந்தை.

"அரசே! இந்தக் கயவர்களை இனியும் நாம் மன்னிக்கக் கூடாது. இந்த ஏரியில் தூக்கிப் போட்டுச் சாகடிக்க வேண்டும். ஆணையிடுங்கள், தூக்கி வீசி எறிந்து விடுகிறேன்–" என்று தும்பிக்கையை ஆட்டியது யானை.

"பொறுமையாக இருங்கள். ஏய் நரிப்பயலே! நீ என்ன சொல்கிறாய்?" என்றது சிங்கராஜா.

ஆண்நரியும், பெண் நரியும், சிங்கத்தின் காலில் விழுந்து, "அரசருக்கு அரசே! அன்புள்ளம் கொண் டவரே! எங்களை மன்னியுங்கள். இனி நாங்கள் எந்த நிலையிலும் பொய் சொல்ல மாட்டோம், உழைக்காமல் பிறரை ஏமாற்றி பிழைக்க மாட் டோம். வயல் வேலை செய்தாவது, கல், மண் சுமந்தாவது பிழைத்துக் கொள்கிறோம் எங்களை நம்புங்கள்," என்று கூறி அழுதன.

"குடிமக்களே! இந்த முறை எனக்காக மன்னி யுங்கள். இனியும் தவறு செய்தால் இவர்களை நானே வெட்டி ஊர் நடுவே புதைத்து விடுகிறேன்," என்றது சிங்கம்.

"அரசே! உங்களின் வேண்டுகோளை ஏற்கி றோம்," என்றது புலி.

"இந்தப் பொய்க்காரர்களை நம்பி, எல்லோரி டமும் சென்று உதவி செய்யும்படி வேண்டினேனே.

பாவிகள், அரசே! அவர்கள் ஏமாற்றி வசூல் செய்த பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்..." என்று காகம் சிங்கத்திடம் கேட்டது.

ஆண் நரி தன் கையில் இருந்தப் பணப்பையை சிங்கத் திடம் கொடுத்துவிட்டது. அதை வாங்கிய சிங்க ராஜா, "கல்வி அமைச்சரே! இதை நம் நாட்டில் உள்ள கல்வி நிலைய வளர்ச்சிக்காகப் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு பள்ளிக்கும் 'டிவி'யும், கம்ப்யூட்டரும் வாங்கிக் கொடுங்கள். நம் குழந்தைகள் எதிர்கால அறிவியல் உலகில் முதன்மையானவர் களாக வளர ட்டும்..." என்று கூறி கல்வி அமைச்சர் சிறுத்தை யிடம் கொடுத்தது.

குட்டீஸ்களா! இந்தக் கதையைப் படித்த பின் நீங்கள் யாரும், எப்போதும், யாரையும் ஏமாத்த நினைக்க மாட்டீங் கன்னு நினைக்கிறேன். சரிதானே! ரொம்ப மகிழ்ச்சி.

***